2018

# மத்திய வணிகம்




யாழ். மத்திய கல்லூரி
வணிக மாணவர் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வணிகம்

பொதுசனநூலகம்
07 NOV 2018

## இதழ் - 10

# 2018

**இதழாசிரியர்கள்**

செல்வன் அ.அகிர்தன்
செல்வன் ஷெ.சாருஜன்

8859(P)
PV

## வணிக மாணவர் ஒன்றியம்
## யாழ். மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLLEGE SONG

Wet the ground and wind opposing,
Just ten minutes yet to play;
Play up central, no reposing
On the gains of yesterday,
Now's the time for combined action;
Pass the ball from man to man:
Never Selfish play nor faction,
Proved worthwhile since sports began,

Chorus:

Central rally for the school then
Take the field with one accord:
keep your courage cool and clean then,
Central's flag must never be lowered.

On the field of life when striving,
keep your honour true and bright,
Play up central ever thriving;
On the fruits of grace and light;
For your comrades of the old days,
Scattered far though they may be;
For your school and for her true praise,
live in service glad and free.

Chorus:

Central rally for the school then
Take the field with one accord:
keep your courage cool and clean then,
Central's flag must never be lowered.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மாணவர் மன்ற கீதம்

**இராகம் :- பெகாக்** **தாளம் :- ஆதி**

மத்திய வணிகத் துறையது மிளிர
நித்தமும் உழைக்கும் மன்றம் (மத்தியின்)

நவத்தார் காஸர் கந்தர் என்போர்
தவத்தால் வளர்ந்தனர் நாளும் (மத்தியின்)

உவப்பாய்த் துறையது உயர்வாய் ஓங்கிட
ஒற்றுமை பற்றுடன் வளர்ப்போம்
துவங்கும் பல்துறை கணனிப் பொறிமுறை
துலங்கிட கற்று நாம் ஒய்வோம்
(மத்தியின்)

நவத்தார் - கலைப்புலவர் - நவரத்தினம்
காஸர் - முன்னாள் அதிபர் பி.ரி. - காஸ்
கந்தர் - முன்னாள் உபஅதிபர் - கந்தசாமி
(மத்தியின்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. சி.க. எழில்வேந்தன் B.A. [Hons], Dip. in Ed, Dip. in School Management, M.Ed, SLPS I, SLEAS III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வணிக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "மத்திய வணிகம்" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். மாறிவரும் உலகில் மாற்றத்திற்குள்ளாகும் துறையாக வர்த்தகத்துறை அமைந்துள்ளது. அன்றாடம் மாறிவரும் புதுவிடயங்களைத் தன்னகத்தே உள்வாங்கி அத்தியாவசியமான துறையாக மிளிர்கின்றது. இத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களிற்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதுடன் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கான முயற்சியாளர்களையும் தோற்றுவிக்கின்றது. அதுமட்டுமல்ல இத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பலவகையான தகவல்கள், புதுமைத்திறன்கள், தொழில் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் அனைத்தையும் தாங்கியவாறு மலர் அமைவது மிகவும் சிறப்பானது.

எனவே அறிவு பெருகிட ஞாலம் விளங்கிட, புகழ்ந்திட ஒளிபரப்பி ஆண்டு தோறும் மலரும் "மத்திய வணிகம - மலர் 10" புதுமணம் வீசிப் பிரகாசித்திட ஆசி கூறி மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம்**
பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணக் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச்செய்தி

யாழ் மத்திய கல்லூரியின் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் வர்த்தக மன்றத்தினூடாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு அனுபவத்தையும். சிறந்த ஆளுமைப்பண்பினையும் பெற்று வருகின்றார்கள். வர்த்தக மன்றம் கல்லூரியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஏனைய மன்றங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, முன்னுதாரணமாக செயற்பட்டு வருகின்றது என்று கூறுவதில் பெருமை அடைகிறேன். அதற்காக மாணவர்களை வழி நடத்திவரும் பொறுப்பாசிரியர் திருமதி சி.பாலகிருஸ்ணன் அவர்களுக்கும், தலைமைப் பொறுப் பேற்ற மாணவன் செல்வன் கோ.சாயிராம் அவர்களுக்கும், அவர்களுடன் செயற்பட்டுவரும் சகல உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டை தெரிவிப்பதுடன் பிரிவுத் தலைவர் திரு. இ. இராஜேஸ்வரன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

உண்மையிலேயே இன்றைய வியாபாரச்சூழல், கல்வி, தொழில்வாய்ப்பு, பதவி உயர்வு என்பவற்றினால் ஆதிக்கம் செலுத்தியுள்ள இக்காலகட்டத்தில் மாண வர்கள் அதனை எதிர்கொண்டு வெற்றிபெறும் வண்ணம் பயிற்றப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இதற்கு வர்த்தகதுறைக் கல்வி பெரும் வாய்ப்பாக அமைகிறது. இத்தகைய யதார்த்தங்களை பாடமாக கற்றுத்தேறுவதற்கு இத்தகைய மன்ற செயற்பாடுகள் களமாக அமைகிறது. கடந்த ஒரு தசாப்த காலமாக மன்றம் புத்துயிர்ப்புபெற்று நற்பணியாற்றுவது பாராட்டுக்குரியது. இம் மலருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**திரு. சி. க. எழில்வேந்தன்**
கல்லூரி அதிபர்
B.A (Hons) Dip in Ed.
Dip in School Management'
M.Ed, SLPS I, SLEAS III

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

202 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரிய கலாச்சாரத்தினை தன தாக்கி வடமாகாணத்திற்கே பெருமை சூட்டும் மத்தியதாயின் மைந் தர்களான வணிகமாணவர்களினால் வெளியிடப்படும் மத்தியவணிகத்தின் 10வது இதழினை வெளியிடும் வணிகமாணவர் ஒன்றியத்தினையும், அதன் செயற்பாடுகளையும் வாழ்த்துவதனையிட்டு பெரும் உவகை கொள்கின்றேன்.

வணிகத்துறையில் தேசிய சாதனைகளை தனதாக்கியதுடன், பெருமை மிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், மிகஉயர்ந்த வங் கித்துறை அதிகாரிகளையும் உருவாக்கிய மத்தியதாயின் மடிகளில் தவழ்ந்த வணிகத்துறை மைந்தர்களில் நானும் ஒருவன் என்ற உரிமையுடன் இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


மத்தியின் வணிகத்துறை மாணவர்களினால் வெளியிடப்படும் மத்தியவணிகம் இதழினையும் , மாணவர்களின் செயற்பாடுகளையும் வாழ்த்துவதுடன், இவ்விதழ் எதிர்காலத்திலும் வருடந்தோறும் சிறப்பாக வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரி வித்துக் கொள்கின்றேன்.

பா.பிரதீபன் (பழையமாணவன்)
மாகாண சிரேஷ்ட இணைப்பதிகாரி,
இலங்கை சமூக பாதுகாப்புச் சபை.
வடக்கு,கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி அதிபரின் வாழ்த்துச் செய்தி



கற்றல் என்பது வாழ்வை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் உதவும். மனிதன் கற்கும் ஆற்றலில் உச்சநிலையில் உள்ளான் மனித மேம்பாட்டை, சமூக அபிவிருத்தியை மையப்படுத்தி திட்டங்களை வகுத்து செயற்படும் எந்த நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட நியாயமற்றவற்றைக் களைந்து நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைக்கும்.

மாணவனின் சுய ஆற்றலை விருத்திசெய்து சமூகத்திற்குப் பொருத்தப்பாடான நற்பிரஜையாக உருமாற்றும் பொறுப்பு பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. அறிவாற்றலும் அனுபவக்கற்கையுமே மாணவனை முழுமைபெறச் செய்யும். சமநிலை ஆழுமையை மேம்படுத்தும். அந்தவகையில் கல்விக்கு சமாந்தரமாக இணைப்பாடக் கலைத்திட்டம் பாடசாலையில் நடைமுறையில் உள்ளது. கல்வியினால் பெற்றுக் கொள்ளமுடியாத ஆற்றல் உடைமைகளையும் திறன்களையும் இணைப்பாடக் கலைத்திட்டதினூடாக பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணித் தேசிய பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. இணைப்பாடவிதானத்திற்கு முன்னுரிமை வழங்கும் பாடசாலையாகவும் இது விளங்குகின்றது. அந்த வகையில் பல்வேறு மன்றங்கள் இக்கல்லூரியில் இயங்கி மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

வணிக மன்றத்தின் செயற்பாடுகள் மத்திய கல்லூரியின் வணிகத்துறையை மிளிரவைக்கின்றது. வணிக மன்றத்தினால் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் வெளியிடப்படும் மத்திய வணிகம் இதற்கொரு சான்றாகும். வணிக மன்றத்தின் செயற்பாடுகள் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு பெரிதும் துணை செய்கின்றன. கல்வி முறைமையிலும் வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன.

வணிக மன்றத்தின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கவை. பொறுப்பாசிரியர் செயற்குழுவினர் வாழ்த்துதலுக் குரியவர்கள். பகுத்தலைவர் இக் கைங்கரியங்களுக்கு உறுதுணையாக செயற்படுகின்றார். இவர்களது சேவைகள் மத்திய கல்லூரிக்கு வளமூட்டுவனவாக தொடரவேண்டும் என்ற விருப்பத்துடன் எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

அறம் செய விரும்பு

**நா.விமலநாதன்**
உதவி அதிபர் (கபொ.த. உயர்தரம்)

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்த்தகத்துறை பகுதித் தலைவரின் ஆசிச் செய்தி

வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் மத்திய வணிகம் என்ற சஞ்சிகை அண்மைக்காலத்திலிருந்து தொடர்ச்சியாக வெளிவருவதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய உலகில் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு வணிகத்துறையானது இன்றியமையாத ஒன்றாக மாறி வருகின்றது. மாணவர்கள் ஒவ்வொருவரும் உழைப்பினை மட்டும் உடமையாக கொள்ளாது. உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் உடமையாக்கி தொழில் முயற்சியாளனாக மாறுவதற்கு பொருளாதார வணிக, கணக்கியல் சார்ந்த விடய அறிவு முக்கியமானது ஆகும். இத்தகைய கருத்துக்களை வெளியிட்டு மாணவர்களின் அறிவுத்திறனையும், தலைமைத்துவ பண்பினையும் வளர்ப்பதற்கு இச்சஞ்சிகைகள் சிறந்த வேலை வாய்ப்பினைப் பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை பேண உதவும்.

தமது விடாமுயற்சியினால் பல்வேறு இடரான சூழ்நிலையிலும் தளராது செயற்பட்டு இந்த இதழை நல்ல முறையில் வெளியிட உதவிய மன்றப் பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவச் செல்வங்களினதும் முயற்சியை பாராட்டுவதோடு அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.

இப்பணி மென்மேலும் சிறக்க என் ஆசியினை நிறைமனதோடு வழங்குவதுடன், மத்திய வணிகமே நீ என்றும் அணையாத தீபமாய் வாழ்ந்திட வளர்ந்திட மென்மேலும் வளர்ச்சியுற்று பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

**R.இராஜேஸ்வரன்**
பகுதித் தலைவர், வணிகப்பிரிவு
யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து



யாழ் மத்திய கல்லரியின் வணிக மன்றத்தினராகிய நாம் மத்திய வணிகம் எனும் இதழினை 10ஆவது தடவையாகவும் மன்றப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் தொடர்ச்சியாக இரண்டாவது முறை வெளியிட்டு வைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அறிவுப் பசியினை போக்க வல்லது சிறந்த நூல்கள். ஒருவரிடம் எவ்வளவு தூரம் நூல்கள் தொடர்பான தேடுதல் காணப்படுகின்றதோ அந்தளவு தூரம் அவருக்கு கல்விச் சமூகத்தில் மதிப்பு கிடைக்கின்றது. இன்றைய இளைய சமுதாயம் நவீன தொழினுட்ப கருவிகளை கையாள்வதிலேயே நாட்டம் கூடதலாக இருந்தாலும் மாணவர்களின் பல்வேறு தேடல்கள் சுய சிந்தனை, அறிவு என்பற்றின் அடிப்படையில் பல ஆக்கங்களை இதழுக்காக தந்திருந்தார்கள். எல்லாவற்றையும் பதிப்பில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக அதில் சிறந்த ஆக்கங்களை இவ் இதழ் தாங்கி வந்துள்ளது.

வணிகத் துறையானது க.பொ.த. உயர்தரத்தில் மூன்றாவது முக்கிய துறையாக இருந்தாலும் இன்று கணிதத் துறை கற்று உயர்நிலைக்கு வந்தவர்களும் வணிகத் துறைசார் உயர்கற்றை நெறிகளை தொடர்ந்து பல்வேறு நிறுவனங்களில் தலைமைத்துவம் தாங்குபவர்களாக இருக்கின்றனர். கடந்த வருடம் எமது வணிகதுறை மாணவர்கள் உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றதுடன் பல மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி கிடைத்துள்ளதுடன் நிதி நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பு கிடைத்துள்ளமையும் கல்லூரிச் சமூகத்துக்கு பெரு மதிப்பைத் தந்துள்ளது.

மேலும் இவ் இதழிலினை தொடர்ந்து வெளியிட்டு வைக்கவேண்டுமென்ற கல்லூரி அதிபரின் தொடர்ச்சியான ஊக்கப்படுத்தலும் வழிகாட்டலும் பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர், வர்த்தகப் பிரிவு ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் எமது அன்புக்குரிய மாணவர்களின் அயராத உழைப்பும் ஒத்துழைப்பின் மூலமே இவ் இதழ் சிறப்புற வெளி வருகின்றது. அத்துடன் இவ் இதழ் சிறக்க ஆசிச் செய்திகள் தந்துதவிய கல்விசார் பெருந் தகைகள் விளம்பரங்களை வழங்கிய பெரு உள்ளங்கள் சிறப்புற அச்சிட்டு தந்த பதிப்பகத் தினர் மற்றும் ஏனையவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

நன்றி

**திருமதி சி.பாலகிருஷ்ணன்**
வணிகமன்றப் பொறுப்பாசிரியர்
யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றத் தலைவரின் உள்ளத்திலிருந்து....

சாதாரண தரத்திலிருந்து உயர்தரத்திற்கு செல்லும் மாணவர்களை ஐந்து துறைகள் வரவேற்கின்றன. இவ் ஐந்து துறைகளினுள்ளும் வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமாக விளங்குவது வணிகத்துறை ஆகும். அதற்கு அமைவாக யாழ் மத்திய கல்லூரியின் வணிக மன் றத்தின் 10ஆவது இதழாக " மத்திய வணிகம்" இதழ் வெளியிடப்படு வதனை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விதழானது சகல வணிகத்துறை மாணவர்களுக்கும் ஆக்கபூர்வமான பல பயனுள்ள தகவல்களை வழங்கும் என நம்புகிறேன்.

அந்த வகையில் இவ் "மத்திய வணிகம்" இதழின் வெளியீட்டிற்கு பெரும் ஒத்துழைப்பு நல்கிய அதிபர், பிரதி அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், மன்றப் பொறுப்பாசிரியர்கள், வணிகத்துறை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், வணிகத்துறை மாணவர்கள், மலர்க்குழு மற்றும் இவ் நூல் வெளியீட்டிற்கு உதவிய தோளோடு தோள் நின்று உழைத்த சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின் றேன்.

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

**கோ.ஸாஜீராம்**
வணிக மன்றத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து

தமிழ் அன்னை தாழ் பணிந்து! ஈழ நாட்டின் தனக்கென தனித்துவமாய் விளங்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே எத்தனை மன்றங்கள், கழகங்கள் இருப்பினும் ஓர் முன்மாதிரியாகத் திகழும் வணிக மாணவர் மன்றமானது இன்று ஓர் வளர்ச்சிப் பாதையிலே மத்தியின் பெயர் விளங்கப் பயணித்து வருகிறது.

எமது கல்லூரியின் வணிக மாணவர் ஒன்றியத்தினால் உருவான இம் மலரானது வெறுமனே வணிகத்துறை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பல்வேறு துறை சார்ந்தோருக்கும், சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில் தரமான ஆக்கங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இம் மலரானது வணிகத்துறை பற்றி ஆர்வமுள்ள பலரின் எதிர்பார்ப்புக்களை திருப்திபடுத்தும் என நம்புகின்றோம்.

மேலும் இவ் 10வது சிறப்பிதழை வெளியிடுவதற்கு அயராது உழைத்த எமது மன்றப் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் வணிக மன்ற மாணவர்களுக்கும் மற்றும் ஆக்கங்களை தந்துதவிய உள்ளங்களுக்கும் விளம்பர அனுசரணையாளர்களுக்கும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி, ஆசிச்செய்தி வழங்கிய அனைவருக்கும் மலர்க்குழுவின் சார்பாக இதழாசிரியர்கள் என்ற வகையில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். இந் நூலில் ஏதேனும் குறைகள் காணப்படுமாயின் பெருமனதோடு அவற்றைப் பொறுத்துக் கொள்வதோடு தங்களின் குறை நிறைகளை மலர்க்குழுவிற்கு தெரியப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இனி வரும் காலங்களிலும் “மத்திய வணிகம்” எனும் இவ் இதழானது சிறப்பாக வெளிவருவதற்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

**அ.அகிர்தன்**
**ஷெ.சாருஜன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரி வணிகப் பிரிவு ஆசிரிய ஆளணியினர்

1. வணிகக் கல்வி

| | |
|---|---|
| 1. திருமதி சி.பாலகிருஸ்ணன் | B.B.A (F.M. Spc) M.Com, PGDE (merit) |
| 2. திரு.றொகான் விக்ரர் | B.B.A (Hons) in Financial mgf, PGDM |
| 3. திரு.இ.இரமணன் | B.Scin Agric, MBA |

2. பொருளியல்

| | |
|---|---|
| 1. திரு.இ.இராஜேஸ்வரன் | B.Com, PGDE, MED |
| 2. செல்வி சி.தயாளினி | B.A, M.A |
| 3. செல்வி த.புண்ணியமூர்த்தி | B.A (Hons), DIP IN EDU, MED (MERIT) |

3. கணக்கீடு

| | |
|---|---|
| 1. திருமதி சி.சௌந்தரராஜா | B.Com, PGDE |
| 2. திருமதி சி.கனகரட்ணம் | B.Com (Hons), PGDE |

4. தகவல் தொழில்நுட்பம்

| | |
|---|---|
| 1. திருமதி ச.மோகனதாஸ் | B.A, NDT(IT) |
| 2. திருமதி க.மேனகா | NDT(IT) |

5. பொது ஆங்கிலம்

| | |
|---|---|
| 1. திரு. ஜே.நு.வெஸ்லி நிஜி | BA (Hons), PGDE, PGD TESL |
| 2. திரு.V.யோகேஸ்வரன் | MA, TESL |
| 3. திருமதி.K.பிரசாந்தன் | BA, PGDE, MA in Linguistice |
| 4. திருமதி.M.கிரூபன் | B.Ed, M.Ed |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மாணவர் மன்றம் 2018
# நிர்வாக செயலணி

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு.சி.க.எழில்வேந்தன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்: | திருமதி சி.பாலகிருஷ்ணன் |
| பகுதித் தலைவர்: | திரு.இ.இராஜேஸ்வரன் |
| தலைவர்: | செல்வன் கோ.ஸாஜீராம் |
| உபதலைவர்: | செல்வன் அ.பிரகாஸ் |
| செயலாளர்: | செல்வன் பொ.சிந்துயன் |
| உபசெயலாளர்: | செல்வன் ர.லோஜன் |
| பொருளாளர்: | செல்வன் பா.துசாந்தன் |
| இதழாசிரியர்கள்: | செல்வன் அ.அகிர்தன் |
| | செல்வன் ஷெ.சாருஜன் |
| உறுப்பினர்கள்: | செல்வன் கா.பிரியதர்சன் |
| | செல்வன் ர.கிஷாந் |
| | செல்வன் யோ.யோல்டன் |
| | செல்வன் பு.முரளீசன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரு. இட.வலம் : திரு. இ. இராஜேஸ்வரன், திரு. இ. திரவியநாதன், செல்வன். கோ. ஸாஜீராம், திரு. சி.க. எழில்வேந்தன் (அதிபர்), செல்வன். பொ. சிந்துயன், திருமதி. கி.சு.றெ. செல்வகுணாளன், திருமதி. சி. பாலகிருஸ்ணன், செல்வி. சு. கந்தசாமி

நிற். இட.வலம் : பா. துசாந்தன், ஷெ. சாருஜன், ப. லோஜன், அ. பிரகாஸ், ர. கிஷாந், அ. சுகிர்தன், கா. பிரியதர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிக மாணவர் மன்ற இதழாக்கக் குழு 2018 - 2019

இரு. இட.வலம் : பொ. சிந்துயன், திரு. சி.க. எழில்வேந்தன் (அதிபர்), செல்வன். கோ. ஸாஜீராம், திருமதி. சி. பாலகிருஸ்ணன், அ. அகிர்தன், ஷெ. சாருஜன்.

நிற். இட.வலம் : பா. துசாந்தன், ப. லோஜன், ர. கிஷாந், அ. பிரகாஸ், கா. பிரியதர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2017ஆம் ஆண்டு கா.பொ.தா. உயர்தர வணிகப் பிரீவிலிருந்து பல்கலைக்கழகம் தெரீவானோர்



**K.Vipulan - 3A**
Dis. Rank - 20



**M.Delaksan - 3A**
Dis. Rank - 38




**T.Neerajah - 3A**
Dis. Rank - 64



**A.Sanjeevan - A 2B**
Dis. Rank - 142



**A.Sujeevan - 2A B**
Dis. Rank - 156



**L.Pirijenthan - A2B**
Dis. Rank 163



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | நிகழ்வு முகாமைத்துவம் | 01 |
| 02. | முதலீட்டுக் கோட்பாடு | 06 |
| 03. | இலங்கையின் 2025 பொருளாதார இலக்குகள் | 17 |
| 04. | இலங்கையின் நிதியியல் முறைமைகள் | 21 |
| 05. | பணமும் பணத்தின் கருமங்களும் | 28 |
| 06. | இலங்கையின் பொருளாதாரத்தில் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய கண்ணோட்டம் | 32 |
| 07. | இலங்கையின் அண்மைக்கால தேசிய கணக்குகள் தொடர்பான எண்ணக்கருக்கள் | 43 |
| 08. | எதிர்கால வங்கித்தொழிலில் ஏற்படவிருக்கும் தொழில்நுட்ப மாற்றம் | 46 |
| 09. | இலங்கையின் சுற்றுலாத்துறையும் அது எதிர்நோக்கும் சவால்களும் | 50 |
| 10. | இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளின் பங்களிப்பு | 54 |
| 11. | **Role of Commerce Education in the changing business world** | 56 |
| 12. | **Importance of E-commerce in our daily life** | |
| 13. | **Management** | 60 |
| 14. | கிரவியல் நுட்பமுறைகள் | 62 |
| 15. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 66 |
| 16. | கணக்கீடு அறிமுகம் | 71 |
| 17. | இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் | 78 |
| 18. | பங்குடமை வணிகம் | 82 |
| 19. | இந்த 26 வார்த்தைகள் எவ்வளவு அழகு...! | 85 |
| 20. | அன்றைய இலங்கை இன்றைய சிங்கப்பூர் | 87 |
| 21. | உலகவணிக அமைப்பு | 89 |
| 22. | தென் ஆசியாவில் உயரமான தாமரைக் கோபுரம் | 91 |
| 23. | இலங்கையின் காப்புறுதி தொழிலின் அறிமுகம் | 93 |
| 24. | இலங்கையின் பொதுவான விடயங்கள் | 95 |
| 25. | பணிச் செயல் முறைமைகள் | 99 |
| 26. | வர்த்தகம் கற்கும் மாணவர்களுக்கான 200 சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் ஒரு பார்வை | 104 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**By: M.Karunanithy,**
**Head / Senior Lecturer,**
**Department Of Marketing,**
**Faculty of Management Studies & Commerce,**
**University of Jaffna, Sri Lanka.**

# நிகழ்வு முகாமைத்துவம் [Evet Management]

## அறிமுகம்:

நமது அன்றாட. வாழ்க்கையில் பல்வேறுபட்ட நிகழ்வுகளை, நாம் சந்தித்துக் கொண்டிருக் கின்றோம். இந்நிகழ்வுகளில் சில மனிதனால் ஏற்படுத்தப்படுபவை மற்றும் சில இயற்கை யாகவே இடம்பெறுபவையாகின்றன, உதாரணமாக, வெள்ளப்பெருக்கு, சுனாமி, சூறாவளி போன்றவை. இங்கு இயற்கையாக ஏற்படுபவை பற்றி நாம் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றபடியால், அவை பொதுவாக ஒரு நிகழ்வாகக் கருதப்படுவதில்லை. மறுபுறம் மனி தனால் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகள் குறித்தே 'நிகழ்வு முகாமைத்துவம்' முக்கியத்துவ மாக ஆராய்கின்றது. மனிதனால் மேற்கொள்ளப்படும் சகல நிகழ்வுகளுக்கும் இது பொருந்தும். மேலும் நிகழ்வுகளை அலுவலகம் சார்ந்த நிகழ்வுகள் (உதாரணம் கூட்டங்கள், வருடாந்த சுற்றுலாக்கள், பரிசளிப்பு விழாக்கள் போன்றவை) மற்றும் குடும்பம் சார்ந்த தனிப்பட்ட நிகழ்வுகள் (உதாரணம் திருமணம், புதுமனை புகு விழா, இறப்பு நிகழ்வு போன் றவை) எனவும் பிரித்து நோக்கலாம், குறிப்பாக, நிகழ்வு முகாமைத்துவத்திற்குட்பட்ட செயற்பாடுகள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறுவதை நாம் காண்கிறோம். ஆனால் அவ்வாறு வெற்றியடைந்தமைக்கு நிகழ்வு முகாமைத்துவம் சரியான வகையில் பின்பற்றப்பட்டமை தான் காரணம் என்பதை எம்மில் பலர் உணராமல் இருக்கிறார்கள். ஆகவே நிகழ்வு முகாமைத்துவம் பற்றிய சில விடயங்களை இங்கு நோக்குவோம்.

## நிகழ்வு முகாமை:

நாம் செயற்றிட்ட முகாமைத்துவம் [Project Management] பற்றி நன்றாகத் கேள்விப்பட்டும் அதற்குப் பரீட்சயமானவர்களாகவும் இருக்கின்றோம். நிகழ்வு முகாமையும் அவ்வாறான செயற்பாடேயாகும். அதாவது, செயற்றிட்ட முகாமையில், ஒவ்வொரு செயற்பாட்டினையும் ஆரம்பிப்பதற்கு முன்பு, எவ்வாறு ஒவ்வொரு செயற்பாட்டு நடவடிக்கைகளும் கூறுகளாக் கப்பட்டு, அவற்றோடு சம்மந்தப்பட்ட செலவுகள் முற்கணிப்புச் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுகிறதோ அவ்வாறே இங்கும் நிகழ்விற்குப் பொறுப்பான ஒரு முகாமையாளர் [Event Manager] நியமிக்கப்பட்டு. அவருடைய நேரடிக் கண்காணிப்பிலேயே அந்நிகழ்வு முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும். இவரது செயற்பாடுகள், ஒரு செயற்றிட்ட முகா மையாளரது செயற்பாடுகளுடன் ஒருங்கமைந்ததாக அமையும். அதாவது, செயற்பாட்டு பாதீடு தயாரித்தல், செயற்பாட்டுத் திட்டமிடல், செயற்பாட்டு மேற்பார்வையும் மதிப்பிடலும் எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் செயற்பாட்டு முகாமையாளர் கருமமாற்றுவது போல நிகழ்வு முகாமையாளரும் நிகழ்வுக்கான செலவுகளை முற்கணிப்புச் செய்து, நிகழ்வுப் பாதீடு தயாரித்தல், நிகழ்வுச் செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் கண் காணித்தலும் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.

கல்விப்புலம் சார்ந்து இச்சஞ்சிகை வெளியிடப்படுவதனால், நிகழ்வு முகாமைக்கான ஓர் உதாரணமாக, கல்விப்புலம் சார்ந்த உதாரணம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். அதாவது, பாடசாலையில் நடாத்தப்படவுள்ள கலை நிகழ்வொன்றை எடுப்போம். இங்கு அதிபர் அல்லது ஒரு சிரேஷ்ட ஆசிரியர், பொறுப்புள்ள தலைவராக நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன் னெடுத்துச் செல்லப்படும். இவர் நிகழ்வு முகாமையாளருக்கு ஒப்பான செயற்பாடுகளை மேற் கொள்ள வேண்டிய கடப்பாடு உடையவராகின்றார்.

அடுத்த கட்டமாக அவர் தன்னுடன் இணைந்து கடமையாற்றக் கூடிய ஒரு சிலரைத் தெரிவு செய்து, குழுவொன்றை அமைத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிர்க்க முற்படுவார். பின்னர் நிகழ்விற்கான செலவுகளை எதிர்வு கூறும் வகையில் பாதீடொன்றைத் தயாரித்து, உரிய மொத்தத் தொகை வருவாயாக, அதாவது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட / அரசாங்க நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைக்கு மேலதிகமாக பல்வேறுபட்ட நன்கொடைகள் அதாவது, பாடசாலை அபிவிருத்திக்குழு மற்றும் பழைய மாணவர் சங்கத்திலிருந்து மேலும் நலன் விரும்பிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியவை, மற்றும் அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியவை என மொத்தத்தொகை கிடைப்பதனை - உறுதிப்படுத்திய பின், வேண்டுமான அவசிய செலவுகளை எதிர்வு கூறி உரிய அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னரே செலவுகளை மேற்கொள்ள அனுமதிப்பார். குறிப்பிட்ட கால இடைவெளிக்கொரு தடவை, குழுவினரைக் கூட்டி நிகழ்வுச் செயற்பாடுகளின் முன்னேற்றம் பற்றியும் அடுத்த கட்ட செயற்பாடுகள் பற்றியும் அவை தொடர்பாக ஏதாவது பிரச்சனைகளிருப்பின் அவை பற்றியும் கலந்துரையாடுவார். இக்கலந்துரையாடலானது நிகழ்வு இடம்பெறும் நாள் நெருங்கி வரும்போது நாளாந்தம் நடாத்தப்பட வேண்டும்.

இங்கு குழு அங்கத்தவர்கள் கூட்டிணைந்த வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றிய திட்டமிடலானது மேற்கொள்ளப்படுதல் சிறப்பானதாக அமையும். இது வினைத்திறனானதாக இருக்க வேண்டுமாயின், அதனோடு இணைந்த வகையில் நேரத்திட்டமிடலும் செய்யப்பட்டு, மிகவும் இறுக்கமான முறையில் அது பின்பற்றப்படுவதனை கூட்டப்படும் கூட்டவேளைகளில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இங்கு குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பினும் நியமிக்கப்பட்ட முகாமையாளரே சகல விடயங்களுக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகச் செயற்படுவார்.

## நிகழ்வு முகாமையின் நடைமுறை முக்கியத்துவம்:

நிகழ்வு முகாமையினை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் இரு வேறு விதமான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியேற்படும். முதலாவது, நிகழ்வினை முன்னெடுக்கும் தரப்பு சார்ந்த பொறுப்புக்களும் இரண்டாவதாக, நிகழ்வினால் பயன் பெற்றுக் கொள்ளும் தரப்பு சார்ந்த பொறுப்புக்களும் எனப்படும். நிகழ்வொன்றினை நடாத்துவதால் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்களை எதிர்பார்த்து, பங்களிப்புகளைக் குறிப்பிட்ட அமைப்புகள் மேற்கொள்வதே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவாகும். இவ்விரண்டு கடமைகளுக்குமிடையே பல்வேறு ஒருமித்த தன்மை களும் வேறுபட்ட தன்மைகளும் காணப்படுகின்றமையால் நிகழ்வு முகாமையாளர் இவ்விரண்டு கடமைகளையும் சரியாக வகுத்து மேற்கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்தவராகத் திகழ்கின்றார்.

குறிப்பாக, நிகழ்வினை முன்னெடுக்கும் பொறுப்பு என்ற எமது உதாரணத்தின்படி, பாடசாலையானது கலைநிகழ்வினை சிறப்பாக நடாத்தத் தேவையான உட்கட்டுமான நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வதனை நிகழ்வு முகாமையாளருடாக உறுதி செய்து கொள்வதோடு, நிகழ்வுடன் சம்மந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் உரிய தகவல்களை உரிய நேரத்தில் சரியாக வழங்கியிருக்க வேண்டும். உதாரணமாக, உரிய பேச்சாளர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை விடயங்களை உரியநேரத்தில் வழங்குவதோடு, அவர்கள் உரிய வேளையில் குறித்த இடத்திற்கு சமூகந்தருவதை முற்கூட்டியே உறுதி செய்து கொள்ளல், மற்றும் ஏதாவது சேவை வழங்குனரது பிரசன்னம் தேவைப்படின் அதற்குரிய நடவடிக்கைகளையும் முற்கூட்டியே மேற்கொண்டிருப்பதோடு நடாத்தப்படவேண்டிய வேறுபட்ட கலை நிகழ்வுகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரித்தல், உரிய கலைஞர்களுக்கான முன்னறிவித்தல்களை மேற்கொள்ளல், அவர்களுக்குத் தேவையான மேடை ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல், தேவையேற்படின் கலைநிகழ்வுகளுக்கான ஒத்திகைகளை நடாத்தி அவற்றோடு தொடர்புபட்ட குறைபாடுகள் ஏதேனுமிருப்பின் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இம்முன்னெடுக்கும் செயற்பாடுகளைப் பின்வரும் சுழற்சி வரைபடம் ( உரு 1 ) மூலம் இலகு படுத்திக் காட்டலாம்:




உரு 1: முன்னெடுக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் சுழற்சிக் கட்டமைப்பு.

நிகழ்வு முகாமையாளர் என்ற வகையில் நிகழ்வு முன்னெடுக்கும் தரப்பு சார்பாக சகல தரப்பினருடைய தொடர்பு விபரங்களையும் கொண்டிருப்பதோடு, அடிக்கடி அவர்களுடன் தொடர்பு கொள்வதனூடாக அவர்களுக்கு நினைவூட்டிக் கொள்வதோடு, இறுதி நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடிய பிரச்சனைகளென ஏதாவது எதிர்வுகூறப்படுமாயின், அவற்றுக்கான தீர்வுச் சாத்தியங்கள் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பு ஏற்படும். தேவையாயின் குறிப்பிட்ட தரப்பினரது விடயங்களைக் கையாளவென ஒரு அதிகாரியை நியமித்துக் கொள்வதனூடாக இறுதி நேர இடையூறுகளைக் கூடியளவிற்குத் தவிர்த்துக்கொள்ளவும் முடியும்.


நிகழ்வுகளினால் பயன் பெற்றுக்கொள்ளும் தரப்பு என்ற வகையில் நிகழ்வுகளை வகுத்துத் தொகுத்து முன்வைக்க வேணடிய பொறுப்பு நிகழ்வு முகாமையாளரைச் சார்ந்ததாகின்றது. எமது உதாரணத்தின்படி, பாடசாலை சமூகம் சார்ந்ததாகக் கலைநிகழ்வொன்றினை நடாத்தி முடிப்பதெனின் நிகழ்வு முகாமையாளராக நியமிக்கப்பட்ட அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியரே முழுப்பொறுப்பு வாய்ந்தவராகக் காணப்படுகின்றார். இவர் நிகழ்வுகளை வகுத்துத் தொகுத்தல் என்ற அடிப்படையில், தனது கடமைகளை மூவேறு கட்டங்களாக மேற்கொள்வது இலகுவானதாகவும் வினைத்திறானதாகவும் அமையும். அதாவது,

* நிகழ்விற்கு முன்னதாக: நிகழ்வுபற்றிய சகல நடவடிக்கைகளையும் முன்வைத்து தேவையான உட்கட்டுமான வசதிகளையும் தேவையான வளங்களையும் பட்டியலிட்டுக் கொள்ளுதல்.

* நிகழ்வின் போதான வகையில்: வினைத்திறனான நிகழ்வு முன்வைத்தலுக்கு வேண்டிய உட்கட்டுமான வசதிகளையும் தயார்நிலையில் வைத்து தேவைப்படும் போது போதுமான அளவில் வழங்குதல்.

* நிகழ்விற்குப் பின்னதாக: நிகழ்வில் பங்குபற்றியோரது பெயர்ப்பட்டியலை வேண்டியவாறு பகுப்பாய்வு செய்தல் மற்றும் செலவுகளைத் தொகுத்து கணக்கு விபரங்களைச் சமர்ப்பித்தல் போன்றவை.

இப் பயன்பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைச் செயற்பாடுகளைப் பின்வரும் சுழற்சி வரைபடம் (உரு 2 ) மூலம் இலகுபடுத்திக் காட்டலாம்:




உரு 2: பயன்பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டு நடவடிக்கையின் சுழற்சிக் கட்டமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நிகழ்வு முகாமையாளரென்ற வகையில் அவரது பொறுப்புக்களும் மேற் தரப்பட்டவற்றிலிருந்து சற்று வேறுபட்டதாக அமைகின்றது. அதாவது சகல உட்கட்டுமான வளத் தேவைகளையும் பரிசீலித்துக் கொள்ளல், சம்மந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் உரியவேளையில் அழைப்பிதல்களை அனுப்பி வைத்தல், நிகழ்விற்கு முன்னதாக மீளவும் சகல உட்கட்டுமான வளங்களையும் சரிபார்த்துக் கொள்ளல், நிகழ்வினை நடாத்துதல், நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை நிறைவு செய்து கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் நிகழ்விற்குப் பின்னரான பின்பற்றலும் மதிப்பிடலை மேற்கொள்ளலும் என்ற வகையில் அமையும். இங்கு முக்கியமாக சகல ஊழியர்களையும் ஒருங்கிணைத்து நிகழ்வினை வெற்றிகரமானதாக செயற்பட வைத்தல் எனும் கடமை அமைகின்றது.

## முடிவுரை

ஒரு நிகழ்வொன்றை வெற்றிகரமானதாக நடாத்தி முடிக்க நிகழ்வு முகாமைத்துவம் எந்தளவிற்கு அவசியமானது எனவும் எந்தளவிற்கு அதன் பங்களிப்பு அமைகின்றதெனவும் நாம் அறிந்து கொண்டுள்ளோம். ஆகவே எங்களால் நடாத்தப்படும் எவ்வாறான நிகழ்விற்கும் சரியான வகையில் நிகழ்வு முகாமை முறைகளைப் பயன்படுத்தி அந்நிகழ்வுகளை மேலும் வினைத்திறனானதாகவும் வெற்றிகரமானதாகவும் நிகழ்த்துவோமாக.

நன்றி:

**Global Development Learning Network ( 2013 )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இ. இராஜேஸ்வரன்
B.Com, M.Ed
பகுதித் தலைவர்
யா/யாழ் மத்திய கல்லூரி



# முதலீட்டுக் கோட்பாடு

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கென மனிதனால் உருவாக்கப்பட்டதும் நீண்ட கால பயன்பாட்டைக் கொண்டதும் பெறுமானத்தேய்வு அடையக் கூடியதுமான சொத்துக்கள் மூலதனம் எனப்படும்.

முதலீட்டின் மூலமாக மூலதனம் உருவாக்கப்படுகின்றது. மூலதன இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பானது முதலீடாக கருதப்படுகின்றது.

முதலீடு = மூலதன இருப்பில் ஏற்பட்ட மாற்றம் = இறுதி மூலதனம் - ஆரம்ப மூலதனம்

$$I = \Delta K = K_t - K_{(t-1)}$$

முதலீடானது சேமிப்பின் மூலமாக உருவாகின்றது. சேமிப்பானது நிகழ்கால நுகர்வினை மட்டுப்படுத்துவதன் மூலம் உருவாகின்றது. எனவே நுகர்வுக்குரிய வளமானது நுகரப்படாது சேமிக்கப்படுவதனால், இச் சேமிப்பானது வருமானத்தை உழைக்கும் நோக்கில் மூலதனச் சொத்துக்கள் மீது முதலிடப்படுவதன் மூலம் மூலதனம் உருவாகின்றது. முதலீடுகள் எல்லாவற்றிலும் மொத்த தொகை மூலதனம் ஆகும்.

மூலதனமானது பின்வரும் இயல்புகளைக் கொண்டது.

1. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டது
2. உற்பத்திச் செலவை கொண்டது
3. பெறுமானத் தேய்வுடையது, இதனால் தேய்வை ஈடுசெய்தல் வேண்டும்.
4. உற்பத்தியில் நீண்டகால பயன்பாட்டினை கொண்டிருப்பதுடன், மீண்டும் மீண்டும் பயன்படுத்த முடியும்.
5. ஏனைய உற்பத்திக் காரணிகளுடன் ஒப்பிடும் போது உற்பத்தி திறன் வாய்ந்த காரணியாக அமைதல்
6. தொடர்ச்சியான உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்தி விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்
7. மூலதனத்தினை உற்பத்தியில் பயன்படுத்துவதன் மூலம் வட்டி வருவாய் பெறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலதனத்தின் வகைகள்

மூலதனமானது பின்வரும் வடிவத்திங்களில் இனங்காணப்படுகின்றது.

1) நிலையான மூலதனம் / மெய்மூலதனம் / பௌதீகமூலதனம்

பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் மனிதனால் உருவாக்கப்பட்டதும் நெடுவாழ்வுத்தன்மை கொண்டதும் பெறுமானத் தேய்வுக்கு உட்படக்கூடியதுமான மூலதனமாகும். ஒரு நாட்டின் உற்பத்தியாற்றலை உயர்த்தக் கூடிய வல்லமை பெற்ற காரணியாகும்.

ஊ+ம்:- இயந்திரங்கள், உபகரணங்கள்
கட்டடம், தளபாடங்கள்

2) நிதி மூலதனம்

நிதிச் சொத்துக்கள் மீது ஈடுபடுத்தப்படும் மூலதனமாகும்

ஊ+ம்:- பங்குகள்/ஆவணங்கள்
சேமிப்பு வைப்புக்கள், உண்டியல்கள்

- இவை வட்டிவருவாய், பங்கு இலாபத்தை உழைக்கவல்லன

3) சுழலும் மூலதனம் / மாறும் மூலதனம்

குறுங்காலத்தில் மாற்றமடையக் கூடிய சொத்துக்களில் ஈடுபடுத்தப்படும் மூலதனமாகும்.

- இவை நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் மூலதனமாகும்.

ஊ+ம்:- மூலப்பொருள் குறை வேலை
முடிவுப் பொருட்கள்

4) சமூகப் பொதுபணி மூலதனம்

சமூகத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் சொத்துக்கள் மீது ஈடுபடுத்தப்படும் மூலதனமாகும்.

ஊ+ம்:- பாடசாலைகள், வைத்தியசாலை
குடிநீர், கழிவகற்றல்

5) பொருளாதாரம் பொதுபணி மூலதனம்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு அவசியமான பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் மூலதனம்.

ஊ+ம்:- தொடர்பாடல் வசதி, நீர்ப்பாசன வசதி
மின்சார வசதி, போக்குவரத்து வசதி
பாலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மனித மூலதனம் :

பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அதிகரிப்புக்காக பயன்படும் மனிதர்களிடையே காணப்படும் விசேட உற்பத்தி திறமைகளையே மனித மூலதனம் எனப்படும்.

- ஊழியத்தின் வினைத்திறனை உயர்த்தும் வகையில் உழைப்பாளர்களிடமுள்ள அறிவு, அனுபவம், திறமை பயிற்சி, நிபுணத்துவம் என்பனவாகும்.

- சிறந்த ஊழியத்தை பெற்றுக் கொள்வதை நோக்கமாக கொண்ட கல்வி, தொழிற்பயிற்சி போன்ற முதலீடுகள் மூலமாக மனித மூலதனம் உருவாகின்றது.

- எனவே கல்வி வசதி, தொழிற்பயிற்சிகள் ஆராய்ச்சி அபிவிருத்தி வசதிகள், நிதிவசதிகள், சுகாதாரம், போசாக்கு போன்றவற்றை அதிகரிப்பதன் மூலம் மனித மூலதனத்தை மேம்படுத்தலாம்.

ஊ+ம்:- வைத்தியர், பொறியியலாளர்
கணக்காளர்

## முதலீட்டின் விளைதிறன்

உற்பத்தி நடவடிக்கையின் போது ஒரு அலகு முதலீட்டை பயன்படுத்தி பெறக் கூடிய வெளியீட்டின் அளவாகும். ஓரலகு முதலீட்டுக்கான சராசரி வெளியீட்டின் அளவாகும்.

$$\text{முதலீட்டு வெளியீடு விகிதம்} = \frac{\text{வெளியீடு}}{\text{முதலீடு}}$$

இதன் மூலம் ஓரலகு வெளியீட்டுக்காக தேவைப்படும் முதலீட்டு அலகுகளின் அளவினை கணிக்க முடியும் முதலீட்டுத்தீர்மானங்களை மேற்கொள்ள இது உதவுகின்றது.

## வட்டி நிர்ணயிப்பு

வட்டி வீத நிர்ணயம் தொடர்பாக பின்வரும் கோட்பாடுகள் முக்கியம் பெறுகின்றன.

1. பழம் பொருளியலாளர்களின் வட்டி வீத கோட்பாடு
2. கடன் வழங்கும் நிதிக் கோட்பாடு
3. கெயின்சின் வட்டிவீதக் கோட்பாடு
4. வட்டிவீதம் பற்றிய IS, LM ஆகிய பழம் பொருளியலாளர்களின் கோட்பாடு

## பழம் பொருளியயலின் வட்டிவீத கோடு


பழம் பொருளியயலாளரின் கோட்பாட்டின்படி வட்டி என்பது மூலதனத்தின் விலையாகும். எனவே ஒரு பொருளின் விலை எவ்வாறு கேள்வி, நிரம்பினால் நிர்ணயிக்கப்படுகிறதோ இடம்பெறுகின்றது அதே போன்று மூலதனத்துக்கான கேள்வியும், நிரம்பலும் இணைந்து வட்டி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

## மூலதனத்தின் நிரம்பல்

மூலதனத்தின் நிரம்பல் என்பது சேமிப்பிலிருந்து கிடைக்கின்றது. வட்டி வீதத்துக்கும் சேமிப்புக்கும் இடையே நேரான தொடர்பு காணப்படும். அதாவது வட்டிவீதம் கூடினால் சேமிப்பும் கூடும் வட்டி வீதம் குறைந்தால் சேமிப்பு குறையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### மூலதனத்துக்கான கேள்வி

மூலதனத்துக்கான கேள்வி என்பது முதலீட்டிலிருந்து எழுகின்றது. வட்டி வீதத்துக்கும் முதலீட்டுக்கும் இடையே எதிரானதொடர்பு காணப்படும். அதாவது வட்டிவீதம் அதிகரித்தால் முதலீடு குறையும். வட்டிவீதம் குறைந்தால் முதலீடு கூடும்.





எனவே பழம் பொருளியலாளர்களின் கருத்துப்படி மூலதனத்துக்கான கேள்வியும் (I) மூலதன நிரம்பலும் (S) சேர்ந்துதான் வட்டி நிர்ணயிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின்படி S, I சமப்படும் இடத்தில் வட்டி சேமிப்பும், முதலீடும் நிர்ணயிக்கப்படு கின்றது.

பழம் பொருளியலாளர்களின் கருத்தின்படி சேமிப்பு, முதலீடு என்பவற்றை மெய்சார்பான காரணிகளாக கருதுகின்றனர். எனவே இங்கு ஏற்படும் சமநிலை பொருட் சந்தையின் சமநிலையாக கருதப்படுகின்றது. இங்கு மூலதனத்துக்கான கேள்வி, நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் வட்டிவீதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும்




ஏதாவது காரணத்தினால் பொருளாதாரத்தின் சேமிப்பு அதிகரிக்குமானால் சேமிப்பு கோடு $S_1$ - $S_2$ என நகர்ந்து வட்டிவீதம் $R_1$ - $R_2$ என வீழ்ச்சியடையும்.

### இக்கோட்பாட்டின் விமர்சனம்

வட்டி நிர்ணயிப்பில் மெய்காரணிகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படுகின்றதே தவிர பணக்காரணிகள். கருத்தில் கொள்ளப்படவில்லை.

### கடன் வழங்கும் நிதிக்கோட்பாடு

இக்கோட்படின் படி கடன் வழங்கும் நிதியின் நிரம்பலும் கடன் வழங்கும் நிதியின் கேள்வியும் சேர்ந்து வட்டிவீதம் நிர்ணயிக்கப்படுகின்றது. கடன் வழங்கும் நிதிக்கான நிரம்பல் என்பது பின்வரும் வழிகளில் கிடைக்கின்றது.

1. சேமிப்பு
2. பதுக்கப்பட்ட பணம் வெளிக் கொணரல்

கடன் வழங்கும் நிதிக்கான கேள்வி என்பது முதலீட்டிலிருந்து எழுகின்றது எனவே கடன் வழங்கும் நிதியின் கேள்வியும் நிரம்பலும் சமப்படுத்தும் இடத்து வட்டி வீதம் நிர்ணயிக்கப்படுகின்றது.

### வட்டி வீதம் பற்றிய திரவத்தேர்வு கோட்பாடு

(கெயின்சின் வட்டிவீதக் கோட்பாடு)

கெயின்சினுடைய கருத்துப்படி பணத்தின் விலையே வட்டி வீதம் ஆகும். எனவே ஒரு பொருளின் விலை எவ்வாறு அதன் கேள்வி நிரம்பலினால் நிர்ணயிக்கப்படு கின்றதோ அவ்வாறே பணத்தின் விலையாகிய வட்டிவீதம் பணத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியினாலும் பணத்திற்கான நிரம்பலினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது


**பணத்திற்கான கேள்வி**

பணத்திற்கான கேள்வி என்பது திரவத்தேர்வினை குறிக்கின்றது இது பின்வரும் காரணங்களிற்காக ஏற்படுகின்றது.

1. பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் நோக்க கேள்வி
2. பணத்திற்கான பாதுகாப்பு நோக்க கேள்வி
3. பணத்திற்கான உத்தேச நோக்க கேள்வி

பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்வி, பாதுகாப்பு நோக்கக் கேள்வி என்பன வருமானத்தின் தொழிற்பாடாக அமையும். பணத்திற்கான உத்தேச நோக்கம் கேள்வி வட்டிவீதத்தின் தொழிற்பாடாக அமையும். இதன் அடிப்படையில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பணத்திற்கான கேள்வி வட்டி வீதத்தின் தொழிற்பாடாக காட்டப்படும்.

பணத்திற்கான கேள்விக்கும் வட்டி வீதத்திற்கும் இடையே எதிரான தொடர்பு காணப்படும் அதாவது வட்டிவீதம் அதிகரிக்கும்போது பணத்திற்கான கேள்வி குறையும் வட்டி வீதம் குறையும் போது பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும்.





**பணத்திற்கான நிரம்பல்**


கெயின்சின் கருத்துப்படி பண நிரம்பல் வெளிக்காரணிகளினால் நிர்ணயிக்கப்படுவதாகும். இதன்படி வட்டி வீதம் தொடர்பாக பணத்தின் நிரம்பல் பூச்சிய நெகிழ்ச்சி உடையது ஆகும்.

அதாவது வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பணநிரம்பலில் மாற்றத்தினை ஏற்படுத்தமாட்டாது இதனால் வட்டி வீதம் தொடர்பாக பணத்தின் நிரம்பல் கோடு நிலைக்குத்தச்சிற்கு சமாந்தரமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனவே பணத்தின் விலையாகிய வட்டிவீதம் பணத்தின் கேள்வியும் பணத்தின் நிரம்பலும் சமப்படுத்தும் இடத்தில் நிர்ணயிக்கப்படும். எனவே பணத்திற்கான கேள்விக்கோடும் பணத்தின் நிரம்பல் கோடும் ஒன்றை ஒன்று வெட்டிச் செல்லும் நிலையில் வட்டிவீதம் நிர்ணயிக்கப்படும் இந்நிலையில் பணச்சந்தை சமநிலையில் உள்ளது எனலாம்.




இவ்வாறே பணத்திற்கான கேள்வி பண நிரப்பல் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் வட்டி வீதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இதன்படி பணநிரம்பலிற்கும் வட்டி வீதத்திற்கும் இடையே எதிரான தொடர்பும் பணக்கேள்விக்கும் வட்டி வீதத்துக்கும் இடையே நேரான தொடர்பும் காணப்படும்.

**வட்டி வீதம் பற்றிய IS, LM கோட்பாடு**

பழம் பொருளியலாளர்களின் வட்டி வீதக் கோட்பாட்டின் படி சேமிப்பும் முதலீடும் சமப்படும் இடத்தில் வட்டி வீதம் நிர்ணயிக்கப்படுகின்றது (பொருட்சந்தையில் சமநிலை) கெயின்சின் வட்டி வீதக் கோட்பாட்டின்படி பணத்தின் கேள்வியும் பணத்தின் நிரம்பலும் இணைந்து வட்டிவீதம் நிர்ணயிக்கப்படுகின்றது (பணச்சந்தையில் சமநிலை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நவீன வட்டிவீதக்கோட்பாடு பொருட்சந்தை பணச்சந்தை ஆகிய இரண்டையும் இணைத்து வட்டி வீத நிர்ணயத்தினை விளக்குகின்றது.

## IS கோடு

பொருட் சந்தையிலே சேமிப்பும் முதலீடும் சமமாகக் காணப்படும் புள்ளிகளை இணைத்து வரையப்படும் கோடு IS கோடு ஆகும்.




IS கோடு வட்டி வீதத்திற்கும் வருமானத்திற்கும் இடையிலான எதிர்த் தொடர்பினாக் காட்டும் இதன்படி வட்டி வீதம் அதிகரித்தால் வருமானம் குறையும் வட்டி வீதம் குறைந்தால் வருமானம் அதிகரிக்கும்.

## IS வளை கோட்டின் இயல்புகள்

1. மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரிந்து செல்லல்
2. வட்டி வீதத்துக்கும் வருமானத்துக்கும் இடையில் எதிரான தொடர்பை கொண்டது
3. IS வளைகோட்டின் சரிவு முதலீட்டு கேள்வி நெகிழ்ச்சியிலும், பெருக்கியின் அளவிலும் தங்கியுள்ளது.
4. IS வளைகோட்டின் ஒவ்வொரு புள்ளியும் பொருட் சந்தையின் சமநிலையினை குறிக்கும்.

## IS சமன்பாடு

வட்டிவீதத்துக்கும் வருமானத்துக்கும் இடையிலான தொடர்பினை கணித ரீதியான சமன்பாட்டு வடிவில் குறிப்பிடலாகும்.

$y = A - bi$

y = வருமானம்

A = தன்னிச்சையான செலவீடு

i = வட்டிவீதம்

b = தொடர்புக்குணகம்

88579CP/


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருட்சந்தை மாறிகளும் IS வளைகோடும்

1. முதலீட்டின் நடத்தைக் குணகப் பெறுமானம் (b) குறையும் போது IS கோடு வலது புறமும் அதிகரிக்கும் போது இடது புறமும் நகரும்.
2. எல்லை நுகர்வு நாட்டம் (MPC) அதிகரித்தால் IS கோடு வலதுபுறம் நகரும் எல்லை நுகர்வு நாட்டம் குறைந்தால் இடது புறமும் நகரும்.
3. தன்னிச்சையான நுகர்வு அதிகரித்தால் (a)IS கோடு வலதுபுறமும் தன்னிச்சையான நுகர்வு குறைந்தால் இடதுபுறமும் நகரும்.
4. தன்னிச்சையான முதலீடு அதிகரித்தால் IS கோடு வலது புறமும், தன்னிச் சையான முதலீடு குறைந்தால் IS கோடு இடதுபுறமும் நகரும்.
5. அரச செலவு அதிகரித்தால் IS கோடு வலது புறமும் அரச செலவு குறைந்தால் IS கோடு இடதுபுறமும் நகரும்.

### LM வளையி

வட்டி வீதத்துக்கும் வருமானத்துக்கும் இடையில் நேரான தொடர்பினைக் காட்டும் கோடே LM வளைகோடாகும் இதன்படி வட்டிவீதம் அதிகரித்தால் வருவாய் அதிகரிக்கும், வட்டிவீதம் குறைந்தால் வருமானம் குறையும்.




LM வளையி பணச் சந்தையின் சமநிலையுடன் தொடர்புடையது ஆகும். பணச்சந்தையிலே பணத்துக்கான கேள்வியும் (MD) பண நிரம்பலும் (MS) சமனாக காணப்படக் கூடிய பல்வேறுபட்ட சமநிலைப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு LM கோடு பெறப்படுகின்றது.

### LM வளை கோட்டின் இயல்புகள்

1. பணச்சந்தை சமநிலையில் இருக்கும் போது காணப்படும் வெவ்வேறு வட்டி வீதங்களுக்கும் வருமானமட்டங்களையும் புலப்படுத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. LM வளையி மேல் நோக்கி சரிந்து செல்லும்
3. பணநிரம்பல் அதிகரித்தால் LM வளையி வலதுபுறம் பணநிரம்பல் குறைந்தால் LM வளையி இடதுபுறமும் நகரும்.

LM சமன்பாட்டினை பெறல்

ஊ + ம்:- பண நிரம்பல் $M = 200$

பணக்கேள்வி $L = 0.2y - 5i$

என பணக் கேள்வி, பணநிரம்பல் சமன்பாடுகள் தரப்படின் LM சமன்பாட்டினை பின்வருமாறு பெறமுடியும்.

பணச்சந்தை சமநிலையின் போது

பணநிரம்பல் = பணக்கேள்வி

$M = L$

$200 = 0.2y - 5i$

$0.2y = 200 + 5i$

$y = 1000 + 25i \rightarrow$ LM சமன்பாடு

இங்கு $y$ = வருமானம்


$j$ = வட்டிவீதம்

1000 = பணக்கேள்வி அளவு (ky)

25 = தொடர்பு குணகம் (h)

**சமநிலை வட்டி நிர்ணயம்**

நவீன வட்டி வீத கோட்பாட்டின் படி LM கோடானது பணச்சந்தையின் சமநிலையுடனும் 1S கோடானது பொருட்சந்தை சமநிலையுடனும் தொடர்பு படு வதனால் 1S கோடும் LM கோடும் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் இடத்தில் வட்டிவீதம் நிர்ணயிக்கப்படுகின்றது. இச்சமநிலையின் போது IS = LM என்ற நிலை காணப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின்படி IS கோடும் LM கோடும் இணைந்து வட்டிவீதம் $r_1$ எனவும் வருமானம் $y_1$ எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே பொருளாதாரத்தில் சேமிப்பு (S) முதலீடு (I) பணக்கேள்வி (L) பணநிரம்பல் (M) என்பவற்றில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் IS, LM வளை கோடுகளில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தி வட்டிவீதம் (r) வருமானம் (y) என்பனவற்றில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறியமுடியும்.

**உசாத்துணை:**


1. Macro Economics Theory and Policy - S.Vijakumar
2. Introduction to Economic Theory - C.P.A.Karunathilaga


# பொன்மொழிகள்

**கடந்து போன நிமிடத்தை விலைக்கு வாங்கி அனுபவிக்க முடிகிற அளவிற்கு இந்த உலகில் யாரும் பணக்காரர்கள் கிடையாது.**
**- ஆஸ்கார் ஒய்ல்டு**

**எல்லோரையும் திருப்திப்பட வைப்பவனால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது.**
**- லெனின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சி.தயாளினி
B.A, M.A
ஆசிரியர்



# இலங்கையின் 2025 பொருளாதார இலக்குகள் - விமர்சனப் பார்வை

இலங்கை அரசாங்கத்தால் 2017ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அடுத்த எட்டு ஆண்டுகளுக்கான (2017 - 2025) தூரநோக்கு "வளமான நாடு" என்ற கொள்கைச் சட்டகம் அறிமுகஞ் செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளின் முதன்மைக் குறிக்கோள், "இலங்கையை ஒரு செல்வந்த நாடாக மாற்றியமைப்பதன் மூலம், இந்து சமுத்திரத்தின் கேந்திரமையமாக மீள உருவாக்குவதுடன், இதை அடிப படையாகக் கொண்டு அறிவு சார் ரீதியில் போட்டித்தன்மை மிக்க சமூக, பொருளாதார சூழலை உருவாக்க வேண்டும்" என்பதாகும். இம் முதன்மைக் குறிக்கோளினுள் பல்வேறு சிறிய இலக்குகள் உள்ளடங்கியிருக்கின்றன. அந்த வகையில் அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான இலக்குகள், வளர்ச்சிக்கான தடைகள். எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கான பொருளாதார இலக்குகள், வளர்ச்சிக்கான புதிய வழிமுறை பேரினப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், விவசாய மற்றும் நிலைபேறான அபிவிருத்தி, வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள் என பல்வேறு இலக்குகளை உள்ளடக்கியிருக்கின்றன.

எனினும் இலங்கை அரசாங்கத்தால் அறிமுகஞ் செய்யப்பட்ட 2025ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார இலக்குகள் அடையப்படக் கூடியனவா? அல்லது அதற்கும் மேலான பொருளாதார சுமையைச் சுமக்கும் மோசமான நிலையை அடைந்து கொள்ள வேண்டியதாக இருக்குமா? என்ற ஐயத்தை அண்மைக்காலப் பொருளாதார செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன. தற்போதுள்ள பொருளாதாரம் தொடர்பான எதிர்வினைச் செய்திகள் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியையும் அதன் திட்டங்களையும் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன என்பதே உண்மையாக இருக்கின்றது. இக்கட்டுரையானது இலங்கைப் பொருளாதாரத்தின் 2025ஆம் ஆண்டு இலக்குகள் சாத்தியமா? இல்லையா என்பது பற்றி ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2025ஆம் ஆண்டை நோக்கியதாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள பொருளாதார இலக்கு "2025ஆம் ஆண்டில் இலங்கையை சுபீட்சம் மிக்கதொரு நாடாக வளர்ச்சிபெற செய்யவேண்டும். இதற்காக மக்களின் வருமானத்தை அதிகரித்தல், தொழில் வாய்ப்புக்களை வழங்குவதை உறுதிப்படுத்தல் அனைவருக்கும் வீடு மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் கொண்ட நாடாக இலங்கையை மாற்ற இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்துமா சமுத்திர பிராந்தியத்தின் ஏற்றுமதிப் பொருளாதாரக் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றப்படும் அதன் மூலம் உலக உற்பத்தி வலையமைப்பினுள் உள்நுழைவதற் கான வாய்ப்பை உள்நாட்டு வர்த்தகர் களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதாக இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

எனினும் 2025ஆம் ஆண்டு இலங்கை அடைய வேண்டிய பொருளாதார இலக்குகளை எடுத்துக் காட்டியிருந்தாலும் இவற்றை அடைவதிலுள்ள சிக்கல்களையும் இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது. அந்த வகையில் வீழ்ச்சியடைந்துவரும் அரச வருமானம் காரணமாக அபிவிருத்தியில் தடைகள் ஏற்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக அரச வருமானம் 2014ம் ஆண்டு வரலாற்றிலேயே மிகக் குறைவான 11.5 வீதமாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. 2017 இல் அது 13.8 ஆக அதிகரித்துள்ளது. அரசாங்கமானது வரி வருமானங்களை உயர்த்துவதற்காக வரி அறவிடும் முறையை மறுசீரமைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங்கையின் வரிக்கட்டமைப்பில் தற்போது 20:80 விகிதமாக காணப்படும் மறைமுகவரியானது 40:60 என்ற விகிதமாக மாற்றியமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. எனினும் அரசின் வருமானத்தை உயர்த்துவதிலுள்ள நிர்வாகக் குறைபாடுகள் பெரும் தடையாகவே காணப்படுகின்றன. அத்துடன் பல அரச முயற்சிகள் நட்டத்தில் இயங்குவதும் வளர்ச்சிக்கான தடையாகும். விசேடமாக மின்சாரம், பெற்றோலியம், வலு, விமானப்பயணம், பயணிகள் போக்குவரத்து மற்றும் பெருந்தோட்டத்துறை போன்ற நிறுவனங்கள் பாரிய நட்டத்தினை அடைந்துள்ளன. இவை தவிர ஒருசில பொருட்களில் மட்டும் தங்கியுள்ள இலங்கையின் ஏற்றுமதிக்கட்டமைப்பும் வளர்ச்சிக்கான தடையாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கமானது வளர்ச்சிக்கான தடைகளை சுட்டிக்காட்டிய போதிலும், 2025 ஆண்டு அபிவிருத்தி நோக்கிற்காக "எதிர்வரும் மூன்றாண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான குறைபாடுகளை களைவது" இலங்கை அரசாங்கத்தின் நோக்கம் என குறிப்பிட்டது. இதற்காக 2020ம் ஆண்டில் இலங்கையின் தனிநபர் வருமானத்தை 5000 us $ ஆக உயர்த்துவதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்கள், ஆண்டொன்றுக்கு 5 பில்லியன் us $ வரை வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நேரடி முதலீடுகளை அதிகரித்துக் கொள்வது, சுற்றுலாத்துறை மூலமாக 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றுக்கொள்வது என இலக்கு வைக்கப்பட்டுள்ளது. எனினும் இவ் இலக்குகள் அடைய முடியாத இலக்குகளாகவே உள்ளன.

இலங்கை அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான இலக்கு நடை முறைக்கு சாத்தியமற்றதாக இருக்கிறது. இந்த இலக்குகளின் பிரகாரம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டவேண்டும் என்பது எந்த வகையிலும் சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல. இலங்கையில் போர் முடிவுக்கு வந்த காலப் பகுதியான 2010 - 2014 இலும், நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து 2015 - 2016 வரையானகாலப் பகுதியிலும் வெளிநாட்டு நேரடி முதலீடு சராசரியாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே இருந்திருக் கிறது. தற்போது (2017) வெளிநாட்டு நேரடி முதலீடானது 1.63 பில்லியன் அமெரிக்க டொலராக இருக்கிறது. இது 2020ம் ஆண்டு 5 பில்லியன் us $ இலக்கினை அடைவதற்கான சாத்தியப்பட்டினை கேள்விக்குரியதாக்குகின்றது.

மேலும் 2020 ஆண்டுக்கான இலக்குகளில் ஏற்றுமதி பொருளாதாரமாக இலங்கையை மாற்றுதல் அடிப்படையில் தற்போது சராசரியாக 10 பில்லியன் us$ ருக்கு அண்மையாகவுள்ள ஏற்றுமதிகளை இரண்டுமடங்காக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மாற்ற வேண்டும் என இலக்கிடப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றுமதியில் பல்வகைத்தன்மையைப் பேணுதல் அவசியமாகும். காரணம் இலங்கையின் ஏற்றுமதித்துறையில் பெருமளவிலான வருமானம் விவசாயத் துறை சார்ந்த ஏற்றுமதி மூலமாகவே வருகின்றது. அதிலும் ஒரு சில பொருட்களில் மட்டுமே இந்த ஏற்றுமதியும் தங்கியுள்ளது. எனவே 20 பில்லியன் us$ என்கிற திட்டமிடலை கொண்டுள்ள நிலையில் சிறிய ஏற்றுமதி வட்டத்துக்குள் தங்கியிருப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமானதல்ல. எனவே இலங்கை அரசு ஏற்றுமதியில் பல்வகைத்தன்மையை நடைமுறைக்கு கொண்டு வருவது அவசியமாகிறது.

சுற்றுலாத்துறை தொடர்பான இலக்குகளில், குறைந்தது 2020ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மூலமாக 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றுக் கொள்வது என இலக்கு வைக் கப்பட்டுள்ளது. இவ் இலக்கும் நடை முறைக்கு சாத்தியமற்றதாகும். 2017ம் ஆண்டு இலங்கை அரசின் சுற்றுலாத் துறை வருமானம் 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் வருமானமும் அதிகரித்துள்ளபோதிலும் எதிர்காலத்தில் தொடரும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சுற்றுலா பயணிகளுக்கான சுற்றுலா விடுதிகளின் தரம் போதுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக இருக்கவில்லை என்ற குறைபாடு வர்த்தக சம்மேளனத்தின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாதபட்சத்தில் சுற்றுலா பயணிகளின் வருகையில் மட்டு மல்ல வருமானத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்த முடியாது.

2025ம் ஆண்டு இலக்குகளில் தனி நபர் தலா வருமானத்தை 2020க்குள் 5000 அமெரிக்க டொலராக மாற்றியடைப்பது என்பதும் நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில் தற்போதைய பொருளாதார வளர்ச்சியைப் போல மூன்று மடங்கு பொருளாதார வளர்ச் சியை இலங்கை எட்டும் போது மட்டுமே இவ் இலக்கை 2020இல் எட்ட முடியும்.

முடிவாக, இலங்கை அரசானது இவ் வாறான இலக்குகளை முன்வைக்கின்ற போது பொருளாதார வளர்ச்சியை தூண்டக்கூடிய வகையிலும் வளர்ச் சியை விரைவு படுத்தக்கூடிய கொள்கைகளையும் நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகும். காரணம் கடந்த காலங்களிலும் பல்வேறு இலக்குகள் முன்வைக்கப்பட்டாலும் அவை திறன் மிகு வகையில் நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களை இலங்கை அரசு எதிர்கொண் டுள்ளது. 2025ம் ஆண்டை நோக்கிய தாக இலங்கை அரசாங்கத்தால் வெளி யிடப்பட்ட இவ் இலக்குகள் சரியான திட்ட மிடல்கள் இல்லாத கவர்ச்சிகரமான இலக்குகளாகவே உள்ளன. எனவே இந்த இலக்குகளை அடைய ஸ்திரமான ஒருங்கிணைப்பும் கட்டுப்பாடுகளும் கொண்ட நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

**உசாத்துணை:- https://www.mfa.gov.lk**
**மத்திய வங்கி ஆண்டறிக்கை 2017**

# பொன்மொழிகள்

**நண்பனுக்கு உயிரை கொடுப்பது எளிது ஆனால் உயிரை கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது.**

**- நெப்போலியன்**

**மனநிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம்; ஆடம்பரம் என்பது நாமே தேடிக்கொள்ளும் வறுமை.**

**- சாக்ரட்டீஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**G.Harikaran**
$12^D$ Com (2020)

# இலங்கையின் நிதியியல் முறைமைகள்

## அறிமுகம்

மனிதன் தனது பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை மேலும் வசதிப்படுத்தும் நோக்கத்துடன் பணத்தை கண்டுபிடித்தான், பணம் கண்டுபிடிக்கப்பட முன்னர் ஒருவருக்கு தம்வசமுள்ள ஒருபண்டத்தை அல்லது பணியை இன்னொரு ஆளுடன் அல்லது ஆட் கள் குழுவுடன் பரிமாறிக்கொள்ளும் போது கடும் வசதியீனங்களை எதிர்கொள்ள நேரிட்டது. ஆயினும் பணத்தின் பரவலை தொடர்ந்து ஒருவரால் தமது பண்டங்கள் அல்லது பணிக்குரிய பெறுமதியை பணத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும், அப்பணத்தை சேகரித்து வைத்திருப்பதற்கும், அவற்றை பயன்படுத்துவதன் மூலம் தமது நானாவித தேவைகளை அதிக பயனுள்ள விதத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்குமான இயலுமை கிடைத்துள்ளது. காலப்போக்கில் பணத்தை சேகரித்து வைத்திருப்பதாகும், எத்தகைய பணத்தை உரிமையாளரின் தேவைப்பாட்டின் பிரகாரம் வேறு ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை செய்வதற்குமான நிறுவன முறைமையொன்று உலகப் பூராகவும் பரவியது. இவை வங்கிகள் மற்றும் கொடுப் பனவு, தீர்ப்பனவு நிறுவனங்கள் என இன்று அழைக்கப்படுகின்றன. இதற்கமைய பணம் மற்றும் கொடுப்பனவு, தீர்வை முறைமைகளின் சேர்க்கையின் ஊடாக ஒருநாட்டில் வசிக்கின்ற ஆட்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப் படுத்துவதன் ஊடாக ஈட்டுகின்ற பணத்தை சேமிப்பதாகும், அவ்வாறு சேமிக்கின்ற பணத்தை ஏனை யோருக்கு கடனான வழங்குவதற்குமான இயலுமை பெற்று கொடுக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட செயற்பாட்டிற்கு பங்களிக்கின்ற மிகவும் சிக்கலானதும், முறைசார்ந்ததுமான நிறுவன வரைச்சட்டகமொன்றை தற்கால உலகில் ஒவ்வொரு நாட்டில் காணகூடியதாக உள்ளதோ, அது அந்நாட்டின் நிதியியல் முறைமையாக அழைக்கப்படுகின்றது.

## நிதியமைப்பு

நிதியமைப்பு என்பது உள்நாட்டு, வெளிநாட்டு, வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசு ஆகிய பிரதான பொருளாதார அலகுகளில் நிதி பற்றிய தீர்மானங்களை செயற்படுத்தும் சந்தைகள், நிதி நிறுவனங்கள், நிதிகருவிகள் மற்றும் நிதி உட்கட்டமைப்பு வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் மொத்தமாகும்.

**நிதியமைப்பானது பின்வரும் கூறுகளை கொண்டது**

நிதி நிறுவனங்கள்


நிதிச் சந்தை

நிதிக் கருவிகள்


நிதி உட்கட்டமைப்பு வசதி

நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் கண்காணிப்பு நிறுவனம்

## இலங்கையினல் நிதியியல் முறைமை பற்றிய மாதிரி குறிப்பு




## இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி நிதி நிறுவனங்கள் பற்றிய மாதிரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட நிதி நிறுவனங்கள்
- விசேட குத்தகை நிதிக்கம்பனிகள்
- முதல்நிலை விற்பனையாளர்கள்
- பங்குத் தரகர்கள்
- அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள்
- சந்தை இடைத் தரகர்கள்
- முயற்சியாளர் மூலதன கூட்டுதாபனங்கள்

ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்
- காப்புறுதிக் கம்பனிகள்
- ஊழியர் சேமலாப நிதியம்
- ஊழியர் நம்பிக்கை நிதியம்
- அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம், சேமலாப நிதி
- அரச சேவை சேமலாப நிதியம்

**நிதிச்சந்தை**

குறுங்கால, நீண்டகால நிதித் தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்காக நிதிக் கருவிகளை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் நடை பெறுகின்ற மொத்த சந்தை நிதிச் சந்தை எனப்படும்.

நிதிச்சந்தை
- பணச்சந்தை
- மூலதனசந்தை

பணச்சந்தை

ஒரு வருடத்திலும் குறைந்த காலத்தில் முதிர்ச்சி அடைகின்ற திறைசேரி, உண்டியல்கள், வங்கிப்பத்திரங்கள், வைப்புச் சான்றிதழ்கள் போன்ற வட்டியை உழைக்கின்ற குறுகிய சொத்துக்களின் வியாபாரம் நடைபெறும் சந்தை பணச்சந்தை எனப்படும்.

**பணச்சந்தை கீழே தரப்படும் உபசந்தைகளை உள்ளடக்கியது**

* வங்கிகளுக்கிடையிலான அழைப்பு கடன் பணச் சந்தை
* திறைசேரி உண்டியல் சந்தை
* வர்த்தகம் பத்திரங்கள் சந்தை
* வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலவாணிச் சந்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதனச் சந்தை

ஒரு வருடத்திற்கு மேலான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதியக் கருவிகள் மற்றும் கம்பனிகளின் பங்குகள் போன்றன பரிமாற்றப்படும் சந்தை மூலதனச் சந்தை எனப்படும்.

மூலதனச் சந்தை கீழே தரப்படும் உபசந்தைகளை உள்ளடக்கியது

* திறைசேரி முறிகள் சந்தை

* கம்பனி முறிச்சந்தை

* பங்குச் சந்தை

## இலங்கையின் நிதிச் சந்தையினுள் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் நிதிக்கருவிகள்


- அரசாங்கம் வெளியிடும் கடன் கருவிகள்
  - திறைசேரி உண்டியல்கள்
  - திறைசேரி முறிகள்
  - அரசின் கடன் பத்திரங்கள்
- கம்பனிகள் வெளியிடும் கடன் கருவிகள்
  - வர்த்தக பத்திரங்கள்
  - கடன் முறிகள்
- வணிக வங்கி பயன்படுத்தும் உபகரணம்
  - வைப்புச் சான்றிதழ்
  - சொத்துகளை அடிப்படையாக கொண்ட முறி
  - குத்தகை
  - அழைப்பு கடன்
  - வியாபார பங்குகள்

தற்போது நிதிச் சந்தைகளின் அபிவிருத்தியுடன், பரிமாற்றப்படும் நிதிக்கருவிகளின் தொகையும் அதிகரித்தமையால் அவற்றில் முதலிடும் முதலீட்டாளர்களுக்கு அக்கருவிகளில் தர ரீதியான நன்மையை இனங்கண்டு முதலீடுகளை தெரிவு செய்வதுமாக முறையான வழிகாட்டல் என்ற வகையில் கடன் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**உசாதுணை:- (குறிப்பேடு) (பக்கம் 14)**
**2015 மார்ச் - ஏப்ரல்**
**(மத்திய வங்கி)**
**தொகுப்பு:- தரம் 13 ஆசிரியர் வழிகாட்டல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. அகிர்தன்
13D (2019 com)



# பணமும் பணத்தின் கருமங்களும்

நாம் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு பணத்தை பயன்படுத்துகின்றோம். பணத்தை பெற்று கொள்ளவும், அதனை நம்மிடம் வைத்துக் கொள்ளவும் செலவு செய்யவும் விரும்புகின்றோம். நாம் இன்று பயன்படுத்தும் பணம், தாள் நாணயங்களையும், உலோக நாணயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றுக்குப் பௌதிக ரீதியான பெறுமதி இல்லை. அதன் பெறுமதி பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்ய உள்ள ஆற்றலிலேயே தங்கியுள்ளது. அப் பெறுமதி கொள்வனவு ஆற்றல் எனப்படும். உண்மையில் நம் எல்லோருக்கும் பணம் ஒரு அருமையான வளமாகும். இன்றைய உலகப் பொருளாதாரம் பணமின்றி இயங்கமுடியாதது. எனவே, இக் கட்டுரையின் முதல் பகுதி வரலாற்று ரீதியாக பணப் புழக்கத்தினை விபரிபதுடன் இதன் பிற்பகுதி பணத்தின் கருமங்களையும் விளங்குகின்றது.

பண்டமாற்றுக்கு பதிலாக பணப்பயன்பாட்டின் ஆரம்ப காலம் மனித நாகரீகத்தின் முக்கிய கால கட்டமாகும். பணப் பயன்பாட்டின் ஆரம்பம் கி.மு. 630 அளவில் துருக்கியில் ஏற்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. இலங்கையில் ஆரம்ப உலோக நாணய பயன்பாடு கி.மு. 20ம் நூற்றாண்டில் இருந்துள்ளது. "கஹவனு" என அழைக்கப்பட்ட முதலாவது நாணயம் வெள்ளியால் உருவாக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. போர்த்துக்கேயரே இலங்கையில் முதன் முதலாக நாணயத்தாள்களை அறிமுகம் செய்துள்ளனர். பிரித்தானியர் காலத்தில் நாணயத்தாள்களும் உலோக நாணயங்களும் மிகவும் நன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தன. கி.பி. 15ம் நூற்றாண்டில் இலங்கை முழுவதிலும் உலோக நாணயம் பயன்படுத்தப்பட்டமைக்குச் சான்று காணப்படுகின்றது. அவை தங்கம், வெள்ளி, செம்பினால் தயாரிக்கப்பட்டிருந்தன. CIRA என அழைக்கப்பட்ட நாணயம் 15 - 17 நூற்றாண்டுகளுக்கிடையில் பயன்பாட்டில் இருந்ததாக கண்டி யுகத்தில் குறிக்கப்பட்டிருந்தது. SETU என அழைக்கப்பட்ட நாணயம் யாழ்ப்பாண அரசில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பணச் சட்டத்தின் கீழ் மத்திய பணச் சபை பணத்தை வெளியிடும் அதிகாரியாக கருமமாற்றியுள்ளது. 1950ல் மத்திய வங்கி அமைக்கப்பட்ட போது பணத்தை வெளியிடும் அதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. மத்திய வங்கி தனது முதலாவது நாணயத் தாளை 1952 ஜனவரி 4ம் திகதி வெளி யிட்டுள்ளது. அவை ரூபா 1.00, ரூபா 10.00 பெறுமதி கொண்ட நாணயத்தாள் களாகும். அதன் பிறகு ரூபா 1 இலிருந்து ரூபா 2000 வரை பெறுமதி கொண்ட நாணயத்தாள்களாகும். அதன் பிறகு ரூபா 1 லிருந்து ரூபா 2000 வரை பெறுமதி கொண்ட வெவ்வேறு வகை நாணயத்தாள்கள் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு வெளி யிடப்பட்டதும் தற்போது பாவனையில் உள்ளதுமான பணத்தின் பண்புகள் வருமாறு

**பணத்தின் பண்புகள்**

1. பொது அங்கீகாரம் COMMONLY ACCEPTED
2. நீடிய வாழ்வுத்தன்மை DURABLE
3. கொண்டு செல்ல இலகுவாக இருத் தல் EASY TO CARRY (PORTABLE)
4. இலகுவாக இனங்காண முடிதல் EASY TO RECOGNIZE
5. சிறிய அலகுகளாக பிரிக்க முடிதல் DIVISIBLE

**பணத்தின் கருமங்கள்**

பண்டமாற்று ஊடகமாக தொழிற்படல் (Medium of Exchange) மட்டுமே பணத் தின் பணியெனப் பலர் நினைப்பது உண்டு. பெறுமதியை அளவிடும் கருவி (Standard of Value) பெறுமானத் திரட்டு (Stone of Valus) பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம் (Standard of Future) எனும் பணியும் பணத்திற்கு உண்டு என்பதால் பணத்தின் கருமங் கள் நான்கு வகைப்படும்.

**பரிமாற்று ஊடகம்**

பணம் செலாவணி ஊடகமாகும். பண்டமாற்றின்றி பொருட்கள் சேவை களை பெற்று கொள்ள பணம் உதவுகின் றது. பண்டமாற்று முறையில் காணப் பட்ட சிரமங்கள் இன்றி கொடுக்கல் வாங் கல்கள் செய்ய பணம் உதவுகின்றது. இன்று பொருட்கள் சேவைகளின் பெறு மதி விலை மூலமாக குறிப்பிடப்படு கின்றது. அந்த விலையை பணமாக செலுத்திச் சந்தையில் பொருள்களையும் சேவைகளையும் பெற்று கொள்ள முடிகின்றது. எதனை எவ்விடத்தில் கொள்வனவு செய்வது என்பது போன்ற நுட்பமான தெரிவுக்கு இன்று பணம் உதவுகின்றது. தேவை விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு பொருள் சேவைகளை நாம் வாங்கும் போது செலுத்த வேண்டியது பணமேயாகும். அதாவது பொருட்கள் சேவைகளின் பெறுமதியை பணத்தின் மூலமாகவே கொடுத்து முடிக்கின்றோம். இதன்படி பணம் கொடுக்கல் வாங்கலுக்கான, பண்டமாற்றுக்கான ஊடகமாகச் செயற் படுகின்றது எனக் கூறலாம்.

**பெறுமானத்தை அளவிடும் கருவி**

பொருள் சேவைகளின் பெறுமதி பணத்தினால் அளவிடப்படுகிறது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவீடு விலை (PRICE) எனப்படும். எல்லா பொருட்கள் சேவையின் பெறுமதி யும் விலை எனும் கருவியால் அளவிடப் படுவதால் பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் இலகுவாய் அமைகின்றன. வெவ்வேறு பொருள்கள் சேவைகளின் விலைகளுடன் ஒப்பிட முடிகிறது. கணக்கு வைப்பும் இலகுவாகிறது. கணக்கு வைப்பு அலகாகவும் (UNIT OF ACCOUNT) பணம் கருமமாற்றுகின்றது. பொருட்கள் சேவைகளின் பெறுமதி ரூபா, சதம் என கணிய எண் கொண்டு அளவிடப்படுகிறது.

### பெறுமான திரட்டு

பணத்தை சேர்த்து வைக்க முடியும். உலோக தாள் நாணயங்கள் அழிவதில்லை காலங்கடந்து போவதில்லை. பணத்தை சேர்த்து வைத்தால் எதிர் காலத்தில் தேவைகளையும் விருப்பங் களையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு பயன்படுத்த முடியும். பண்டமாற்று முறையில் இவ்வாறு சேர்த்து வைத்தல் என்பது முடியாத காரியமாகும். பொருட்கள் கெட்டுப்போவதாலும் காலங் கடந்து போவதாலும் சேகரித்து வைப் பதில் பயன் ஏற்படமாட்டாது.

### பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம்

பணத்தின் இறுதிப் பணி பிற்போட்ட கொடுப்பனவுக்கு நியமமாகச் செயற்படுத லாகும். எதிர்காலத் திகதியொன்றில் பெறுமதியைத் தருவதாக கூறிப் பொருள் கள் சேவைகளை கொள்வனவு செய்ய வும் கடன் பெறவும் அதனை திரும்பி செலுத்தவும் பணம் உதவியாக இருக் கின்றது. பண்டமாற்று முறையில் இது சிரமமாக இருந்தது.

உசாதுணை:-
பணமும் வங்கியும்
**K.Krunakaran**

## பொன்மொழிகள்

**தண்டனை கொடுப்பதற்குத் தாமதம் செய். ஆனால், மன்னிப்புக் கொடுப்பதற்கு யோசனை கூடச் செய்யாதே.**

**- அன்னை தெரேசா**

**நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால் நல்லது எது. கெட்டது எது என்று தெரியாத நல்லவராய் இருப்பது மிக ஆபத்தானது.**

**- பெர்னாட்ஷா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சா.பிரியதர்சன்
$13^{D}$ com (2019)



# இலங்கையின் பொருளாதாரத்தில் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய கண்ணோட்டம்

### அறிமுகம்

வாழ்க்கையின் சாதாரண நிலைப் பாடுகளை குழப்புகின்றதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினை திருத்துவதற்குமான இய லளவுக்கு அப்பால்பட்ட விருத்திக்கும் காரணமான ஓர் நிகழ்வு அனர்த்தம் என ஓர் உலக சுகாதார நிறுவனம் வரை விலக்கணப்படுத்துகின்றது. அண்மைக் காலங்களில் இலங்கையில் அனர்த் தங்களின் தீவிரம் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிடத்திலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையில் வெள்ளங்கள், சூறாவளிகள் மண்சரிவு கள் மற்றும் வறட்சிகள் போன்றவை இயற்கை மற்றும் தொழில்நுட்ப தூண் டுதல்களினால் ஏற்பட்ட அனர்த்தங்களாக காணப்படுகின்றன. விலங்குகளின் தாக்கங்கள், மின் தாக்கங்கள் கணிசமான மனித உயிர் இழப்புக்களை ஏற்படுத் தியுள்ளன. பௌதிக உட்கட்டமைப்பு மற் றும் மனித வாழ்வின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. இத்தாக்கத்தில் சுனாமிப் பேரழிவு மிக முக்கியமானதாகும். 2004 இன் சுனாமி யைத் தவிர அனர்த்தங்கள் உள்நாட்டு காரணிகளாலும் காலநிலை மாற்றங் களினாலும் ஏற்படுகின்றன.

### அனர்த்தம் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

இலங்கையில் அனர்த்தங்கள் நேரடி யாக தனிநபர் மற்றும் குடியிருப்பாளர் மட்டத்தில் ஆபத்துக்களை ஏற்படுத்து கின்ற வேளையில் பொருளாதார தாக் கங்களையும் எண்ணற்ற சவால்களை யும் தோற்றுவித்துள்ளது.

அவையாவன.

01. உற்பத்திக்கான பௌதீக பாதிப் புக்கள்
02. மரணம் மற்றும் காயங்கள் கார ணமாக தொழிற்படைக்கு இழப்பு
03. சேமிப்பு குறைவடைந்து மனித மற்றும் பௌதீக மூலதனங்களில் முதலீடுகள் குறைவடைந்தமை.
04. பொது மற்றும் தனியார் மூல தனங்கள் அழிவடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாண்மை கைத்தொழில் பணிகளில் தாக்கங்கள்

இயற்கை அனர்த்தங்கள். வேளாண்மை செயற்பாட்டில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் கைத் தொழில் மற்றும் பணிகள் செயற்பாடு களின்மீது சிறிய தாக்கங்களை ஏற் படுத்தியுள்ளன. 2016 மற்றும் 2017 காலப்பகுதியில் இலங்கையின் வேளாண்மைச் செயற்பாடுகள் பாதகமான காலநிலை தாக்கத்தினால் 3.8% வீதத்தில் இருந்து 0.8% மாக வீழ்ச்சி அடைகின்றது.

01. உணவு விலைகளின் அதிகரிப் பின் காரணமாக உள்நாட்டு பண வீக்கத்தில் ஓர் அதிகரிப்பினை ஏற்படுத்தின.
02. சுற்றுலா பயணிகள் மற்றும் வெளிநாட்டு முடுதலீட்டுக்களின் கவர்ச்சி குறைவடைந்தமை.
03. வாழ்க்கைத் தரங்கள் வீழ்ச்சி அடைதல்

மேற்கூறிய நடவடிக்கைகள் அபி விருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின் றது. 2017 காலப்பகுதியில் உள்நாட்டு நெல் உற்பத்தி வீழ்ச்சி காரணமாக இலங்கை 74789 மெட்ரின் தொன் அரி சியை இறக்குமதி செய்ய வேண்டிய இருந்தது. ஆனால் 2016 இல் அரிசி இறக்குமதி 29500 மெட்ரிக் தொன் ஆக இருந்தது.

அனர்த்த நிவாரணம், மின் புனர்நிர் மாண செயற்பாடுகள், மற்றும் சுகாதார பணிகள் மீதான செலவீனங்கள் அதி கரித்தது.

வரவு செலவு திட்டத்தில் சுமைகளை ஏற்படுத்த அனர்த்தங்கள் காரணமாக உள்ளன.

2017 காலப்பகுதியில் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணங்களிற்காக ஏறத்தாழ மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் 0.1% இனை செலவு செய்திருந்தது. நிரம்பல் பக்க காரணிகளால் (நிரம்பல் குறைவு) பொருளாதாரத்தில் உள்ள சமமின்மைகள் நாணயச் கொள்கை யின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு சவாலை உருவாக்கி உள்ளது.

பொதுவாக அனர்த்தங்கள் குறைந் தளவு வரமான குடியிருப்பாளர்கள் மீது அதிகமான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாக வறுமை குறைப்பு வளர்ச்சி ஊக்குவிப்புக்களுக்காக நாடு வலாக்ளை கொண்டு இருக்கின்றது. 2016ம் ஆண்டு குடியிருப்பாளர் வரு மானம் மற்றும் செலவு ஆய்வின் படி நாட்டின் ஏழை மக்களின் எண்ணிக்கை 89174 ஆல் அதிகரித்துள்ளத. வறுமைக் கோடு சற்று உயர் வடைந்துள்ளது.

இலங்கையில் தொழிலாளர் படையில் 25% இற்கு மேற்பட்டோர் வேளாண் மையுடன் தொடர்புடையவர்கள் ஆவார் எனவே நாட்டினுடைய சனத்தொகை யில் பெரும் பகுதியினரின் வாழ்வாதா ரங்களில் காலநிலை சம்பந்தமான அனர்த்தங்கள் பாதிக்கின்றன. எனவே அனர்த்த முகாமைத்துவ மற்றும் தடுப்பு திட்டங்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இயற்கை அனர்த்தங்களின் இடர்நேர்வுகள்

2012 - 2016க்கான பெறப்பட்ட சராசரி உலக இடர்நேர்வு சுட்டிடெண்ணின் அடிப்படையில் 171 நாடுகளுக்கு மத்தியில் இலங்கை இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகளவு முகம்கொடுக்கின்ற தன்மை மட்டு மல்லாது நாட்டினது பலவீன அடிப் படையில் சமாளிக்கும் இட அளவினையும் குறிக்கின்றது. அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை கொண்டு இருக் கின்றது.

## அனர்த்தங்களை குறைப்பதற்கான வழிமுறைகள்

மனித உயிரிழப்புக்கள், பௌதீக சொத் துக்கள் சேதாரமடைந்தன என் பவற்றை இயற்கை அனர்த்தத்துடடன் தொடர்பு பட்ட எதிர்வுகூறல். இயளளவுகளை உயர்த்து வதன் மூலமும் வினைத்திறன் உள்ள முன்னெச்சரிக்கை வழிமுறை மூலமும் செயற் படுத்த முடியும்.

மண்சரிவுக்கான முன்னெச்சரிக்கை குறைகள் உட்பட பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இலங்கை தற்போது மேற்கொண்டுள்ளது.

அனர்த்தங்களை சமாளிப்பதற்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களை இனம்கண்டு முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை பலப் படுத்தவும் அனர்த்த எதிர்வு கூறலை பலப்படுத்தவும் அரசாங்கம் அதிக முத லீட்டை செய்ய வேண்டும்.

பிராந்திய ஒத்துழைப்பு முன்னெச் சரிக்கை முறைகள் மற்றும் அதிக தேவை உடைய அனர்த்த எதிர்வு கூற லுக்காக தீர்வுகளை வழங்கலாம்.

மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக் கின் அதிகரித்த எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அனர்த்தம் இடம்பெற வாய்ப்புள்ள பகுதிகளில் இருந்து அப்பால் மக்கள் மீள்குடி அமர்த்துவது முக்கிய மானதாகும். அனர்த்தங்களை தாங்கிக் கொள்ளும் விதமாக செயற்பாடுகள் வருமாறு.

## நிலப்பாவனை திட்டங்களை மீள் ஆய்வு செய்தல்

இடர்நேர்வு மட்டங்களை அடிப்படை யாக கொண்ட ஒழுங்கு விதிகளை உரு வாக்குவதும் அத்தகைய ஒழுங்குவிதி களை கண்டிப்பாக நடைமுறைப் படுத்துவதும் அவசியம் இடர் அபாயப் பகுதிகளுக்கு மக்கள் மீண்டும் செல்வ தனை தவிர்த்து புதிய இடங்களில் மக் களை குடி அமர்த்துகையில் கிடைக்கக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக கலாசார காரணிகள் வாழ் வாதாரம் என்பவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீர்ப்பாசன அமைப்புக்களை புனர் நிர்மானம் செய்தலிலும் கவனம் செலுத்த வேண்டும். காடழித்தலை குறைத்தல் நீர் மட்டத்திற்கு எதிராக கன்றுகளை நடுதல் ஈரநிலங்களை நீர் அமைத்து தூய்மைப் படுத்தி மறுசீரமைப்பு அபிவிருத்தி செயற் பாடுகளில் நிலத்தடி நீர் அமைப்புக்களுக் கான கவனிப்பை வழங்குதல் போன் றவை இயற்கை மற்றும் மனிதனால் ஏற் புடும் அனர்த்தங்களின் வெளிப்பாட்டை கணிசமாக குறைக்க முயல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை தேசிய திட்டமிடல் திணைக்களம் இடம்அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை மற்றும் பொருத்தமான அமைப்புக்கள் போன்ற அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் திட்டமிடலுக்காக ஆபத்து தகவல்களை வழங்குவதை பலப்படுத்த வேண்டும்.

## அனர்த்தத்தை எதிர்கொள்ளும் முறைகள்

காலநிலைகளை எதிர்கொள்ளக் கூடிய வேளாண்மை நடைமுறைகளின் உற்பத்தியை மாற்றி அமைத்தல் வேண்டும் அசாதாரணமாக குறுகியகால வோளண்மை, மழைநீர், அறுவடை முறைகள், நுண்பாக நீர்ப்பாசனம், காலநிலைக்கு தாக்குபிடிக்கும் வேளாண்மைகளை நடைமுறைப்படுத்தல் உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவ தற்கு களஞ்சியப்படுத்துதல் மற்றும் வழிமுறைகளை அதிகரித்தல் அவசியமானது. வேளாண்மை, மீன்பிடி, காடாக்கல், சுற்றுலாத்துறை மற்றும் வலு உற்பத்தி முறை என்பன அனர்த்தங் களில் பாதிப்பை குறைப்பதற்கு உதவு கின்றது.

குறிப்பாக வோளாண்மை சமூகமே அதிகளவுப் பாதிக்கின்றது. வோளாண்மை சகூகத்தின் இயற்றளவு வளர்ச்சிக்காக அபிவிருத்திக் கொள்கை கள் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டினுடைய அனர்த்த முன்னாயத்த செயற்பாடுகளானவை குடிவெளியேற்றல் நடவடிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக மக்களிற்கு அறிவூட்டல் செயற்பாடுகளையும் பயிற்சிகளையும் வழங்கல் வேண்டும். சமூக ஊடகங்கள் முன் எச்சரிக்கையான சமூக நடவடிக்கைகளை பயனுள்ள முறையில் பரப்புவதற்கு செயலாள குழுக்களை ஒன்றிணைக்க வேண்டும்.

## முடிவுரை

இலங்கையில் அண்மைக்காலமாக நடந்த அனர்த்தங்களின் மூலமான அனுபவமானது மோசமான எதிர்வுகூறல் மற்றும் முன்னெச்சரிக்கை குறைகளை மாத்திரமல்லாது இடர் முகாமைத்துவ கட்டமைப்புக்கிடையில் அரச நிறுவனங்களின் வகிபாகம் அனர்த்தம் தொடர்பான தரவுகளை வழங்குவதில் பற்றாக்குறை மற்றும் குடியேற்ற செயற்முறையின் பிரச்சினைகள் முக்கியமானது.

அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு உள்ளூர் சமூகம் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆர்வலர்கள் அனைவரும் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பில் ஈடுபடவேண்டும்.

நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடிக்கடி நிகழும் அனர்த்தங்கள் தடையாக உள்ளன. அனர்த்தங்களை முற்றாக தவிர்க்க முடியாதாயினும் அதனால் ஏற்படும் ஆபத்துக்களின் தன்மையை ஓரளவிற்கு குறைக்க முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தின் நேர் மனப்பாங்குகளை பௌதீக தொழில்நுட்ப தேவைப்பாடுகளை மனிதரால் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பதற்கு வழிவகுக்கும்.

**மத்திய வங்கி ஆட்டறிக்கை 2017**
**பொருளியல் ஆசிரியர்**
**அறிவுரைப்பு வழிகாட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I.Piratheepan
13C Com (2019)



# இலங்கையின் அண்மைக்கால தேசிய கணக்குகள் தொடர்பான எண்ணக்கருக்கள்

**அறிமுகம்**

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கோட்பாட்டு ரீதியான முன்னேற்றங்களினை சேர்த்து தேசிய கணக்குகளை தொகுத்தல் செயன்முறை ஒரு கணிசமான அளவு மேம்பாடுகளை காட்டுகின்றது. இதன்படி தொகை மதிப்புப்புள்ளி விபரத்திணைக்களம் இலங்கையில் தேசிய கணக்குகளைத் தொகுத்தல் தொழில்நுட்பங்களினை சர்வதேச பின்னணியில் இணைத்து செல்லும் விதத்தில் பல்வேறு வழிமுறைகளை எடுத்துள்ளது.

தொகை மதிப்புப்புள்ளி விவரத்திணைக்களம் தேசிய கணக்கு தொகுப்பு செயன்முறையை தரம் உயர்த்துவதை 2015 தொடக்கம் முன்னெடுத்துள்ளது. தரம் உயர்த்தலில் செய்யப்பட்ட பிரதான மாற்றங்கள் அடியாண்டை 2002ல் இருந்து 2010ற்கு திருத்துதல் பன்பாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4ற்கு அமைவாக பொருளாதாரத்தில் அனைத்து நடவடிக்கைகயையும் உள்ளடக்குவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கத்தினை விபரிக்கின்றது. (13 - 48) செலவு அணுகுமுறையின் கீழ் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியினை மதிப் பீடு செய்தல் உற்பத்தி மற்றும் செலவு அணுகுமுறைக்கு ஒத்ததாக வருமான அணுகு முறையின் கீழ் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்.

அடிப்படை விலை எண்ணக்கருவினைப் பயன்படுத்தி உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை மதிப்பீடு செய்தல். அடியாண்டை 2010ற்கு திருத்துதல் நாட்டின் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது நிலையான விலைகளினைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது. இந் நோக்கத்திற்காக குறித்த பொருளாதார தளம்பல்களுடனான பொருத்தமான அடியாண்டை இனங்காண்பது மிகவும் முக்கியமானது.

ஏனெனில் நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுகையில் இவ்வாண்டின் விலைகள் நிலையானதாக கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய கணக்கீடு என்றால் என்ன?

ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி, வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சலின் பெறுமதியினை கணிப்பீடு செய்வது தேசிய கணக்கீடு ஆகும். பொருளாதாரத்தில் இடம்பெறும் பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகளை முற்றாக விளக்கலாம்.

* உற்பத்தி அணுகுமுறை
* வருமான அணுகுமுறை
* செலவிட்டு அணுகுமுறை

இம்மூன்று அணுகுமுறைகளையும் வருமான சுற்றோட்ட வரைபடத்தின்மூலம் விளக்கலாம்.

### * உற்பத்தி அணுகுமுறை

உற்பத்தி பாய்ச்சலை அடிப்படையாக கொண்டு தேசிய உற்பத்தியை கணிப்பிடுதல் உற்பத்தி அணுகுமுறை எனப்படும். உற்பத்தி அணுகுமுறை பருமன் மொத்த உள்நாட்டு உற்பத்தி எனும் எண்ணக்கருவினால் வெளிப்படுத்தப்படும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

ஒரு நாட்டின் பொருளாதார பிரவேசத்தினுள் வதிவிட நிறுவன அலகுகள் குறித்த காலப்பகுதியில் (1 வருட காலம்) உருவாக்கிய கூட்டிய பெறுமதிகளின் அனைத்து இறுதி பொருட்கள் வேலைகளின் பெறுமதி சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படுவது மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

உற்பத்தி அணுகு முறை தொடர்பான சில எண்ணக்கருக்கள் வதிவிடத்தன்மை ஒரு வருடத்திற்கு குறைந்த காலப்பகுதியில் வெளிநாட்டில் வாழும் அல்லது சேவையாற்றும் அதிகாரிகள், சுற்றுலாப்பயணிகள், கலைஞர் மற்றும் கல்லி மான்கள் விமானம், கப்பல்களில் சேவையாற்றும் பணிக்குழாம் வெளிநாட்டில் கல்வி பயிலும் மாணவிகள் வெளிநாட்டுத் தூதரங்களில் பணியாற்றும் சுதேசிகள் பல் கணிப்பீடு / இரட்டை எண்ணல் குறிப்பிட்ட ஒரு வருடத்திற்கான தேசிய உற்பத்தியினை கணிப்பிடும் போது மூலப்பொருள், இடைநிலைப் பொருள், இறுதிப் பொருள் பெறுமதியினை ஒன்றாகச் சேர்த்தால் அப் பெறுமதி பலமுறை உற்பத்திப் பெறுமதிக்குள் சேர்க்கப்படல் பல்கணிப்பிட்டு குறைபாடு ஆகும்.

உ+ம்

தைக்கப்பட்ட ஆடை உற்பத்திப் பெறுமதியினுள் துணியின் உற்பத்திப் பெறுமதியின் நூலின் உற்பத்திப்பெறுமதி பஞ்சின் உற்பத்திப் பெறுமதியும் அடங்கி இருக்கும் போது இவை ஒவ்வொன்றினது உற்பத்திப் பெறுமதிகள் தேசிய கணக்கிட்டில் சேர்க்கும் போது பல் கணிப்பிட்டு பிரச்சினை ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப் பொருள்

உற்பத்தி செயற்பாட்டின் இறுதி கட்டத்தையும் தாண்டி நுகர்வுக்கும் முதலிட்டிற்கும் பயன்படுத்துவதற்காக உள்ள பொருட்கள் சேவைகள் ஆகும். இவை இனிமேலும் உற்பத்தி செயற்பாட்டிற்கு உட்படமாட்டாது.

இடைநிலைப் பொருள்

உற்பத்தி செயற்பாட்டில் இன்னும் உள்ளீடாக உள்ள பொருட்கள், சேவைகள் ஆகும். பங்கணிப்பீட்டு பிரச்சினையை தீர்ப்பதற்கு இரண்டு முறைகள் பயன்படுத்த லாம்

1. இறுதி உற்பத்திப் பெறுமதி முறை
2. கூட்டப்பட்ட பெறுமதி முறை

இறுதி உற்பத்தி முறை

தேசிய உற்பத்தியை கணிப்பிடும் போது மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்திப் பெறுமதிகளை கணிப்பீட்டில் சேர்க்காமல் இவற்றை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட இறுதி பொருட்கள் சேவைகளை மட்டும் கருத்திற் கொள்வதனைக் குறிக்கும் இது ஒரு கோட்பாடு ரீதியான எண்ணக்கரு ஆகும்.

| நிறுவனம் | உற்பத்தி விபரம் | மொத்தப் பெறுமதி | நுகர்வு இடைத்தர கொடுப்பனவு | கூட்டிய பெறுமதி |
|---|---|---|---|---|
| A | பஞ்சு | 10000 | .......... | 10000 |
| B | நூல் | 15000 | 10000 | 5000 |
| C | துணி | 22000 | 15000 | 7000 |
| D | ஆடை | 30000 | 22000 | 8000 |
| | | 77000 | 47000 | 30000 |
| | | 77000 | 47000 | 30000 |

கூட்டிய பெறுமதி / சேர்க்கப்பட்ட பெறமதி

மொத்தக் கூட்டிய பெறுமதியானது (Gvo) தேசிய கணக்கீட்டில் முக்கியமான எண்ணக்கருவாகும். கூட்டிய பெறுமதி என்பது உற்பத்தி செயன்முறையில் புதிதாக உருவாக்கப்படும் செயன்முறையாகும்.

கூட்டிய பெறுமதியைக்காண, உற்பத்தியின் மொத்தப் பெறுமதியிலிருந்து இடைநிலை உள்ளீடுகளின் பெறுமதியை நீக்க வேண்டும்.

முடிவுப் பொருட்கள் வெளியீட்டின் மொத்தப் பெறுமதியிலிருந்து (உ+ம் ஆடை = 77000/=) இடைநிலை உள்ளிடுகளின் (இடைநிலை நுகர்வு, Intermediate Consumption - IC) பெறுமதியைக் (உ+ம் பஞ்சு, நூல், துணி = 47000) கழிப்பதன் மூலம் கூட்டிய பெறுமதியைக் கணிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த உள்நாட்டு உற்பத்தியை சந்தை விலைகளில் கணிப்பிட வேண்டியுள்ளதால் மொத்தக் கூட்டிய பெறுமதியுடன் உற்பத்திகள் மீதான தேறிய நேரில் வரிகளை கூட்டுவதன் மூலம் அப்பெறுமதி கணிப்பிடப்படும்.

உற்பத்தி மீதான தேறிய நேரில் வரிகள் = பொருட்கள சேவைகள் மீதானவரி - பொருட்கள் சேவைகள் மீதான மானியம்

உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதி கணிப்பிடப்படும் முறைகள் உள்ளன.

1. உற்பத்தி மூலம்

2. வருமானம் மூலம்

| உற்பத்தி அடிப்படை | | வருமான அடிப்படை | |
|---|---|---|---|
| உற்பத்தியின் பெறுமதி (சந்தைக்கு செல்லமுன்) | 9500 | உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவு | |
| (கழ)<br>மூலப்பொருட்கள் 3000<br>சேவை செலவுகள் 1500 | | வாடகை 2000<br>சம்பளம் 1000<br>வட்டி 800<br>இலாபம் 500 | 4300 |
| மொத்தம் | 4500 | காரணியல்லாக் 700<br>கொடுப்பனவு பெ.தேய்வு | 700 |
| மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி | 5000 | மொத்தக்கூட்டப்பட்ட பெறுமதி | 5000 |

உற்பத்தி எல்லை என்றால் என்ன?

பொருளாதார உற்பத்திச் செயற்பாடு மற்றும் பொருளாதாரமல்ல உற்பத்திச் செயற்பாடு என்பவற்றை வேறுபடுத்தி காட்டுவது ஆகும்.

உற்பத்தியின் அடிப்படையில் உற்பத்தியாளர்களை முன்றுபிரிவாக பிரிக்க முடியும்

சந்தையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்

சந்தையை அடிப்படையாக்கொள்ளாத வேறு உற்பத்தியாளர்கள்

வீட்டுத்துறை நடவடிக்கைகளுடன் தொடர்பான உற்பத்தியாளர்கள்

தேசிய கணக்கிட்டினுள் உற்பத்தி எல்லையில் உள்ளடக்க வேண்டிய உற்பத்தி செயற்பாடுகள்

1. சந்தையில் விற்பனையாகும் அனைத்துப் பொருட்கள், சேவைகள்

2. உற்பத்தி செய்த நிறுவனம் தவிர ஏனைய நிறுவன அலகுகளுக்கான உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள்.

3. தங்களுடைய இறுதி நுகர்வுக்காகவே மூலதன திரட்டலுக்காகவோ, உற்பத்தி செய்து அதன் உற்பத்தியாளர் மூலம் தமக்காக வைத்துக் கொண்ட அனைத்து பொருட்கள்.

4. தம்மிடம் உள்ள வீடுகளினால் பெற்றுத் தரப்படும் வதிவிடவசதிகள்.

5. சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப சேவைகளும் தனிப்பட்ட சேவைகளும்

6. தங்களுடைய நுகர்வு கருதி விவசாய உற்பத்திகள் அலைகளைச் சேமித்து வைத்துக் கொள்ளல், கருவிகள் மூலம் உணவுகள் பெற்றுக் கொள்ளல், பழங்கள் பெற்றுக்கொடுத்தல், விறகுவெட்டுதல், வேட்டையாடுதல் மற்றும் மீன்பிடித்தல்

7. விவசாய உற்பத்திகளைத் தயாரித்தல், நெல் இடித்து அரிசி ஆக்கல் அரிசி இடித்து மாவாக்கிக் கொள்ளுதல், இறைச்சி, மீன் பதனிடல், பழங்களை போத்தலில் அடைத் தல், பாலைத் தயிராக மாற்றுதல் பாய்கள் இழைத்தல் ஆகியவை

8. துணி நெய்தல், உடைகள் தைத்தல், தொப்பி மற்றும் வீட்டுப் பொருட்கள் செய்தல்

9. நீர் பெற்றுக்கொள்ளல், சிறு ஓடைகள், நீர் வீழ்ச்சி மூலம் நீர் பெற்றுக் கொள்வதற்காக சிறிய செயற்திட்டங்களை தயாரித்தல்

வீட்டுத்துறையினுள் இடம்பெறும் பொருள் உற்பத்திச் செயற்பாடுகள் உற்பத்தி எல்லைக்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் அவ்வீட்டுத்துறை உறுப்பினரால் தன்னுடைய தனிப்பட்ட நுகர்வுக்காக நிறைவேற்றப்படும் சேவைகள்.

உ + ம் வீட்டு உறுப்பினருக்கு உணவு சமைத்தல்
குழந்தைகளை பராமரித்தல்
வீட்டில் வலது குறைந்தோரையும், முதியவர்களையும் பாதுகாத்தல்
வீட்டை அழகுபடுத்தும் சுத்தம் செய்தலும்

மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணக்கிடும் போது அவதானத்துக்கு உட்படாத பொருளாதார செயற்பாடுகள்

1. மறைவான பொருளாதார நடவடிக்கைகள்
2. சட்ட ரீதியற்ற பொருளாதார நடவடிக்கைகள்

மறைவான பொருளாதார நடவடிக்கை என்பது முறையாகக் கணக்கிட்டுக்கு உட்படாத சட்டரீதியான பொருளாதார செயற்பாடுகள் ஆகும்.

உ+ம் குறைந்த பட்ச சம்பளம் வழங்குதல்
உயர்ந்த பட்ச வேலை நேரம் பற்றிய சட்டம்

சட்ட ரீதியற்ற பொருளாதார செயற்பாடுகள் இரண்டு உண்டு.

1) சட்டத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல்

உ + ம் மதுபானம், போதைப்பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) சில சட்டரீதியிலான பண்டங்களும், சேவைகளும் சட்டரிதியாகப் பதிவு செய்யபடாத நபர்களினால் உற்பத்தி செய்யப்படுவதும் விநியோகித்தலும்

உ + ம் பதிவு செய்யப்படாத வைத்திய சேவை

மொத்த உள்நாட்டு உற்பத்திக்குள் உள்ளடங்காத பயன்தரு பொருளாதார நடவடிக்கைகள்

1. கொடுப்பனவு இன்றி வீட்டினுள் நிறைவேற்றப்படும் மனையாள் சேவைகள்

2. இலவசமாக கிடைக்கின்ற இயற்கை வளங்கள் (நீர், நிலம்)

3. மனித உழைப்பின்றி விருத்தியடையும் இயற்கை வளங்கள் (காடு)

4. கற்றலும் ஓய்வும்

5. விலைமாற்றம் அல்லது இயற்கை வளர்ச்சியால் வளங்களில் ஏற்படும் பெறுமதிமாற்றம்

தேசிய கணக்கீடு தயாரிக்கையில் கைவிடப்படுகின்ற பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1. பயனற்ற சந்தைக் கொடுக்கல், வாங்கல்கள்

2. மாற்றல்

3. பணப்பத்திரங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்

4. பாவிக்கப்பட்ட பொருட்கள் விற்பனையுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்

கைத்தொழில் அடிப்படையிலான வகைப்பாடு

நிறுவனத்துறை அடிப்படையிலான வகைப்பாடு

இலங்கையின் நியம கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைகின்ற தலைப்புக்கள் வருமாறு

1. விவசாயம், கூட்டுத்தொழில் மற்றும் கடற்றொழில்
2. சுரங்கத்தொழில், உற்பத்திக் கைத்தொழில், மின்சாரம், நீர், உற்பத்தி நடவடிக்கைகள்
3. கட்டவாக்கம்
4. வியாபாரம் போக்குவரத்து சேவைகள் தங்கியிருத்தல் மற்றும் உணவுச் சேவைகள்
5. தகவல் தொடர்பாடல்
6. நிதிமற்றும் காப்புறுதி சேவை
7. வீட்டு உரிமை மற்றும் சொத்து வியாபரம்
8. தொழில் விஞ்ஞான தொழில்நுட்ப நிர்வாக மற்றும் உதவிச் சேவைகள்
9. வேறு சேவைகள்

நிறுவன அடிப்படையிலான வகைப்பாட்டில் உள்ளடக்கப்படுபவை

1. நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள்
2. நிதிக் கூட்டுத்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரசதுறை
4. இலாபநோக்கமற்ற குடும்பத்துறைக்காகச் சேவை வழங்கும்துறை
5. வீட்டுத்துறை

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதிக் கணிப்பீடுக்காக வேறுபட்ட விலைகள் காணப்படும் அவை பின்வருமாறு

1. அடிப்படை விலை
2. உற்பத்தியாளர் விலை
3. கொள்வனவாளர் விலை

அடிப்படை விலை = உற்பத்தியாளனின் விலை - உற்பத்தி மீது விதிக்கப்படும் தேறிய வரிகள்

உற்பத்தியாளரின் விலை = அடிப்படைவிலை + உற்பத்தியின் மீதான வரி - உற்பத்தி மீதான மாயினம்

கொள்வனவாளன் விலை = உற்பத்தி விலை + இடைத்தரகர்களால் அறவிடப்படும் வர்த்தக தீர்வை மற்றும் போக்குவரத்து செலவு + நுகர்வோர் மீதான வரி - அரசின் நுகர்வோர் மானியம்

மொத்த உள்நாட்டு உற்பத்தி எப்போதும் சந்தை விலையில் மதிப்பீடு செய்யப்படும்.

ொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி = நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி x 100 - நிலையான விலையில்மொத்த உள்நாட்டு உற்பத்தி

மொத்த உள்நாட்டு உற்பத்தி = கூட்டப்பட்ட பெறுமதி + தேறிய வரிகள்

தேறிய உள்நாட்டு உற்பத்தி

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியிலிருந்து நிலையான மூலதன நுகர்வை கழித்து பெறப்படும் பெறுமதி ஆகும்.

ஒரு நாட்டில் பொதுவாக நிதியாண்டினுள், உற்பத்தி செய்யப்பட்ட எல்லாம் முடிவுப் பொருட்களும் சேவைகளினதும் பெறுமதியிலிருந்து ஒரு நபருக்கு கிடைக்கும் பெறுமதி தனி நபர் மொத்த தேசிய உற்பத்தி ஆகும்.

$$\text{மொத்த உள்நாட்டு தலா உற்பத்தி} = \frac{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}}$$

**மொத்த தேசிய வருமானம்**

ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் மொத்த உள்நாட்டு வருமானத்துக்கும் வதிவிடமற்ற குடியிருப்பாளரால் உழைக்கப்படும் முதனிலை வருமானம் அல்லது தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானத்தினைக் கூட்டும் போது கிடைக்கும் பெறுமதி மொத்த தேசிய வருமானம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம்

தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம் = வெளிநாட்டிலிருந்து பெற்ற முதனிலை வருமானம் - வெளிநாடுகளுக்கு கொடுத்த முதனிலை வருமானம்

தேறிய தேசிய உற்பத்தி என்பது மொத்த தேசிய வருமானத்திலிருந்து நிலையான மூலதன நுகர்வை கழித்து பெறும் பெறுமதி ஆகும்.

தேறிய தேசிய உற்பத்தி = மொத்த தேசிய வருமானம் - நிலையான மூலதனநுகர்வு

வருமான அணுகுமுறையில் தேசிய கணக்குகளை தயாரித்தல்

மொத்த உள்நாட்டு வருமானம்

சகல உற்பத்தி நடவடிக்கைகளுக்கு காரணமாகவும் உற்பத்திக் காரணிகள் மூலம் உழைக்கப்படும் வருமானக் கூறுகளின் கூட்டு மொத்தம் உள்நாட்டு உற்பத்தியின் மூலம் உருவாகின்ற மொத்த உள்நாட்டு வருமானமாகும்.

இலங்கையின் மொத்த உள்நாட்டு வருமானக் கூறுகள்

1. ஊழியர் சேவை வருமானம்
2. மொத்த தொழிற்பாட்டு மிகை
3. கலப்பு வருமானம்
4. நிலையான மூலதன நுகர்வுகள்
5. உற்பத்தி மீதான வேறு வரிகள்

மேலுள்ள கூறுகளின் கூட்டுத்தொகை அடிப்படை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

ஊழியர் வருமானம்

சம்பளம் மற்றும் வேதனங்கள் வேலைக் கரூனரினால் பெற்றுக்கொடுக்கப்படும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு நிதி, நோய் காலத்தில் வேலையின்மையின் பொது மற்றும் ஓய்வு பெறும்போது தொழில தருனரினால் பெற்றுக்கொடுக்கப்படும் நிதியங்கள் ஆகும்.

தொழிற்பாட்டு மிகை

கம்பனிகள் மூலம் உருவாக்கப்படும் வருமானம் ஆகும். இதில் வட்டி, வாடகை வருமானம் என்பன உள்ளடங்கும்.

கலப்பு வருமானம்

வீட்டுத்துறையினரால் உரிமைகொள்ளப்பட்ட அல்லது பங்குடமையாக நடைமுறைப்படுத்துகின்ற அல்லது கம்பனியல்லாத முயற்சியாளர்களால் உருவாக்கப்படும் வருமானம் ஆகும்.

நிலையான மூலதன நுகர்வு

உற்பத்தி செயற்பாட்டின் போது மூலதனச் சொத்துக்களின் மீளுருவாக்கத்திற்காக செய்யப்படும் செலவாகும்.

வருமான அணுகுமுறை தொடர்பான பிரதான எண்ணக்கருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த உள்நாட்டு வருமானம்

குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருளாதாரத்தின் உற்பத்தி செயற்பாட்டிற்கு பங்கு பற்றும் அனைத்து உற்பத்தி சாதனங்களுக்கு கிடைக்கும் வருமானங்களுக்கு நிலை யான மூலதன நுகர்வினை சேர்ப்பதால் மொத்த உள்நாட்டு வருமானம் பெறப்படும்.

தேறிய உள்நாட்டு வருமானம்

மொத்த உள்நாட்டு வருமானத்திலிருந்து நிலையான மூலதன நுகர்வை கழிப்பதன் மூலம் தேறிய உள்நாட்டு வருமானம் பெறப்படும்.

செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்

தேசிய வருமானத்துக்கு தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றங்களை கூட்டும்போது பெறப்படும் பெறுமதி ஆகும்.

வீட்டுத்துறை வருமானம்

தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறைக்கு கிடைக்காத வருமானங்களை நீக்கி தேசிய வருமானத்துக்குள் உள்ளடங்காத வீட்டுத்துறைக்கு கிடைக்கும் வருமானங் களை கூட்டிப் பெறப்படும்.

வீட்டுத்துறைக்கு கிடைக்காத வருமானங்கள்

மூலதன நுகர்வு

பகிரப்படாத கம்பனி இலாபங்கள்

கம்பனி வரி

சமூக பாதுகாப்புக்கான பங்களிப்பு நிதி

அரசாங்க சொத்து வருமானம்

தேசிய வருமானத்தில் உள்ளடங்காத வீட்டுத்துறைக்கு கிடைக்கப்பெறும் வருமானங்கள்.

1. தேறிய வெளிநாட்டு தனிநபர் இரண்டாம் நிலை வருமானம்
2. ஓய்வூதியம்
3. அரச கடன்களுக்காக வீட்டுத்துறைக்கு கிடைக்கும் வட்டி
4. வீட்டுத்துறைக்கு கிடைக்கும் ஏனைய மானியங்கள்

செலவிடத்தக்க வீட்டுத்துறை வருமானமென்பது வீட்டுத்துறை வருமானத்திலிருந்து தனிநபர் வருமானவரியை கழித்த பின் பெறப்படும் பெறுமதியாகும்.

1. மொத்த உள்நாட்ட செலவு என்றால் என்ன?

பொருளாதாரத்தில் குறிப்பிட்ட தொரு காலப்பகுதியில் உற்பத்தி செய்ய பண்டங்களினைக் கொள்வனவு செய்வதற்காக மொத்த செலவுகளை கூட்டுவதன் மூலமாகும்.

2. மொத்த உள்நாட்டு செலவு மூலங்கள் முன்று வடிவில் காணப்படும் அவையாவன.

1. வீட்டுத்துறையின் நுகர்வுச் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரச நுகர்வுச் செலவு

3. மொத்த முதலீட்டுச் செலவு

இறுதி நுகர்வு செலவை, தனிப்பட்ட நுகர்வுச் செலவு மற்றும் அரச நுகர்வுச் செலவு என இரு பகுதிகளாக பாகுபடுத்தி நோக்க முடியும்.

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் என்பது உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கு சேர்க்கப்படும் நீண்டகால மூலதன பொருட்களின் மொத்தமாகும்.

இதில் மூலதன தேய்வும் உள்ளடக்கப்படும்

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் மூன்று வகைப்படும்

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம்

இருப்பு மாற்றம்

பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம்

மொத்த உள்நாட்டு நிலையான மூலதனமாக்கம் = கட்டவாக்கம் + பெறிகள் கருவிகள் மற்றும் ஆயுதமுறைமை போக்குவரத்து கருவிகள் + ஆக்கம் மற்றும் ஆயுதமுறைமை

தகவல் மற்றும் தொழில்நுட்ப கருவிகள் - உயிரியல மூலப் பொருட்கள் + அறிவுசார் ஆதன உ/தி

செலவீட்டு அணுகுமுறையின் மூலம் உள்நாட்டு உற்பத்தி கணிப்பீடு

பொருளாதாரத்தில் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் உற்பத்தி செய்த பண்டங்களினால் கொள்வனவு செய்வதற்காக செய்யப்பட்ட மொத்தச் செலவுகளை கூட்டுவதன் மூலம் கணிப்பிடப்படும்.

மொத்த உள்நாட்டு செலவு மூலகங்கள் மூன்று வடிவங்களாக காணப்படும் அவையாக

1. வீட்டுத்துறையின் நுகர்வுச் செலவு

2. அரச நுகர்வுச் செலவு

3. மொத்த முதலீட்டுச் செலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1) இறுதி நுகர்வுச் செலவு | | 500 |
| 1.1 வீட்டுத்துறை நுகர்வுச் செலவு | 375 | |
| 1.2 இலாப நோக்கமின்றி வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் கடன் | 100 | |
| 1.3 அரசின் நுகர்வுச் செலவு | 25 | |
| 2) மொத்த உள்நாட்டு முலதன ஆக்கம் | | 800 |
| 2.1 மொத்த நிலையான முலதன ஆக்கம் | 400 | |
| 2.2 இருப்பு மாற்றம் | 250 | |
| 2.3 பெறுமதியில் ஏற்படும் மாற்றம் | 150 | |
| 3) சந்தை விலையின் படி மொத்த உள்நாட்டு செலவு | | 1300 |
| 4) தேறிய ஏற்றுமதி | | 200 |
| 4.1 ஏற்றுமதி | 500 | |
| 4.2 இறக்குமதி | 300 | |
| 5) சந்தை விலை அடிப்படையில் மொத்த உற்பத்தி (3,4) (புரழ) | | 1500 |
| 6) சந்தை விலை அடிப்படையில் மொத்த தேசிய வருமானம் (5,7) | | 1400 |
| 7) தேறிய வெளிநாட்டு வருமானம் | | - 100 |
| 7.1 வெளிநாட்டு காரணி வருமானம் பெறல் | 800 | |
| 7.2 வெளிநாட்டு காரணி வருமானம் கொடுத்தல் | 900 | |
| 8) சந்தை விலையில் செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் (6,9) | | 1650 |
| வெளிநாட்டுத் தேசிய நடைமுறை மாற்றல் | | 250 |
| வெளிநாட்டு நடைமுறை மாற்றம் பெறுக | 300 | |
| வெளிநாட்டு நடைமுறை மாற்றல் செலுத்துக | 50 | |

$I = GDCE + X - m$

$I = SD$

GDCE = மொத்த உள்நாட்டு முலதன ஆக்கம்

I = மொத்த முதலீடு

மொத்த வளங்கள் பயன்படுத்தும் முறை வளப்பயன்பாடு ஆகும்.

இறுதி நுகர்வுச் செலவு

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

பண்டங்களின் காரணி அல்லாத பணிகளின் இறக்கு மதி

மொத்தம் உள்நாட்டு செலவு 1300

பொருட்காரணி அல்லாத பண்டங்களின் ஏற்றுமதி 500

வளப்பயன்பாடு 1800

உசாத்துணை நூல்

பொருளியல் ஆசிரியர் வழிகாட்டி நூல் தரம் 12

மத்திய வங்கி ஆண்டறிக்கை 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி சி.பாலகிருஸ்ணன்
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# எதிர்கால வங்கித் தொழிலில் ஏற்படவிருக்கும் தொழில் நுட்ப மாற்றம்

வங்கித் தொழிலானது மரபு சார்ந்ததிலிருந்து டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்திற்கு மாற்றமடைந்துள்ளது. தொழில் நுட்பமானது வாடிக்கையாளர்களின் தேவை களுடன் பின்னிப்பிணைந்திருப்பதனால் அது பாரம்பரிய வங்கித்தொழில் முன்னொரு போதும் காணப்படாத வாய்ப்புக்களை வழங்கக்கூடியதான டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சகாப்பதத்திற்கு வங்கிகள் மாற்றமடைவதற்கு இட்டுச் செல்கின்றது. நடமாடும் பணப்பைகள், இலத்திரணியல் பணப்பைகள், முற்கொடுப்பனவு அட்டைகள்,தொடர்பற்ற அட்டைகள், மணிக்கூட்டு பட்டிகளுக்கூடான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட மாற்று வழி ஏற்பாடுகள் கவர்ச்சி மிக்கவனவாக காணப்பட்டாலும் சிலர் வங்கிக்கு நேரடியாக செல்லும் மனப்போக்கு காணப்படுகின்றது.

## எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் தொழில் நுட்பமாற்றம்

பின்டெக் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நிறுவனங்கள் நிதிச்சேவைகளில் நுழைவதற்கான தடைகளைக் குறைப்பதற்கான உள்ளாந்த வளத்தை கொண்டிருப்பதுடன் தகவலினால் தூண்டப்படும் நிதிச்சேவைகள் மீது தங்கியிருக்கும் தன்மையை உயர்த்தி புதிய வர்த்தக மாதிரிகளின் எழுச்சியைத் தூண்டுகின்றது. பின்டெக் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் நிறுவனங்களின் துரித வளர்ச்சி மாற்றமானது வங்கிகளின் வர்த்தக மாதிரி களை அதிக சவால்மிக்கதும் போட்டித்தன்மை மிக்கதாகவும் மாற்றியிருக்கிறது.

## தொழில் நுட்பங்களின் வளர்ச்சி

அண்மைக்காலங்களில் வங்கித்தொழில் துறையானது வளர்ந்து வருகின்ற திறந்த வங்கித்தொழில், க்லவுட் கணணிப்படுத்தல், இ-நுழைவும் மற்றும் உறுதிப்படுத்தலும், மெய்நிகர் நாணயம், பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பமும் சங்கிலித்தொடர் பதிவேடுகளும் ஆகிய தொழில்நுட்பங்களை நோக்கி கவரப்பட்டுக் காணப்படுகின்றது.

திறந்த வங்கித் தொழிலில், மூன்றாம் தரப்புப் பிரயோகங்கள், பிரயோகச் செய்நிரலாக்க இடைமுகங்களுக்கூடாக இணங்கப்பட்ட வாடிக்கையாளர் தரவுகளை அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்லவுட் கணணிப்படுதல் என்பது கணணி செயன்முறைப்படுத்துகின்ற வளங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, நுகர்வு செய்யப்படுகின்றன மற்றும் பகிரப்படுகின்றன என்பவற்றிலுள்ள மாறுதலொன்றாகும்.சேவை வழங்குனர்கள் தரவு மையங்களை வழங்குகின்றமையினால் வங்கிகள் தங்களது கோரிக்கைகள் மீதான செயன்முறைப்படுத்தல் மற்றும் சேமிப்பு வசதிகளின் அணுகுவதற்காக சொந்தத் தரவு மையங்களைப பேண வேண்டிய தேவைப்பாடு இல்லை. க்லவுட் கணணிப் படுத்தலானது செலவுச்சிக்கனம், செயற்பாட்டு நெகிழ்வுத் தன்மை மற்றும் உயர்ந்த பாதுகாப்பு என்பவற்றை வழங்குகின்றது.

வங்கிகள் தொழில்நுட்பம் மீது தங்கி இருப்பதனாலும் வாடிக்கையாளர்கள் குறைந்தது ஒரு முறையேனும் வங்கிக்குச் செல்ல விரும்பாதமையினாலும் வாடிக்கையாளர்களின் இலத்திரனியல் நுழைவு தேவைமிக்கதாக மாறி வருகின்றது.

மெய்நிகர் நாணயம் என்பது மறையீட்டியலைப் பயன்படுத்துகின்ற பரிமாற்று ஊடகமாக தொழிற்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சொத்தொன்றாவதுடன் மத்திய வங்கியுடன் தங்கியிராது சுதந்திரமான முறையில் செயற்படுகின்றது.

பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் என்பது பங்குபற்றுநர்கள் பேரேட்டின் ஒரே மாதிரியான சொந்த பிரதியினைப் பெறக்கூடிய வலையமைப்பு முழுவதும் பகிரக்கூடிய சொத்து தரவுத்தளமாகும். இணைப்புச் சங்கிலி தொடர் பதிவேடுகள் என்பது சங்கிலித் தொடராக தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பகிரப்பட்ட பேரேட்டு தொழில் நுட்பத்தின் மாறுபாடொன்றாகும்.

## செயற்கை மதிநுட்பமும், பாரிய தரவுப் பகுப்பாய்வுகளும்!

செயற்கை மதிநுட்பமானது, முன்னர் மனிதனால் செய்யப்பட்ட தொழிற்பாடுகளை கணணி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பு கொள்ளவும் அறியவும் மிகத்துரிதமானதும் மிகத்துல்லியமான முடிவுகளை மேற்கொள்ளவும் இயலச் செய்துள்ளது.இது படங்கள், குரற் பதிவுகள் மற்றும் சமூக ஊடக நடத்தைகள் போன்ற கட்டமைக்கப்படாத தரவுகளினுடைய பகுப்பாய்வை அனுமதிக்கும் பெரிய தரவு பகுப்பாய்வின் அபிவிருத்திகளால் பூரணப்படுத்துகின்றது.

## வங்கித்துறையானது தொழில்நுட்பத்தில் தங்கியிருப்பதால் ஏற்படும் இடர்பாடுகள்

பணம் தூயதாக்கல், வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளல் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியிடுதல் போன்றவற்றின் மூலம் இடர்நேர்வு ஏற்படுகின்றது.மேலும் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணையப் பாதுகாப்பு மூலமும் பாதிப்பு ஏற்படுகின்றது.அந்தரங்கத்தினைப் பேணுவதற்கான வாடிக்கையாளர் உரிமை மற்றும் தரவுப் பாதுகாப்பு என்பன வங்கியினுடைய புதிய பரமாற்று செயற்பாட்டு சூழலினால. தோற்றவிக்கப்படும் சவால்களுடன் வளர்ந்து வரும் பிரச்சினையொன்றாக மாறிவருகின்றன. வங்கிகளின் தீர்மானமெடுத்தல் செயன்முறையில் பாரிய தகவல் பகுப்பாய்வின் ஆதிக்கம் மற்றும் இயந்திர வழி பயில் நெறிமுறைகள் என்பன கணனியில் முறைமையில் உள்ளீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட தரவுகளில் முழுமையாகத் தங்கியிருக்கும் இடர்நேர்வுகளைத் தோற்றுவித்து தொழில் துறையினை சமூகத்திலிருந்து மேலும் பிரித்து வைக்கின்றன.

வங்கியானது தொழில்நுட்ப மாற்றத்தினால் ஏற்படும் இடரை தாக்குப்பிடிப்பதற்கு தனது தொழிலை வலுப்படுத்த வேண்டியுள்ளது. வங்கித் தொழில் செயற்பாடுகளின் டிஜிட்டல் மயமாக்கலை ஒழுங்குமுறைப்படுத்தல், க்லவுட் கணணிச் செயன்முறைக்கான குறைந்தளவிலான ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்களை வரையறுத்தல் மற்றும் பின்டெக் தீர்மானங்களினுடைய பயன்பாடு போன்றவற்றுக்கு கொள்கை கட்டமைப்புக்களை நிறுவும் செயற்பாட்டினை மத்திய வங்கியானது மேற்கொள்கின்றது. அதேபோல், மத்திய வங்கியானது இலங்கையில் சங்கிலித்தொடர் பதிவேட்டுத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தல் மற்றும் பொருத்தமான பின்டெக் புதுமை படைப்புக்களைப் பின்பற்றல் பற்றிய ஆய்வு செய்வதற்கும் சிபாரிசுகளை வழங்குவதற்கும் தொழில்துறை பங்கு பற்றுகையுடன் கூடிய இரு குழுக்களை நிறுவியுள்ளது. இது பின்டெக் மற்றும் நடைமுறை வங்கிகள் என்பவற்றுக்கிடையில் ஒரு சம வாய்ப்புக்களுக்கான சட்டவாக்க மற்றும் ஒழுங்கு முறைப்படுத்த படல் அடிப்படையினை வழங்கும்.

உசாத்துணை நூல்

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**J.Rohan Victor** (B.B.A (Hons) in Financial Management, PGDM), Business Studies Teacher

# இலங்கையின் சுற்றுலாத்துறையும் அது எதிர்நோக்கும் சவால்களும்

போருக்கு பின்னரான காலப்பகுதியில் வளர்ச்சி பெற்றுவரும் பெருந்துறையாக இலங்கையின் சுற்றுலாத்துறை திகழ்கின்றது. பெருமளவு அந்நியச் செலாவணியை பெற்றுத்தரும் இத்துறையானது இலங்கையின் ஆசியாவின் எழுச்சி பெறும் அதிசயமான பொருளாதார மையமாக மாற்றுவதில் ஐந்து உபாய மையங்களுடன் மேலதிக ஒரு மையமாக சுற்றுலாமையம் (Tourism Hub) சேரக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாத்துறையின் ஆரம்ப தோற்றுவாயினை நோக்கின் 1937 இல் நிறுவப்பட்டாலும் இரண்டாம் உலகப்போரின் காரணமாக மூடப்பட்டு சுதந்திரத்திற்குப்பின் மீண்டும் நிறுவப்பட்டது.1966 இல் சுற்றுலாத்துறைக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டதனால் இலங்கையின் சுற்றுலாசபை சுற்றுலா அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும் உதவும் நிறுவனமாக செயற்பட்டது. இதுவே 2002 இல் இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) ஆக மாற்றப்பட்டது. 1966இல் 18,969 வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளை கொண்டிருந்த சுற்றுலாத்துறையானது 1972-1982 ஆண்டு வரை சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்ததால் அந்நியச் செலாவணியும் 24% ஆக அதிகரித்தது. 1982 இல் 407,230 பேரைக்கொண்டிருந்த சுற்றுலாத்துறையானது 1983 உள்நாட்டு யுத்தத்தினால் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 300000 - 500000 வரை குறைவடைந்தது. 25 ஆண்டுகளிற்கு மேலாக நீடித்த யுத்தத்தினால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் 2009 போரிற்கு பின் துரிதமாக அதிகரித்தது. இதற்கு முக்கிய இரண்டு காரணங்கள், ஒன்று உள்நாட்டு யுத்தம் முடிவுற்றமை இரண்டாவது உட்கட்டமைப்புக்களின் விருத்தி என்பனவாகும்.

சுற்றுலாப்பயணிகளின் வருகை 1987- 2017 வரை

| ஆண்டு | வருகைகள் தொகை |
|---|---|
| 1987 | 182,620 |
| 2008 | 438,475 |
| 2009 | 447,890 |
| 2010 | 654,476 |
| 2011 | 855,975 |
| 2012 | 1,005,605 |
| 2013 | 1,274,593 |
| 2014 | 1,527,153 |
| 2015 | 1,798,380 |
| 2016 | 2,050,832 |
| 2017 | 2,116,407 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் ரீதியில் சுற்றுலாப்பயணிகளின் வருகை

| நாடுகள் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 171374 | 176340 | 208795 | 242734 | 316247 | 356729 | 384628 |
| ஐக்கிய இராச்சியம் | 106082 | 114218 | 137416 | 144168 | 161845 | 188159 | 201879 |
| ஜேர்மனி | 55882 | 71642 | 85470 | 102977 | 115865 | 133159 | 130227 |
| பிரான்ஸ் | 44018 | 47572 | 64388 | 78883 | 86126 | 96440 | 97272 |
| அவுஸ்திரேலியா | 41728 | 51614 | 60836 | 65252 | 71672 | 83851 | 92003 |
| மாலைதீவு | 48695 | 56863 | 79474 | 86359 | 90617 | 95167 | 79371 |
| சீனா | 16308 | 25781 | 54288 | 128166 | 214783 | 271577 | 2689652 |

| சராசரியாக ஒரு சுற்றுலாப்பயணி ஒருநாளில் செலவழித்துள்ள பணம் | |
|---|---|
| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
| 2010 | 88 |
| 2011 | 97 |
| 2012 | 103 |
| 2013 | 156 |
| 2014 | 161 |
| 2015 | 164 |
| 2016 | 168 |
| 2017 | 170 |

| சுற்றுலா வருவாய்கள் | |
|---|---|
| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
| 2012 | 1.0 பில்லியன் |
| 2013 | 1.7 பில்லியன |
| 2014 | 2.4 பில்லியன |
| 2015 | 2.9 பில்லியன |
| 2016 | 3.5 பில்லியன |
| 2017 | 3.9 பில்லியன |

சுற்றுலாப்பயணிகளின் நோக்கம் பொழுதுபோக்கு, வியாபாரம், நண்பர் உறவினர்களை பார்வையிடுதல், சமய கலாசார நோக்கம், நலம், கல்வி, விளையாட்டு போன்றனவாகும்.

சுற்றுலாத்தளங்களாக

1. தேசிய பூங்காக்கள் : யால, குமணா, மினரிலியா, சுண்டிக்குளம், நெடுந்தீவு
2. கடற்கரைகள்: உனவாதுணா, பேருவளை, மிர்சா, பாசிக்குடா, உப்புவெளி, நீர்கொழும்பு
3. இயற்கை அழகு: நீர் வீழ்ச்சிகள்ஈ நீர்த்தேக்கங்கள், மலைகள், ஆறுகள்
4. தாவரவியல்/ விலங்கியல் பூங்காக்கள்: பெரதெனியா, பின்னவல
5. பாரம்பரியம் : சிகிரியா, தம்புள்ள குகைக்கோயில்
6. யாத்திரை : மடு, கதிர்காமம் , ஸ்ரீபாத
7. விளையாட்டுசாகாசங்கள்: கிரிக்கெட், ரக்பி, மலையேறுதல் நடைபெறும் இடங்கள்
8. கலாசாரம் - கொழும்பு அருங்காட்சியகம்

இலங்கையை ஆசியாவின் சுற்றுலா மையமாக மாற்றுவதில் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவால்களாக

1. நாட்டில் சுற்றுலாத்துறைக்கு உகந்த ஒரு சூழலின் தேவைப்பாடு. .அதாவது இலங்கை மேற்குலக நாடுகளில் தனது தோற்றப்பாட்டினை (Image)விருத்தி செய்தல் வேண்டும்

2. சந்தையினால் இயக்கிச் செல்லப்படும் தெளிவான சுற்றுலாத் தந்திரோபாயத்தின் தேவைப்பாடு

3. அறைகளின் தேவைப்பாடு. தற்போதுள்ள அறைகளின் இயலளவு எதிர்காலத் தேவையினை பூர்த்தி செய்ய போதுமானதன்று.இவ் அறைகளின் தேவைகளிற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களின் தேவைப்பாடு இதன் பொருட்டு புதிய முதலீட்டாளரை கவர்வது அவசியமானதாகும்.

4. சுற்றுலாப்பயணிகளை வரவேற்கும் வண்ணம் சுற்றுலா மையங்களை சென்றடையகூடிய வகையில் உட்கட்டமைப்புக்களின் தேவைப்பாடு இதற்கு அமைய அரசாங்க முதலீடு அவசியமாகும் . நெடுஞ்சாலைகள், புகையிரதப்பாதை என்பவற்றை விருத்தி செய்தல் வேண்டும்.

5. குறுங்காலத்தில் உயர்தகுதிகளையுடைய நல்ல வாடிக்கையாளர் சேவை மனப்பாங்குடைய பயிற்றப்பட்ட மனித வளத்தை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு

6. நுட்பத்தேர்ச்சியுடைய ஊழியர்களிற்கான தேவைப்பாடும் ஊழியர் புலம்பெயர்வும். அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசப்பயணக்கைத்தொழிலுக்கு ஒழுங்கு முறையாக நிரம்பல் செய்யப்படும் தொழிலாளர்களிற்கு அரசாங்கம் தனியான பயிற்சிகளை வழங்க வேண்டியுள்ளது.

7. அதிகம் புகழ்வாய்ந்த உல்லாச விடுதிக்குழுமங்களிற்கு இலங்கை மீதான போதிய விருப்பமின்மை .இவை தமது வணிக நடவடிக்கைகளை இலங்கைக்கு விஸ்தரிக்கவில்லை

8. முறைசார்த்துறைகளின் தேவைப்பாடு அதாவது இக்கைத்தொழிலில் இயங்கும் முறைசார்த்துறைகளை உள்வாங்குவதன் மூலம் உல்லாசப்பயணக்கைத்தொழிலிற்குரிய பாதுகாப்பும் தார்மீக விழுமியங்களை மேம்படுத்துவதன் மூலமும் சுற்றுலாத்துறையின் நேர்க்கணிய விம்பத்தை பிரதிபலிக்க முடியும்.

9. தற்போது சீன மொழி பேசும் உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரித்ததால் சீனமொழி பேசும் வழிகாட்டிகள், சீன மொழி தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகளின் தேவைப்பாடு

10. உல்லாசப்பணிகள் தங்கும் காலப்பகுதியை அதிகரிக்க வேண்டிய தேவைப்பாடு அதாவது இலங்கையில் கிடைக்கும் வசதிகளுடன் கடல், படகுப்பயணம், ஓய்வு இகளியாட்டம் போன்ற துறைகளை விருத்தி செய்தல்

11. புத்தாக்க அணுகுமுறைகளின் தேவைப்பாடு அதாவது தகவல்களை மட்டுமன்றி பரந்துபட்ட உல்லாசப்பயணத்துடன் தொடர்புடைய பேருந்து, தொடருந்து, மகிழுந்து, ஆடம்பரவிடுதி முற்பதிவுகள், செல்லிடத்தொலைபேசி இணைப்புக்கள் அருகலை (Wi-Fi)போன்றவற்றை போக்குவரத்து மையங்கள், உல்லாசப்பயண தகவல் நிலையங்கள் உல்லாசப்பயணிகளை கவரும் இடங்களில் அதிகரிக்க வேண்டும்.

12. உல்லாசப்பயணத்துடன் தொடர்புபட்ட அரசநிறுவனங்கள் தனியார் துறையினர் உள்ளிட்ட உல்லாசப்பயணக் கைத்தொழிலில் அக்கறையுடைய அனைவரையும் மேற்பார்வை செய்வதற்கு ஒரு உயர்மட்ட அரசாங்க அமைப்பு தேவைப்படுகின்றது

13. சுழியோட்டம், நீண்ட நேரம் நீரில் மூழ்கியிருத்தல், நீருடன் தொடர்புடைய சுற்றுலா இபட்டம் விடுதல், யாத்திரைசுற்றுலா, சமையல் சுற்றுலா, பறவைகளினை கண்டுகளித்தல், திருமண சுற்றுலா, திரைப்படச் சுற்றுலா போன்ற நடவடிக்கைகளிற்கு உள்ளார்ந்த வளங்களை கண்டறிதல் அவசியமாகும்.

இது தவிர உள்ளூர் சுற்றுலாப்பயணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.இவர்களும் யாத்திரை, குடும்ப விடுமுறை, ஆய்வுப்பணிகள் மற்றும் பார்வையிடல், களப்பயணம் போன்ற நோக்கங்களிற்காக சராசரியாக ஆறுமில்லியன் பயணிகள் அனுராதபுரம், கதிர்காமம், நுவரெலியா, கண்டி, ஸ்ரீபாதமலை, பொலநறுவை, சிகிரியா மடு, தம்புள்ள ஆகிய இடங்களிற்கு பயணிக்கின்றனர். எனினும் இத்தகைய சுற்றுலா வளர்ச்சியினால் பல சுற்றுச்சூழல் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இயற்கை இருப்புக்களுக்குரிய அச்சுறுத்தல், ஆபத்தான விலங்கினங்கள் சுற்றுலாப்பயணிகளால் அச்சுறுத்தப்படல், மண் அகழ்வுகள் இபோடப்படும் கழிவுகள் குப்பைகள், பொலித்தின் பாவனை, கலாசார சீரழிவுகள் போன்றவற்றால் நாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது.

இறுதியாக 2017ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் படி சுற்றுலா ஊக்குவிப்பு பிரச்சாரத்தின் பெறுபேறாக, இலங்கை மேலும் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டதுடன் பூம்பேக் நசனல் ஜோகிரபிக் மற்றும் வோக் போன்ற சுற்றுலாத்துறையோடு தொடர்புடைய புகழ்பெற்ற சஞ்சிகைகள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பான அங்கீகாரங்கள் மற்றும் விருதுகளைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக, இலங்கை 2017இல் உலகப் பயண விருது ஆசியாவில் “ஆசியாவின் முன்னணி சேரிடம்” என்ற விருதிற்குத் தெரிவு செய்யப்பட்டது. மேலும், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்சு மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் இலங்கையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசன்னத்தினைத் தொடர்ச்சியாகப் பேணும் விதத்தில் "நாடுகளுக்கான பிரதிநிதித்துவ கம்பனிகளை" 2018இல் நியமிக்க எதிர்பார்க்கிறது. பொருளாதாரத்தில் முனைப்பானதொரு துறையாக சுற்றுலா தொடர்ந்தும் இருந்து வருகின்ற போதும் இலங்கை உலகளாவிய சந்தைகளிலிருந்து முழு உள்ளார்ந்த வளங்களையும் இன்னமும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதன்பொருட்டு சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதற்காக 2017- 2020 சுற்றுலா உபாயத்திட்டம் சுற்றுலா இலக்குகளை நீடித்த நிலையாக எய்துவதற்கு எதிர்பார்க்கின்றது. மேலும் சுற்றுலாப்பயணிகள் சுற்றுலாத்தளங்களை தெரிந்து கொள்ள புதிய செயலியை இலங்கை தொழில்நுட்ப நிறுவனமும் மத்திய கலாசார நிதியமும் இணைந்து அறிமுகப்படுத்த உள்ளனர். இதன் மூலம் சுற்றுலா வழிகாட்டிகளின்றியே சுற்றுலாத்தளங்கள் பற்றிய தகவல்களை 16 மொழிகளில் பெற்றுக் கொள்ளவும் அவற்றை சமூக வலைத்தளங்களில் பகிரவும் முடியும். உலக சுற்றுலாத்தினம் புரட்டாதி 27 இலங்கையிலும் இவ்வருடமும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டாலும் சுற்றுலாத்துறையினை மேம்படுத்த இன்னமும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதினை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும்.



உசாத்துணை நூல்கள்:-

1. 1987- 2017 வரையான மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்
2. Wikipedia
3. நடைமுறை விடயங்கள் & புள்ளிவிபரங்கள்- வே. கருணாகரன்
4. 2013, 2017 க.பொ.த(உ/த)பொருளியல் புள்ளித்திட்டம்
5. இலங்கை சுற்றுலாத்துறை உபாயத்திட்டம் 2017- 2020


## பொன்மொழி

**நீங்கள் உண்மையையே
பேசும்போது எதையும்
நினைவில் வைத்திருக்க வேண்டிய
அவசியம் இல்லை.**

**- மார்க் குனவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



by:- S.Saishangar
$12^D$ Com (2020)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளின் பங்களிப்பு

இலங்கை போன்ற நாடுகளில் வங்கிகளும், மக்களும் ஏதோவொரு வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்தவர்களாக இருக்கிறார்கள். சேமிப்பு என்பது இலங்கையர் இரத்தத்தில் ஊறிய ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் முதலீடு என்று வருகின்றபோது இலங்கையர்கள் ஒரு தயக்கத்துடன் பின் நிற்பவர்களாக இருக்கிறார்கள் காரணம் முதலீடுகள் தொடர்பான பயம். இதன் காரணமாக சேமிப்பின் விளைவாக கொடுக்கல் வாங்களிலிருந்து வெளியேறும் பணம் முதலீடாக மீளவும் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளுக்கு வருவதில்லை. சேமிப்பு என்கின்ற பெயரில் மக்களிடம் தங்கியுள்ள பணத்தினை வெளிக்கொண்டு வருவதில் வங்கிகளின் செயற்பாடுகள் மிக முக்கியமானவை. வட்டி என்கிற கவர்ச்சி வருமானத்தை வழங்கி சேமிப்புக்களை முதலீடாகக் கொண்டு வருவதில் இவற்றின் பங்களிப்பு மிகப் பெரிய தாகும். அப்படியான வங்கிகளுக்கு கிடைக்கப் பெறும் நிதியும் அவை பொருளாதாரத்திற்கு முதலீடு செய்யும் தன்மையும் போதுமானதாக இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில், நிதியியல் கொள்கைகளும் வங்கியல் செயற் பாடுகளும் ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகச் சிறந்த தரத்தில் உள்ளதென்பதனை மறுக்க முடியாது.

### அபிவிருத்தி வங்கிகள்

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் அபிவிருத்தி வங்கிகளே கூட்டி ணைக்கப்பட்டது. பெரும்பாலும் அபிவிருத்தி வங்கிகளின் முதன்மையான நோக்கதே "சிறிய மற்றம் நடுத்தர வணிகங்களை ஸ்திரப்படுத்துவதற்காக நீண்ட காலக் கடன்களை வழங்ககுவதாக இருக்கும்" அவை ஆரம்ப காலத்தில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் துணை கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இருந்தன. இருந்தாலும் அவற்றினால் தொடர்ச்சியாக இத்தகைய நிறுவனங்களிடம் நிதியை பெறமுடியாது. அப்படியாயின், இந்த வகை வங்கிகள் எவ்வாறு தமக்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்?

மிகப்பெரிய தொகையை ஒரே தடவையில் வழங்கிவிட்டு அதனை வசூலிக்க நிறைய வருடங்களை செலவிட வேண்டியிருக்கும். ஆனால் அடுத்தடுத்து கடன்களை வழங்க வங்கி களுக்கு எப்போதுமே நிதியும் இருக்க வேண்டும். இல்லையெனில் புதிதான முளைக்கும் வணிகங்களுக்கு தேவையான நிதியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு மாற்றுத் தீர்வாக அபிவிருத்தி வங்கிகள் கண்டறிந்த வழிமுறையே "மிக நீண்ட கால முதலீட்டு நிதிச் சேவையாகும்" இதன்மூலம் வங்கிகளுக்கு தேவையான நிதியை நீண்டகால உறுதிப்பாட்டுடன் மக்களிடமிருந்தே முதலீடு என்கிற பெயரில் பெற முடிந்தது.

### வணிக வங்கிகள்

ஆனால் வணிக வங்கிகள் என நம்மோடு அதே அளவில் இணைந்துள்ள வணிக வங்கிகளின் கதையோ வேறுமாதிரியாக இருக்கிறது. வணிக வங்கிகள் பெரும்பாலும் வணிகங்களுக்கான நீண்டகாலக் கடன்களை வழங்குவதில் பின் நிற்கின்றன. இதற்கான காரணம் வணிக வங்கிகளின் நிதியானது சேமிப்புக் கணக்குகளில்தான் தங்கியிருக்கிறது. பெரும்பாலான வணிக வங்கிகளின் சேமிப்புக்காலம் என்பது உறுதியதாக இருப்பதன் காரணமாக மிக நீண்டகால கடன்களை வழங்குவதில் நிதிரீதியாக பிரச்சனைகள் எழுகிறது. அதாவது சேமிப்பு வைப்புக்களின் முதிர்ச்சி காலத்துடன் ஒப்பிடும் போது மிக குறுகியதாகும். இதனாலேயே வணிக வங்கிகள் உயர் வட்டி வீதத்தை அல்லது இறுக்கமான ஆவண கட்டுப்பாட்டு முறைகளை தன்னகத்தே கொண்டிருப்பதன் மூலம் நீண்டகால கடன்களை மிக குறைந்த அளவிலேயே வழங்க முயற்சிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக வணிக வங்கிகளின் செயற்பாடுகளின் அடிப்படையில் அவர்களால் மிக நீண்டகால அடிப்படையில் வழங்கப்படும் நிதிக்கான செலவுகள் அதிகமாக இருப்பதன் விளைவாக சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு மிகப்பாரிய சுமையையே இந்த வங்கிகளின் கடன் ஏற்படுத்தும். வணிகங்கள் உயர்வட்டி வீதங்களில் கடனைப் பெற்று வணிகத்தைக் கொண்டு நடத்தும் போது, அதனை மீளச் செலுத்த அதிக வருமானத்தை அல்லது இலாபத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் நாளாந்த செயற்பாடுகளுக்கான செலவையும் வட்டிச் செலவீனங்களையும் ஈடுசெய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே இது நடைமுறைக்கு மிக மிக சாத்தியப்பாடு குறைந்த ஒன்றாகவே வணிகங்களை பொறுத்தவரையிலும் வங்கிகளை பொறுத்தவரையிலும் உள்ளது.

அடிப்படையாயின் வங்கிகள் எவ்வாறு தமக்கு தேவையான நீண்டகால முதலீடுகளை எப்படி திரட்டிக் கொள்ளுகிறது? வணிகங்களுக்கு நிதியை எவ்வாறு வழங்க முனைகிறது?

இதற்கு பிரத்தியேகமான வழிமுறையை வங்கிகள் கையாளுகின்றன. மக்களிடமிருந்து மிக நீண்ட காலத்துக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகிறோம் எனும் அடிப்படையில் முதலீடுகளைத் திரட்டி அவற்றினை பொதுப் பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளுகின்றன. இதன்மூலம் நாளாந்த பாவனையிலிருந்து ஒரு குறிப்பிட்ட பண அளவானது காணாமல் செய்யப்பட்டு மக்கள் பார்வையில் சேமிப்பாகவும் முதலீட்டாளர் பார்வையில் முதலீடாகவும் மாற்றப்பட்டு மீளவும் பண அல்லது முதலீட்டு சந்தைக்குள் கொண்டு வரப்படுகிறது. மேற்கூறிய வழிமுறையில் பணத்தை திரட்டிக் கொள்ள முடியாது விடின் நீண்டகால கடன்பத்திரங்களை வெளியிட்டு தமக்கு தேவையான முதலீட்டை வங்கிகள் திரட்டிக் கொள்ளுகின்றன.

இவற்றுக்கும் மேலாக இலங்கை போன்ற நாட்டில் அதிக நிதியை அரச நிறுவனங்களான ஊழியர் சேமலாப நிதியம், காப்புறுதி துறையின் பணம் ஆகியவற்றை வங்கிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடு செய்வதன் மூலமாக வழங்குகின்றன. இத்தகைய அரசநிதிகள் மிக நீண்டகால அடிப்படையில் முதலீடு செய்யப்படுவதால் இவற்றின் மூலம் வங்கிகள் அந்த பயனைப் பெறமுடியும். இவற்றுக்கு மேலாக அரச வங்கிகள் அரசினால் வெளியிடப்படும் திறைசேரி பத்திரங்கள் ஊடாகவும் நிதியை பெற்றுக்கொள்கின்றன.

மேற்கூறிய நிதிகளில் பெரும்பாலும் நீண்டகால முதலீடுகளாக வங்கிகளுக்கு வருகின்ற நிதியானது இலங்கையில் வாழும் மக்களில் பெரும்பாலானோரது நேரடி மற்றும் மறைமுக ஓய்வு காலத்துக்கான தற்போதைய சேமிப்புக்களே ஆகும். ஆனால் அவை வெவ்வேறு பெயர் களால் அடையாளப்படுத்தப்பட்டு வணிகங்களின் செயல்பாடுகளுக்காக வங்கிகளை வந்து சேர்கின்றது.

இதுதான் பெரும்பாலும் எந்தவொரு நாட்டிலும் வங்கிகள் சார்பிலான செயன்முறையாக இருக்கும் ஆனால் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வங்கி களுடன் இந்த நிதியை பங்கிட்டுக் கொள்ளுவதில் போட்டியாளர் ஒருவர் உள்ளார். அவர் வேறு யாருமல்ல “இலங்கை அரசாங்கமே” ஆவா். இதனால், வங்கிகளுக்கு கிடைக்க வேண்டிய முழுமையான நிதி கிடைக்காமல் பங்கிடப்படுகிறது.

இலங்கை போன்ற பாதீட்டு குறையைக் கொண்டுள்ள நாடுகள் நீண்டகால அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி தேவைப்படும் என்கிற அடிப்படையில் இவ்வாறு வணிகங்களுக்கு வங்கி கள் மூலம் கிடைக்கப்பெறும் நிதியை முடக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன. பெரும் பாலும் அரசினால் வெளியிடப்படும் முறிகள் மற்றும் கடன்பத்திரங்கள் முதலீட்டு பாதுகாப்பின் அதி உச்சத்தைக் கொண்டிருப்பதால் இவற்றுக்கான முதலீட்டு சந்தையானது மிக அதிகமாக இருக்கிறது. எனவே அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வங்கிகள் அரசுடனும் போட்டியிட்டுக் கொண்டே தமக்கு தேவையான நிதியை திரட்டிக் கொள்ளும் பரிதாப நிலை ஏற்படுகிறது.

அதிலும் பாதீட்டுக் குறையானது மிக அதிகமாகவுள்ள போது அதனை நிவர்த்தி செய்ய அரசும் அதிக வட்டி விகிதங்களில் கடன்பத்திரங்களை விநியோகிக்கும். இதுவும் வங்கிகளில் நிதி திரட்டல் செயல்பாட்டை பாதிக்கும்.

அப்படியாயின் வங்கிகள் ஏன் வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்து சுயாதீனமாக நிதியைத் திரட்டிக் கொள்ளக் கூடாது?

அடிப்படையில் குறித்த நாட்டின் அரசோ, வங்கிகளோ சர்வதேச நியமங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவீடுகளுக்கு அமைவாக நிதியை திரட்டிக்கொள்ள முடியும். உதாரணத் திற்கு ஒரு நாடு அபிவிருத்தி அடைந்து வரும் மட்டத்திலோ அல்லது அதற்கு கீழேயோ இருக்குமெனின் அத்தகைய நாடும், வங்கிகளும் மிக அதிகளவில் சர்வதேச ஸ்தாபனங்களி டமிருந்து நிதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் குறித்த நாடு அபிவிருத்தி அடைந்து வரும் அதன் நிலையில் முன்னேற்றத்தைக் காட்டத் தொடங்கும்போது இந்த நீதி வழங்கல் குறைக்கப்படும் அல்லது கடினமாக்கப்படும். இதன் விளைவாக, அரசும் வங்கி களும் நிதியை பெற்றுக்கொள்ளுவதில் சிக்கல் நிலை ஏற்படும். இதனால் உள்நாட்டு நிதியை பெற்றுக்கொள்ளுவதில் போட்டித்தன்மை உருவாக்கப்படுகிறது. இதற்கு பிரதான காரணம் ஒரு நாட்டின் தலா நபருக்கான வருமானம் அதிகரிக்கும் போது மக்களின் வாழ்க்கை மட்டமும் சேர்ந்தே அதிகரிப்பதாகக் கணிக்கப்படகிறது. இதனால் குறிந்த நாடு தனது நிதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையை தானே பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அடைவுமட்டத்தை நோக்கி நகர்வதாக கணிப்பிடப்படுவதால் இந்த நிதிக்குறைப்பு செய்யப்படுகிறது. இவற்றுக்கு மாற்றாக, வெளிநாட்டு பணச்சந்தை, முதலீட்டு சந்தைகள் என்பவற்றின் ஊடாகவும் நிதியை திரட்டிக்கொள்ள இயலும். ஆனால், இது சலுகை நிதிகளுடன் ஒப்பிடுமிடத்து அதிக வட்டி விகிதங்களை எதிர்பார்க்கும் நிதியாக அமைவதால். இந்த நிதியின் பயன்பாடு இலங்கை போன்ற நாடுகளில் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

**% வட்டி விகிதம் %**

இலங்கை போன்ற நாடுகளில் மிக குறுகிய காலத்திற்கு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசுமே வெவ்வேறு வகைக் கொள்கைகளை கொண்டு ஆட்சிக்கு வருகின்றன. அவற்றில் கடந்த காலங்களில் ஆட்சியடைத்த அரசும் சரி, தற்போதைய அரசும் சரி தமது நீண்டகால திட்டங்களுக்கு ஊழியர் சேமலாபநிதி உட்பட பல்வேறு அரச தனியார் நிதி மூலங்களை முற்றாக பயன்படுத்துகின்றன அல்லது பயன்படுத்தி விட்டன எனலாம். இதன் விளைவாக குறிப்பாக அபிவிருத்தி வங்கிகளுக்கான நிதி கிடைப்பதில் தடங்கல் ஏற்படுகிறது. இதனால் வங்கிகள் வட்டி வீதத்தை உச்சப்படுத்தி வணிகங்கள் நிதியை பெறுகின்ற நிலையை கட்டுப்படுத்துகின்றது அல்லது குறைக்கின்றது. இது வணிகங்கள் மத்தியில் வங்கிகள் தங்கள் இலாப நோக்குக்காக அபிவிருத்தியைப்பற்றிச் சிந்திக்காது இலாபநலன் கருதி செயல்படுவது போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது இந்த நிலையில் வங்கித்துறை மீது மிக நீண்டகால முதலீடுகளுக்கு வட்டி வீதத்தை கட்டுப்படுத்துவில்லை என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்படுகிறது. ஆனால் உண்மையில் இந்தக் குற்றச்சாட்டு அர்த்தமற்றதாகும். இந்த நிலைக்குக் காரண மான அரசே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் இதனை நிவர்த்திக்கிறோம் என்கிற பெயரில் இலங்கை போன்ற அரசுக்கள் சிறிய நடுத்தர வணிகங்களுக்காக புதிய அபிவிருத்தி வங்கிகளை உருவாக்குகின்றன. இதனால் போட்டித்தன்மையை உருவாக்கி வட்டி வீதத்தைக் குறைப்பதாக சொன்னாலும் நீண்டகாலத்தில் உருவாக்கப்பட்ட புதிய வங்கிகளும் வழியின்றி வட்டி வீதங்களை அதிகரிக்கவே செய்கின்றது.

உண்மையில் இத்தகைய நிலையினை கொண்டுள்ள இலங்கை போன்ற அரசுகள் ஆக்கபூர்வமாக பாதீட்டுக் குறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே முயற்சிக்க வேண்டும். இதன் விளைவாக ஊழியர் சேமலபநிதி காப்புறுதி நிதி உட்பட அரச மற்றும் தனியார் நிதிகளில் ஒரு சேமிப்புத் தன்மையை உருவாக்க முடியும். இது வங்கிகளின் வழியாக மீளவும் நாட்டின் அபிவிருத்திக்கும் வழி வகுக்கக்கூடிய கதவுகளை திறக்கும் திறவுகோலாக பயன்படும். இதனால் இலங்கை போன்ற நாடுகளின் முதுகெலும்பாகவுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணிப்பதுடன் வங்கித்துறையும் தங்குதடையின்றி செயலாற்ற முடியும்.

**உசாத்துணை:**

**மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K.Sajiram**
13$^{D}$ Com (2019)



# Role of Commerce Education in the Changing business world

Introduction

Education is essentially, a process rather than a product as it is mostly taken to be. It teaches us to learn things to develop in a creative manner, teaches us to learn to be economical in effort. True education is not knowledge of facts but of values; True education leads as to the reality of life, peace nature and survival of human race.

The world is changing very fast. The pace of globalization, liberalization and privatization has tremendously influenced the various dimensions of commerce education. Most of the scholars opined that commerce courses were not able to meet the different types of challenges posed by industry and business and that the education was not practical oriented and did not lead to develop skills and qualities of young generation to face the work situation. Therefore, there is a need for its improvement and innovations to lead the present education system rise to sufficient standard.

We are living in the dynamic world where man with his uncanny intellect first tried to understand nature, then started exploting it, and then started manipulating it.

As the world progressed, there has been a paradigm shift in the different concepts relating to commerce say wealth. In the earlier times "wealth" was synonymous with the treasure of yellow gold. And now, for the first time in the history of man kind the world's "wealthiest" man is one who owns a huge knowledge well. his name is William (Bill) Gates and he owns the biggest software company Microsoft! 'Bill Gates' owns, vast resources of 'grey gold' signifying grey cells in our brains, which store intelligence.

Therefore, commerce education plays a very important role in the changing business world. It is the most important key, which leads to sucess in all sectors of economy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Commerce education has gained such an importance because if a simple mistake is committed or an entrepreneur in this business affairs takes a slightly wrong decision, then it would lead to the doom of his enterprise, which has been developed so far. There fore, commerce education is very important to everyone. The activities relating to commerce is also affected when the business cycle is not going well.

Through commerce education, a student is exposed to the environment of the business world. It is helpful for preparing them for self - employment and developing in them, the entrepreneurial abilities. It also inculcates practice orientation among the students. It makes them know - how about the importance of applying economic principles while making business decisions It makes them aware of social, economic and political problems relating to business concerns. It teaches them to face the market situation, to adapt themselves to the present circumstances. moreover, it helps them to meet the global competition.

The process of commerce education can be understand through its nature. It is a socio - behavioral science i.e. It is the science, which studies the social behavior or human behavior with conduct of business activities. The university, college, students, commerce colleges and institutions must take interest in spreading the general education of commerce to the public in general The students write their exams in their institution but the present evaluation system is so rigid, and it stresses only on bookish knowledge. It lacks practical outlook and the need to change in pattern of this of education is very essential as well as beneficial.

The role played by an effective system of commerce education is self - evident as is provides necessary inputs among the young graduates of today, towards turning them to dynamic and successful businessman of tomorrow. It must train the students not only in the technical aspects of the business, but also teach morals and ethics. The commerce education must be theoretical and practical. This must never be forgotten that the real education is one, which provides freedom of thought and judgement and liberation from dogmas. In this way, the role played by commerce education is very important or sufficient as well as affective in the changing business world.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I.Ajinthan
12^D Com (2020)

# Importance of E-Commerce in our daily life

We spend our daily time more in the internet for work, study, marketing, business, learning and entertainment. Now all these commercial and social activities are connected to internet.

And without e-commerce the world around internet us impossible and it will scare you to imagine. That's why e-commerce is important in our daily life.

The e-commerce is the demand of time, customers, business and nations, Now it will be a compulsion in few years to use But why this is happening and how e-commerce is getting important around the world?

E-commerce is the online buying and selling process which is extremely important in our daily life now. The foremost reason behind the growth of internet users besides social media is e-commerce. E-commerce is at the heart of the internet and e-commerce is as important as a heart is for a body.

let's discuss critically and creatively why e-commerce is important.'

1. wide variety of products

In small cities or villages, people have to compromise due to the small shops and limited variety of products and services available locally. Traditional brick and mortar shops and conventional commerce is not able to satisfy customers in terms of variety Normally people have to visit 5 to 6 shoe stores in one market to buy 1 pair of shoes due to size, colour, price or design problem etc. And its tough for retailers to provide all the variations. That's why e-commerce is important. It brings in more variety by expanding the boundaries of traditional commerce.

People can visit more than 5 websites to buy shoes in a few minutes, which is far more convenient than visiting 5 different shops. They Can check colours, offers, sizes, models and various details related to shoes. And it takes 20 to 30 minutes to decide. With the traditional retail method, you need to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

spend the whole day if you have decide to shop for shoes, or anything else at the mall. That's why I believe that e-commerce is important to provide the variety in products with speed and that too at home.

2. Lower cost than traditional shopping and selling

Selling products and services online is less costly than traditional methods. There are various high overhead costs that are included in offline commerce. Recurring expenses such as store management cost, counter cost, inventory cost, security cost, transportation cost, shop rent and salary etc. So the retailers cannot afford to sell the products at low cost.

That's why e-commerce is significant, because it, reduces the fixed cost and variable cost and people get the products and services in low cost.

3. Less time consuming and faster consumer consumption

If we talk about educational e-commerce, then it has really changed the way people consume the products and services. For example, traditionally it takes minimum 6 months course offline to learn graphics designing. And people have to visit the study center each day for 2 - 3 hours for a six month period. It does not prove flexibility, freedom for the learners to choose their own hours, mood and best focused time of the day, for are the teachers available all the time in the offline classroom. As a result it takes lots of time to build and improve the skills for the faster employment.

That's why online courses, online degree programs are more popular around the world. with e-commerce students can pay the course fees online, select any course, complete the course at their own speed and time. It's providing flexibility and freedom for learners. That's why online courses or educational e-commerce is important in today's time.

4. Exciting offers and shopping deals notifications

Traditionally people don't know what's new (shoes, clothes, cosmetics, electronics) in tier 2 and tier 3 cities, village shops, local market or even shopping malls until they don't visit even the local retailers dont know what's hot in the traditional market.

That's why in the past you found that there was a difference in the thinking personally, appearance and habits of people from metros and those from villages etc. But owing to the unprecedented development in e-commerce and communication technology, now people from even the most far flung

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

areas such as Teh and Ladakh get notifications and messages from sellers about existing Diwali and Navaratnas discount offers

5. Enhancement in digital products and services

E-commerce enhanced the creativity of people to create new and innovative products and services. Online courses, on demand expert services, books, gifts and Various other solutions are increasing the speed of development. Today any expert can write an e-book and able to sell online. Any teacher can create tutorials and educate people online by launching online courses. Most of the things are possible by the use of internet.

That's why small scale business owners, small city students and villagers need e-education so that they too can innovate and reduce poverty and improve the living standard of people.

6. Low maintenance cost

E-commerce is an important profit driver for business. Most of the things in online store are automatic. costs incurred in everything from inventory, customer details. Payment details to product selection and management of customers interests are lower than traditional commerce expenses.

There are various online store builders, Platforms, who update automatically. Web sites get automatics updates. Most of the times the investment in an online store is a on time task. And operational cost and maintenance cost is also minimum.

The use of Artificial intelligence, cloud Computing and machine learning in e-commerce has further minimized the running and operational Cost of business. As a result, owners can get maximum profits in low level input costs. One can operate the whole e-commerce business from single room with the help of 2 - 3 people.

7. Multiple Selling and Marketing options

Buyers and sellers are free to choose only marketable for selling and buying their goods and services. There is an almost perfect Competition in e-commerce. There is always more than one company selling something to a person. Market rules and opportunities are equal for every one. Small business owners can market their products and services on social media, search engines for free. If fact, even the consumers buy services and goods after seeing the posts on social media. E-comerce platforms provided the way



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for business owners to maximize their business reach.

This was not the case in traditional selling methods. That's why e-commerce has been adopted by many businesses due to its extraordinary benefits. So its clearly evident, how important it is to use e-commerce platforms for buying and selling to break to break the monopoly of few capitalist organizations.

There are various indirect advantages of e-commerce such as petrol savings, water saving, environment protection, lower polloution, reduced stress, lesser crowd in the road, buses and trains. All of this is possible because more and more people are using internet and e-commerce to buy and sell.

So as based on above explanation an e-commerce facts available on the internet it is inferred that e-commerce in new truth of doing business. The faster developing countries, business owners, buyers and sellers adapt to this technology the faster it enables them and nation to become developed....

**References**

**www.Wikipedia.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**R.Laksan**

**13D Com (2019)**

# Management

Management is the administration of an organization. whether it is a business, a not for profit organization or government body. Management includes the activities of setting the strategy of an organization and coordinating the efforts of its employees to accomplish its objectives through the application of available resources such as financial, natural, technological, and human resources. The term "management" may also refer to those people who manage an organization.

Social scientists study management as an academic discipline, investigating areas such a social organization and organizational leadership some people study management at colleges or universities, major degrees in management include the Bachelor of commerce (B.com) and master of Business Administration (MBA) and for the public sector, the master of public Administration (MPA) degree. Individuals who aim to become management specialists or expert, management researchers, or professors may complete the Doctor of management (DM), the Doctor of Business Administration (DBA), or the phd in Business Administration or management.

Larger organizations generally have three levels of managers which are typically organized in a hierarchical, pyramid structure.

i. Senior managers

ii. Middle managers

iii. Lower managers

i. Senior managers, such as members of a Board of directors and a chief Executive officer (CEO) or a president of an organization. They set the strategic goals of the organization and make decisions on how the overall organization will operate senior managers are generally executive - lever professional and provide direction to middle management who directly or indirectly report to them.

ii. Middle managers, examples of which would include branch managers, regional managers, department managers and section managers, provide



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

direction to front - line managers. Middle managers communicate the strategic goals of senior management to the front - line managers.

iii. Lower mangers, such as supervisors and front - line team leaders, Oversee the work of regular employees (or volunteers, in some voluntary organizations) and provide direction on their work.

In smaller organizations, an individual manager may have a much wide slope. A single manager may prefer several roles or even all of the roles commonly observed in a large organization.

Views on the definition and scope of management include

i. According to Henry Fayol, management is forecast and to plan, to organize to command, to co-ordinate and to control.
ii. Freedmund Malik defines it as "the transformation of resources into utility
iii. Management included as one of the Factors of production - along with machines materials and money
iv. Ghislain Deslandes defines it as "a Vulnerable force, under pressure to achieve results and endowed with the triple power of constraint, imagination and imagination, operating on subjective, interpersonal institutional and environmental levels.
v. Peter Drunker (1990 - 2005) saw the basic task of management as twofold : marketing and innovation. Nevertheless, innovation is also linked to marketing. Peter Drunker identifies marketing as a key essence for business sucess but management and marketing success, but management and marketing are generally understood as two different branches of business administration knowledge.

Five Functions of Management

01. planning
02. Organizing
03. Commanding
04. Coordinating
05. Controlling

**References:- www.wikipeda.com**
**www.toolshero.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பா.பிரதீபன்
(பழைய மாணவன் 98 வணிக பிரிவு),
**B.B.A ( Fin Spe), MA ( Pub Admin).**

## கிரயவியல் நுட்பமுறைகள்
## Costing Techniques

கிரயவியல் என்பது கிர்யத்தகவல்களை சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், பகுப்பாய்வு செய்தல், கிரயத் தீர்மானங்களை எடுப்பதற்கு ஏதுவாக கிரய அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடல் ஆகிய தொழிற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

இக் கிரயவியலில் கிரயவியல் நுட்பமுறைகளை பொதுவாக மூன்றுவகைப்படுத்தலாம். அவையாவன

1. எல்லைக்கிரயவியல் நுட்பமுறை
2. உள்ளடக்கல் கிரயவியல் நுட்பமுறை
3. செயற்பாட்டு அடிப்படை கிரயவியல் நுட்பமுறை

### எல்லைகிரயவியல் நுட்பமுறை
### (Marginal costing techniques)

எல்லைகிரயவியல் நுட்பமுறை என்பது, கிரயங்களை மாறும் கிரயம், நிலையானகிரயம் என வகைப்படுத்துவதுடன் தீர்மானம் எடுத்தலின் போது மாறும் கிரயங்களை மட்டும் கருத்தில் கொண்டு,பங்களிப்பினை பிரதான காரணியாகக் கொண்டு தீர்மானம் எடுக்கும் நுட்பமுறையாகும். இதன் பிரதானபண்புகளை கீழ்வருமாறு பட்டியல்படுத்திக்கொள்ள முடியும்.

1) கிரயங்கள் மாறும் கிரயம், நிலையானகிரயம் எனவகைப்படுத்தப்படும் கிரயவியல் முறை.
2) மாறும் கிரயங்களே தீர்மானம் எடுத்தலில் கவனத்தில் கொள்ளப்படும்.
3) பங்களிப்பினை பிரதானகாரணியாகக் கொண்ட முறை
4) இருப்பானது மூலக்கிரயத்தில் மதிப்பிடப்படும் முறை.
5) குறுங்கால தீர்மானம் எடுத்தலிற்கு சிறந்த முறை.

### உள்ளடக்கல்கிரயவியல் நுட்பமுறை
### (Absorption costing techniques)

அனைத்துக் கிரயங்களும் நீண்டகாலத்தில் மாறுங்கிரயங்களே என்ற அடிப்படையில், மேந்தலைஉறுஞ்சல் வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு, நீண்டகால தீர்மானம் எடுத்தலிற்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறை இதுவாகும். இதன்பிரதானபண்புகளாக கீழ்வருவனவற்றை குறிப்பிடமுடியும்.

1. கிரயங்கள் அனைத்தும் மாறும் கிரயங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிலையான கிரயங்கள் என்ற ஒன்று நீண்டகாலத்தில் இல்லை.
3. மேந்தலை உறுஞ்சல் வீதம் பிரதான காரணியாக பயன்படுத்தப்படும்
4. இருப்புக்கள் மொத்தகிரயத்தில் மதிப்பிடப்படும்.
5. நீண்டகால தீர்மானம் எடுத்தலிற்கு சிறந்த முறையாகும்.

## செயற்பாட்டு அடிப்படை கிரயவியல் நுட்பமுறை
## (Activity based costing Techniques)

செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கிரயங்களை பல்வேறு பண்டக்கூடைகளாகப் பிரித்து ஒவ்வொரு பண்டக் கூடைகளின் கிரயங்களிற்கும் பொருத்தமான கிரயச் செலுத்திகளைப் பயன்படுத்தி கிரயங்களை கணித்து தீர்மானம் எடுக்கும் நுட்பமுறை இதுவாகும்.

இதன் பண்புகளாக கீழ்வருவனவற்றை குறிப்பிடமுடியும்.

1) கிரயங்களை அவற்றின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பண்டக் கூடைகளாக

பிரிக்கும் முறை.

2) ஒவ்வொருபண்டக்கூடைக்குமான கிரயங்களை மிகப் பொருத்தமான கிரயசெலுத்திகளை

இனங்கண்டு கணிப்பீடுகளை கணிப்பிடும் முறை.

3) கிரயச்செலுத்திகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ள கணிப்பீடுகளை பயன்படுத்தி

ஒவ்வொரு வெளியீட்டிற்குள்ளும் கிரயங்களை உள்ளீர்த்துக் கொள்ளும் முறை .

4) இவற்றின் மூலம் மிகப் பொருத்தமானஅலகு கிரயத்தை கணிப்பிட்டு கொள்ளக் கூடிய சிறந்த முறை.

கிரயவியலில் ஒவ்வொரு உற்பத்திபொருளிற்கும் அதன் அலகுகிரயம் கணிப்பிடப்படும். அவ் அலகுக் கிரயம் கணிப்படப்பட்டால் மட்டுமே அப்பொருளின் மீது இலாபம் வைத்து விற்பனை விலையை தீர்மானிக்க முடியும். விற்பனை விலையை தீர்மானிக்கப்பட்டாலே அதனை விற்று வருமானத்தை ஈட்டமுடியும். வருமானத்தினை ஈட்டினால் மட்டுமே மீண்டும் உற்பத்தியினை ஆரம்பிக்க முடியும். எனவே ஒரு அலகு கிரயம் கணிப்பிடுவதானது அடிப்படை தேவையாக கிரகவியலில் உள்ளது.

**எல்லைக் கிரகவியல் மற்றும் உள்ளடக்கல் கிரகவியல் நுட்ப முறைகளைப் பயன் படுத்தி இலாபக் கூற்றினைத் தயாரித்தலும், அவ் இலாபங்களை இணக்கம் செய்தலும்.**

உ - ம் :- சியாம் உற்பத்தி நிறுவனத்தின் தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | - 100 அலகுகள் |
| இறுதி இருப்பு | - 200 அலகுகள் |
| உற்பத்தி | - 1000 அலகுகள் |
| விற்பனை | - 900 அலகுகள் |
| விற்பனை விலை | - 200 ரூபா அலகிற்கு |
| நேர் மூலப் பொருள் கிரயம் | - 50 000 |
| நேர் கூலிக்கிரயம் | - 30 000 |
| நேர் ஏனைய கிரயம் | - 20 000 |

(சென்ற ஆண்டு உ/தி கிரயத்திற்கும் , குறித்த ஆண்டு உ/தி கிரயத்திற்கும் இடையில் மாற்றம் இல்லை என எடுகோள் கொள்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மாறும் நிர்வாக மேந்தலை | - 20 000 |
| மாறும் விநியோக மேந்தலை | - 10 000 |
| நிலையான உற்பத்தி மேந்தலை | - 30 000 |
| நிலையான நிர்வாக மேந்தலை | - 10 000 |
| நிலையான விநியோக மேந்தலை | - 10 000 |

**எல்லை கிரய அடிப்படையில் இலாபக் கூற்றை தயாரித்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| விற்பனை | | - (900 × 200) | | - 180 000 |
| **உற்பத்தி கிரயம்** | | | | |
| ஆரம்ப இருப்பு | | (100 × 100) - 10 000 | | |
| நேர் மூலப்பொருள் கிரயம் | | - 50 000 | | |
| நேர் கூலிக் கிரயம் | | - 30 000 | | |
| நேர் ஏனைய கிரயம் | | - 20 000 | - 100 000 | |
| | | | 110 000 | |
| இறுதி இருப்பு (200 × 100) | | | - (20 000) | |
| | | | 90 000 | |
| மாறும் நிர்வாக மேந்தலை | - 20 000 | | | |
| மாறும் விநியோக மேந்தலை | - 10 000 | | 30 000 | |
| | | | | - (120 000) |
| பங்களிப்பு | | | | 60 000 |
| **நிலையான மேந்தலைகள்** | | | | |
| நிலையான உற்பத்தி மேந்தலை | | | - 30 000 | |
| நிலையான நிர்வாக மேந்தலை | | | - 10 000 | |
| நிலையான விநியோக மேந்தலை | | | - 10 000 | (50 000) |
| எல்லை கிரகவியல் இலாபம் | | | | 10 000 |

**உள்ளடக்க கிரகவியல் அடிப்படையில் இலாபக் கூற்றை தயாரித்தல்**

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | - (900 × 200) | | - 180 000 |
| உற்பத்தி கிரயம் | | | |
| ஆரம்ப இருப்பு | (100 × 130) | - 13 000 | |
| நேர் மூலப்பொருள் கிரயம் | - 50 000 | | |
| நேர் கூலிக் கிரயம் | - 30 000 | | |
| நேர் ஏனைய கிரயம் | - 20 000 | | |
| மூலக் கிரயம் | 100 000 | | |
| நிலையான உற்பத்தி மேந்தலை | 30 000 | 130 000 | |
| | | 143 000 | |
| இறுதி இருப்பு (200 × 130) | | (26 000) | - (117 000) |
| மொத்தலாபம் | | | 63 000 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **உற்பத்தியல்லா மேந்தலைகள்** | | |
| மாறும் நிர்வாக மேந்தலை | - 20 000 | |
| நிலையான நிர்வாக மேந்தலை | - 10 000 | |
| மாறும் விற்பனை மேந்தலை | - 10 000 | |
| நிலையான விநியோக மேந்தலை | - 10 000 | (50 000) |
| **உள்ளக்கல் கிரயவியல் இலாபம்** | | 13 000 |

**எல்லை கிரயவியல் மற்றும் உள்ளடக்கல் கிரயவியல் இலாபங்களை இணக்கம் செய்தல்**

| | | |
|---|---|---|
| எல்லை கிரயவியல் இலாபம் | | 10000 |
| இறுதி இருப்பு | - 200 | |
| ஆரம்ப இருப்பு | - 100 | |
| வேறுபாடு | 100 | |
| இருப்பு கிரய வேறுபாடு | 30 | |
| மொத்த வேறுபாடு | - (100 × 30) | 3000 |
| **உள்ளடக்கல் கிரயவியல் இலாபம்** | | 13000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. Ajithkumar
13^C Com (2019)



# இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்கு அல்லது விநியோகத்திற்காக வைத்திருக் கின்ற அல்லது ஏனையவர்களுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது நிர்வாக ரீதியான கருமங்களிற்கு வைத்திருக்கின்ற ஒரு நிதி ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு பயன்படுத்து வதற்கு எதிர்பார்க்கின்ற கட்புலனாகும் சொத்துக்கள் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஆகும்.

**கிரயம்:-**

கிரயம் என்பது ஒரு சொத்து அடையப்படும் போது செலுத்தப்படுகின்ற காசு அல்லது காசிற்கு சமமான தொகை அல்லது விட்டுக் கொடுக்கின்ற சன்மானத்தின் நியாயமான பெறுமதி ஆகும்.

**நியாயமான பெறுமதி:-**

அறிவும் விருப்பமும் உடைய பிரிவினர்களுக்கிடையில் சொத்தொன்றைப் பரிமாற்று வதற்கு அல்லது பொறுப்பு ஒன்றை மீட்பதற்க் இணங்கப்பட்ட பெறுமதி நியாயமான பெறுமதி ஆகும்.

**பெறுமானத் தேய்வு:-**

ஒரு சொத்தினது பெறுமானத் தேய்வடையக் கூடிய தொகையை அதனது பாவனைக் காலம் முழுவதற்கும் என ஒரு முறையாக ஒதுக்கீடு செய்வதாகும்.

**பெறுமானத் தேய்விடக் கூடிய பெறுமதி:-**

சொத்து ஒன்றின் கிரயம் அல்லது கிரயத்திற்கு பதிலாக இனம் காணப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட பெறுமதியில் இருந்து இழிவுப் பெறுமதியைக் கழித்த பின்னர் வரும் பெறுமதி தேய்விடக் கூடிய பெறுமதி ஆகும்.

**கொண்டு செல் பெறுமதி:-**

சொத்து ஒன்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் இருந்து திரண்ட பெறுமானத் தேய்வினையும் திரண்ட இழப்பீட்டு நட்டத்தினையும் கழித்து வருவது முன் கொண்டு செல் பெறுமதி ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இழிவுப் பெறுமதி:-**

சொத்து ஒன்று ஆயுட்கால முடிவில் அதனை விற்பனை செய்தால் தேறும் என எதிர்பார்க்கின்ற தொகையாகும். அதாவது ஆயுட்கால முடிவில் அதனை அகற்றுவதன் மூலம் நிகழ்காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இருந்து சொத்தினை அகற்றுவதற்கு ஏற்படும் என எதிர்பார்க்கின்ற கிரயத்தினைக் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமதி இழிவுப் பெறுமதி ஆகும்.

**பயன்தரு ஆயுட்காலம்:-**

நிறுவனம் ஒன்று சொத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க் கின்ற காலப்பகுதி அல்லது அச் சொத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற வெளியீடு அலகுகளின் எண்ணிக்கை பயன்தரு ஆயுட்காலம் எனப்படும்.

## ஆதனம், பொறி உபகரணத்தை சொத்தொன்றாக இனம் காணல்:-

ஆதனம் பொறி உபகரணத்தை சொத்து ஒன்றாக இனம் காண்பதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

1. குறிக்கப்பட்ட உருப்படி மூலம் பொருளாதார நலன்கள் எதிர்காலத்தினுள் வணிகத்தினுள் உட்பாய்ச்சப்படல் வேண்டும்.
2. அச்சொத்திற்கு ஏற்பட்ட கிரயத்தினை வணிகத்தினால் நம்பகரமாக கணிப்பீடக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**கொள்வனவு செய்யப்பட்ட சொத்தின் கிரயத்தினை தீர்மானித்தல்:-**

கிரயம் என்பது சொத்து ஒன்று அடையப்படும் போது செலுத்தப்படுகின்ற காசு அல்லது காசிற்கு சமமான தொகை அல்லது விட்டுக்கொடுக்கின்ற சன்மானத்தின் நியாயமான பெறுமதி ஆகும். சகல ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களிற்கு ஏற்பட்ட கிரயத்தினை அவை கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்திலே இனம் காணப்பட வேண்டும். இக் கிரயத்தினை 2 வகைப்படுத்தலாம்.

1. ஆரம்பக் கிரயம்
2. பிற்காலத்தில் ஏற்பட்ட கிரயம்

8854(P)

**ஆரம்பக் கிரயம்:-**

ஆதனம் பொறி உபகரணத்தைக் கையேற்பதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட செலவுகள் சொத்தொன்றாகக் கருதி மூலதனமாக்கப்படல் வேண்டும். இச் செலவானது சொத்தொன்றினை உத்தேச பாவனைக்கு பயன்படுத்தும் வரை கட்டாயமாக ஏற்றல் வேண்டும்.

**ஆரம்பக் கிரயம் என்பதனுள் பின்வருவன உள்ளடக்கப்படும்.**

1. கொள்வனவுக் கிரயம் (வியாபாரக்கழிவும் மானியங்களும் கழித்த பின்னர்)
   இறக்குமதி தீர்வை வரி பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற் பதிவு செய்யப்படாத நிறுவனமாயின்), மீளப்பெற்றுக் கொள்ள முடியாத ஏனைய வரிகள், கப்பல் கட்டணம், காப்புறுதிக் கட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சொத்தினை உத்தேச நிலைமைக்கும் இடத்திற்கும் மாற்றும் வரை ஏற்படும் எனக் கருதுகின்ற நேரடியாக ஏற்படுகின்ற கிரயம் ஆகும்.

சொத்து ஒன்றினை நிர்மாணித்தல் தொடர்பான செலவு.

வேலைத் தளத்தினை ஒழுங்குபடுத்தும் செலவு.
போக்குவரத்து மற்றும் இடமாற்றம் செய்யும் செலவுகள்.
பொருத்துதல் மற்றும் ஒன்று சேர்த்தல் என்பவற்றிற்கான செலவுகள்.
ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஏற்படும் தேறிய செலவுகள்
தொழில்சார் கட்டணங்கள்.

3. சொத்தினை ஆயுட்கால முடிவில் பகுதிகளாகப் பொருத்துவதற்கும் அகற்றுவதற்கும் என எதிர்பார்க்கும் கிரயம்.

இந் நியமத்தின் படி ஒரு நிறுவனம் ஆதனம், பொறி உபகரணத்தை முதன் முறையாக இனம் காணப்பட்ட பின்னர் அளவீட்டிற்கு பின்வரும் இரு முறைகளில் ஒன்றை தெரிவு செய்து கொள்ள முடியும்.

1. கிரய மாதிரி
2. மீள்மதிப்பீட்டு மாதிரி

**கிரய மாதிரி:-**

கிரய மாதிரி எனும் பொது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை கிரயப் பெறுமதியில் கணக்கு வைப்பதாகும்.

**மீள்மதிப்பீட்டு மாதிரி:**

சொத்தின் பெறுமதியினை மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் காட்டுவது இம் முறையாகும். நிறுவனங்கள் நிதிக்கணக்கீட்டின் எண்ணக்கரு சட்டகத்தின் முதல் தரப்பண்பான பொருத்த மான தன்மை என்பதற்கமைய சொத்துக்களை மீள்மதிப் பீட்டு பெறுமதியில் காட்டுகின்றது.

சொத்தின் கிரயத்தில் இருந்து திரண்ட தேய்வு கழித்து வரும் பெறுமதிக்கும் மீள்மதிப்பீட்டு பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசம் மீள்மதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் ஆகும். இது ஏனைய முற்றடக்க வருமானத்தில் சீராக்கி காட்டப்படும்.

**மீள் மதிப்பீடு தொடர்பாக கணக்கு பதிவு முறை**

1. ஆதனம் பொறி, உபகரணம் ஒன்று முதன்முறையாக சொத்தின் தேறிய பெறு மதியை விட கூடுதலான பெறுமதிக்கு மீள்மதிப்பீடு செய்யும் போது

**உதாரணம்:-**

01.04.2018 இல் 500000 ரூ. பெறுமதியான காணி ஒன்று 600000 ரூபாவாக மீள்மதிப் பீடு செய்யப்பட்டது. இதற்கான சீராக்கம் பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| காணி கணக்கு வரவு | 100000 ரூ. |
| மீள்மதிப்பீட்டுத் ஒதுக்கக் கணக்கு செலவு | 100000 ரூ. |

100000 ரூபா முற்றடக்க வருமானக் கூற்றில் ஏனைய முற்றடக்க வருமானம் என்பதனுள் காட்டப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆதனம் பொறி உபகரணம் ஒன்றை சொத்தின் தேறிய பெறுமதியை விட குறைந்த பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யும் போது

**உதாரணம்:-**

500000 ரூ. பெறுமதியான காணி 450000 ரூபாவாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| இலாபநட்டக் கணக்கு | வரவு | 50000 ரூ. |
| காணி கணக்கு | செலவு | 50000 ரூ. |

50000 ரூ. ஏனைய செலவு என்பதனுள் காட்டப்படும்.

3. முதன்முறையாக நட்டத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் ஒன்று இரண்டாவது தடவையாக இலாபத்துடன் மீள்மதிப்பீடு செய்யும் போது

**உதாரணம்:-**

01.04.2018 இல் 500000 ரூபா காணி 650000 ரூபாவாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இது முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யும் போது 100000 ரூபா நட்டம் ஒன்றைப் பதிவு செய்திருந்தது.

| | | |
|---|---|---|
| காணி கணக்கு | வரவு | 150000 ரூ. |
| இலாபநட்டக் கணக்கு | செலவு | 100000 ரூ. |
| மீள்மதிப்பீட்டுக் கணக்கு | செலவு | 50000 ரூ. |

இலாபநட்டக் கணக்கில் செலவு என்பது முற்றடக்க வருமானக் கூற்றில் ஏனைய செலவு என்பதில் இருந்து 100000 ரூபா கழித்துக் காட்டப்படல் வேண்டும். 50000 ரூபா ஏனைய முற்றடக்க வருமானத்தில் காட்டப் படல் வேண்டும்.

4. முதல் தடவையாக இலாபத்துடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் ஒன்று இரண்டாவது தடவையாக நட்டத்துடன் மீள் மதிப்பீடு செய்யும் போது

**உதாரணம் 1:-**

01.04.2018 இல் 500000 ரூ. காணி ஒன்று 400000 ரூபாவாக இரண்டாவது தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இது முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யும் போது 150000 ரூ. இலாபம் ஒன்றைப் பதிவு செய்திருந்தது.

| | | |
|---|---|---|
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு | வரவு | 100000 ரூ. |
| காணி கணக்கு | செலவு | 100000 ரூ |

100000 ரூபா ஏனைய முற்றடக்க வருமானத்தில் கழித்துக் காட்டப்படல் வேண்டும்.

**உதாரணம் 2:-**

01.04.2018 இல் 800000 ரூ. காணி ஒன்று இரண்டாவது தடவையாக 725000 ரூபாவாக மீள்மதிப்பீடு செய்தது. ஆனால் இக் காணி முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யும் போது 50000 ரூபா இலாபம் ஒன்றைக் காட்டி இருந்தது.

| | | |
|---|---|---|
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு | வரவு | 50000 ரூ. |
| இலாபநட்டக் கணக்கு | வரவு | 25000 ரூ. |
| காணிக் கணக்கு | செலவு | 75000 ரூ. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய முற்றடக்க வருமானம் என்பதனுள் 50000 ரூ கழித்துக் காட்டப்படும். 25000 ரூ ஏனைய செலவினுள் காட்டப்படும்.

**ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான வெளிப்படுத்தல்கள்:-**

1. மொத்த தேறிய பெறுமானத்தினை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்திய அளவீட்டு அடிப்படை.
2. பயன்படுத்திய பெறுமானத் தேய்வு முறை.
3. பயன்படுத்திய தேய்வு வீதம் அல்லது சொத்தின் பயன்தரு ஆயுட்காலம்.
3. நிதி ஆண்டின் ஆரம்பத்தில் இறுதியிலும் மொத்த தேசிய பெறுமதியும் திரண்ட தேய்வின் அசைவும்.

**உசாத்துணை:**

**ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி**

**கணக்கீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**R.Antanis**
**12c Com (2020)**

# கணக்கீடு அறிமுகம்

**அமெரிக்க கணக்கீட்டுச் சங்கம்:-**

தகவல்கள் தேவைப்படும் பிரிவினர்கள் தீர்மானங்களை / முடிவுகளை எடுப்பதற்கு ஏற்றவாறு பொருளாதாரத் தகவல்களை இனங்காணல். அளவீடு செய்தல், தொடர்பாடல் செய்யும் செயன்முறையே கணக்கீடாகும்.

**அமெரிக்க சான்றுபடுத்திய பொதுக் கணக்காளர் நிறுவனம்:-**

நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் என்பவற்றை விசேட முறையில் பணம் எனும் சாதனத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்வது, வகைப்படுத்துவது, பொழிப்பாக்குவது, பகுப்பாய்வு செய்வது, தொடர்பாடல் செய்வது அச் செயற்பாட்டினால் எழுந்த பெறுபேறுகளை வியாக்கியானம் கூறுவதுமான கலை கணக்கீடு ஆகும்.

**கொடுக்கல் வாங்கல்கள்:-**

இரு பிரிவினர்களுக்கிடையே வளப்பரிமாற்றம் இடம்பெறுபவைகளில் பணத்தினால் அளவிடக் கூடியவைகள் கொடுக்கல் வாங்கல்கள் எனப்படும்.

**மூல ஆவணம்:-**

வணிகங்களில் பல்வேறு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதுடன், அக் கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களை உள்ளடக்கி வழங்கப்படுகின்ற ஆவணம் மூல ஆவணம் எனப்படும்.

**மூல ஏடுகள்:-**

மூல ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு கொடுக்கல் வாங்கல்களை முதன் முதலில் பதிவு செய்யும் ஏடு மூலஏடு எனப்படும்.

**பரீட்சை மீதி:-**

மூல ஏடுகளில் பதிவு செய்த விடயங்களை இரட்டைப்பதிவிற்கமைய பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்து பதிவிற்கமைய பேரேட்டு கணக்குகளில் பதிவுசெய்து பேரேட்டு மீதிகளை உள்ளடக்கியதான தயாரிக்கப்படும் பட்டியல் ஆகும்.

| மூல ஆவணம் | மூல ஏடுகள் |
|---|---|
| 1. பற்றுச்சீட்டு | காசு பெறுவனவு, நாட்குறிப்பேடு |
| 2. கொடுப்பனவுக் கைச்சாத்து | காசு கொடுப்பனவு, நாட்குறிப்பேடு |
| 3. சில்லறைக் காசுக் கொடுப்பனவு கைச்சாத்து | சில்லறைக்காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு |
| 4. கொள்வனவுப் பட்டியல் | கொள்வனவு நாட்குறிப்பேடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5. | விற்பனைப் பட்டியல் | விற்பனை நாட்குறிப்பேடு |
| 6. | வரவுத்தாள் | வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு |
| 7. | செலவுத்தாள் | உட்திரும்பல் நாட்குறிப்பேடு |
| 8. | நாட்குறிப்பு கைச்சாத்து | பொது நாட்குறிப்பேடு |

**உதாரணம்:-**

**கம்சி வணிக நிறுவனத்தின் 2018.02. மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.**

| திகதி | கொடுக்கல் வாங்கல்கள் | தொகை ரூபாவில் |
|---|---|---|
| 01.02 | மூலதனம் | 300000 |
| 01.02 | சில்லறைக் காசாளருக்கு வழங்கியது. | 5000 |
| 03.02 | வங்கிக்கடன் | 100000 |
| 06.02. | விற்பனை | 50000 |
| 07.02 | கொள்வனவு | 30000 |
| 08.02 | ஜனாவிடம் கொள்வனவு | 20000 |
| 10.02 | ஜானுகாவிடம் கொள்வனவு | 50000 |
| 12.02. | விஷானியிடம் விற்பனை | 40000 |
| 13.02 | ஜானுகா இற்கு திருப்பியது | 10000 |
| 14.02 | விஷானி திருப்பியது | 5000 |
| 15.02 | தம்ரோ வணிக நிறுவனத்திடம் தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டது. | 50000 |
| 18.02 | அபிஷா இற்கு விற்பனை | 80000 |
| 19.02 | ஜானாவிற்கு கொடுத்த காசு | 19000 |
| | கழிவு | 1000 |
| 22.02. | விஷானிடம் பெற்ற காசு | 33000 |
| | கழிவு | 2000 |
| 24.02 | மின்சாரம் செலுத்தியது | 5000 |
| 25.02 | ஜானுகாவிடம் கொள்வனவு | 40000 |
| 26.02. | அபிஷா இற்கு விற்பனை | 70000 |
| 27.02 | அபிஷா திருப்பியது | 20000 |
| | அபிஷா பெற்ற காசு | 50000 |
| | கழிவு | 5000 |
| 28.02 | பெற்ற தரகு வருமானம் | 10000 |
| 29.02 | சில்லறைக் காசாளரால் பின்வரும செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| | தபாற்செலவு | 800 |
| | உபகரணச் செலவு | 1000 |
| | எழுதுகருவி | 1200 |

அனைத்து கடன் விற்பனை, கடன் கொள்வனவிற்கு VAT 10% அனுமதிககப்பட்டன.

**வேண்டபப்டுவது**

1. முதன்மை ஏடுகள்
2. பொதுப் பேரேட்டில் பேரேடடுக் கணக்குகளும் பரீட்சைமீதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு

| திகதி | ப.இ | விபரம் | கொ. கழிவு | பெறுமானம் | பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விற்பனை | கடன் பட்டோர் | ஏனைய வருமானம் | ஏனைய பெறுவனவு |
| 01.02 | | மூலதனம் | | 300000 | | | | 300000 |
| 03.02 | | வங்கிக்கடன் | | 100000 | | | | 100000 |
| 06.02 | | விற்பனை | | 50000 | 50000 | | | |
| 22.02 | | விஷானி | 2000 | 33000 | | 33000 | | |
| 27.02 | | அபிஷா | 5000 | 50000 | | 50000 | | |
| 28.02 | | பெற்ற தரகு | | 10000 | | | 10000 | |
| | | | 7000 | 543000 | 50000 | 83000 | 10000 | 400000 |

## காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு

| திகதி | கை. இ | விபரம் | பெற்ற கழிவு | பெறுமானம் | பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கொள்வனவு | கடன் கொடுத்தோர் | ஏனைய செலவீனம் | ஏனைய கொடுப்பனவு |
| 01.02 | | சில்லறைக் காசு | | 5000 | | | | 5000 |
| 07.02 | | கொள்வனவு | | 30000 | 30000 | | | |
| 19.02 | | ஜானா | 1000 | 19000 | | 19000 | | |
| 24.02 | | மின்சாரம் | | 5000 | | | 5000 | |
| | | | 1000 | 59000 | 30000 | 19000 | 5000 | 5000 |

## கொள்வனவு நாட்குறிப்பேடு

| திகதி | கொ. இ | விபரம் | பே. ப | பெறுமானம் | VAT | மொத்த பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|
| 08.02 | | ஜானா | | 20000 | 2000 | 22000 |
| 10.02 | | ஜானுகா | | 50000 | 5000 | 55000 |
| 25.02 | | ஜானுகா | | 40000 | 4000 | 44000 |
| | | பொதுப் பேரேட்டிற்கு மாற்றம் | | 110000 | 11000 | 121000 |

## விற்பனை நாட்குறிப்பேடு

| திகதி | வி. இ | விபரம் | பே. ப | பெறுமானம் | VAT | மொத்த பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|
| 12.02 | | விஷானி | | 40000 | 4000 | 44000 |
| 18.02 | | அபிஷா | | 80000 | 8000 | 88000 |
| 26.02 | | அபிஷா | | 70000 | 7000 | 77000 |
| | | பொதுப் பேரேட்டிற்கு மாற்றம் | | 190000 | 19000 | 209000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்திரும்பல் நாட்குறிப்பேடு

| திகதி | செ. இ | விபரம் | பே. ப | பெறுமானம் | VAT | மொத்த பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|
| 14.02 | | விஷானி | | 5000 | 500 | 5500 |
| 27.02 | | அபிஷா | | 20000 | 2000 | 22000 |
| | | பொதுப் பேரேட்டிற்கு மாற்றம் | | 25000 | 2500 | 27500 |

## வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு

| திகதி | வ. தா. இ. | விபரம் | பே. ப | பெறுமானம் | VAT | மொத்த பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|
| 13.02 | | ஜானுகா | | 10000 | 1000 | 11000 |
| | | பொதுப் பேரேட்டிற்கு மாற்றம் | | 10000 | 1000 | 11000 |

## பொது நாட்குறிப்பேடு

| திகதி | பெ.ந. கை.இ. | விபரம் | பே. ப | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 15.02 | | தளபாடக் கணக்கு | | 50000 | |
| | | தம்ரோ கணக்கு | | | 50000 |
| | | (தம்ரோ வணிக நிறுவனிடத்திடம் தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டது) | | | |

## சில்லறைக்கான கொடுப்பனவு நாட்குறிப்பேடு

| திகதி | கை. இ. | விபரம் | பே. ப | பெறுமானம் | பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தபால் | உபசரணை | எழுதுகருவி |
| 29.02 | | தபால் | | 800 | 800 | | |
| | | உபசரணை | | 1000 | | 1000 | |
| | | எழுதுகருவி | | 1200 | | | 1200 |
| | | | | 3000 | 800 | 1000 | 1200 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசு கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 300000 | சி.காசு | 5000 |
| விற்பனை | 50000 | கொள்வனவு | 30000 |
| க/ப கட்டுப்பாடு | 83000 | க.கொடுநர், கட் | 19000 |
| வருமானம் | 10000 | செலவீனம் | 5000 |
| வங்கிக்கடன் | 100000 | மீ/செ | 484000 |
| | 543000 | | 543000 |
| மீ/வ | 484000 | | |

## சில்லறைக் காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 5000 | தபால் | 800 |
| | | உபசரணை | 1000 |
| | | எழுதுகருவி | 1200 |
| | | மீ/செ | 2000 |
| | 5000 | | 5000 |
| மீ/வ | 2000 | | |

## விற்பனைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 50000 |
| | | க.பட்டோர் | 190000 |
| மீ/செ | 240000 | | |
| | 240000 | | 240000 |
| | | மீ/வ | 240000 |

## கடன்பட்டோர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 190000 | காசு | 83000 |
| VAT | 19000 | கொடுத்த கழிவு | 7000 |
| | | VAT | 2500 |
| | | உட்திரும்பல் | 25000 |
| | | மீ/செ | 91500 |
| | 209000 | | 209000 |
| மீ/வ | 91500 | | |

## மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 300000 |
| மீ/செ | 300000 | | |
| | 300000 | | 300000 |
| | | மீ/வ | 300000 |

## பெற்ற தரகு வருமானக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 10000 |
| மீ/செ | 10000 | | |
| | 10000 | | 10000 |
| | | மீ/வ | 10000 |

## கொடுத்த கழிவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| க/ப கட்டுப்பாடு | 7000 | | |
| | | மீ/செ | 7000 |
| | 7000 | | 7000 |
| மீ/வ | 7000 | | |

## வங்கிக்கடன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 100000 |
| மீ/செ | 100000 | | |
| | 100000 | | 100000 |
| | | மீ/வ | 100000 |

## கடன்கொடுநர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 19000 | கொள்வனவு | 110000 |
| பெற்ற கழிவு | 1000 | VAT | 11000 |
| VAT | 1000 | | |
| வெளித்திரும்பல் | 10000 | | |
| மீ/செ | 90000 | | |
| | 121000 | | 121000 |
| | | மீ/வ | 90000 |

## கொள்வனவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 30000 | | |
| க.கொ. கட்டுப்பாடு | 110000 | | |
| | | மீ/செ | 140000 |
| | 140000 | | 140000 |
| மீ/வ | 140000 | | |

## மின்சாரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 5000 | | |
| | | மீ/செ | 5000 |
| | 5000 | | 5000 |
| மீ/வ | 5000 | | |

## பெற்ற கழிவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | க.கொடுநர், கட் | 1000 |
| மீ/செ | 1000 | | |
| | 1000 | | 1000 |
| | | மீ/வ | 1000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VATக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கடன்கொடுநர் | 11000 | கடன்பட்டோர்.க | 19000 |
| கடன்பட்டோர் | 2500 | கடன்கொடுநர்.கட் | 1000 |
| மீ/செ | 6500 | | |
| | 20000 | | 20000 |
| | | மீ/வ | 6500 |

## உட்திரும்பல்க் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர், கட் | 25000 | மீ/செ | 25000 |
| | 25000 | | 25000 |
| மீ/வ | 25000 | | |

## வெளித்திரும்பல்க் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 10000 | கடன்கொடுநர், கட் | 10000 |
| | 10000 | | 10000 |
| | | மீ/வ | 10000 |

## தளபாடக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| தம்ரோ | 50000 | மீ/செ | 50000 |
| | 50000 | | 50000 |
| மீ/வ | 50000 | | |

## தம்ரோக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 50000 | தளபாடம் | 50000 |
| | 50000 | | 50000 |
| | | மீ/வ | 50000 |

## தபால்க் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சில்லறைக் காசு | 800 | மீ/செ | 800 |
| | 800 | | 800 |
| மீ/வ | 800 | | |

## உபசரணைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சில்லறைக் காசு | 1000 | மீ/செ | 1000 |
| | 1000 | | 1000 |
| மீ/வ | 1000 | | |

## எழுதுகருவிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சில்லறைக் காசு | 1200 | மீ/செ | 1200 |
| | 1200 | | 1200 |
| மீ/வ | 1200 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்சி வணிக நிறுவனத்தின் 2018.02.29ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காசுக் கணக்கு | 484000 | |
| விற்பனைக் கணக்கு | | 240000 |
| மூலதனக் கணக்கு | | 300000 |
| கொடுத்த கழிவுக் கணக்கு | 7000 | |
| கடன்கொடுநர் கணக்கு | | 90000 |
| சில்லறைக் காசுக் கணக்கு | 2000 | |
| கடன்பட்டோர் கணக்கு | 91500 | |
| பெற்ற தரகு வருமானக்க ணக்கு | | 10000 |
| வங்கிக் கடன் கணக்கு | | 100000 |
| கொள்வனவுக் கணக்கு | 140000 | |
| மின்சாரக் கணக்கு | 5000 | |
| VAT கணக்கு | | 6500 |
| வெளிதிரும்பல கணக்கு | | 10000 |
| தம்ரோ கணக்கு | | 50000 |
| உபசரணை கணக்கு | 1000 | |
| பெற்ற கழிவுக் கணக்கு | | 1000 |
| உட்திரும்பல்க் கணக்கு | 25000 | |
| தளபாடக் கணக்கு | 50000 | |
| தபால் கணக்கு | 800 | |
| எழுதுகருவி கணக்கு | 1200 | |
| | 807500 | 807500 |

**உசாத்துணை :- தரம் 12 ஆசிரியர் கைநூல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ.கேமிலன்
க.கஜந்தன்
13D Com (2019)

# இலாப நோக்கற்ற நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள்

அங்கத்தவர்களின் நலன்புரியினையும் சமூக முன்னேற்றத்தினையும் நோக்கமாக கொள்ளும் அமைப்பு இலாப நோக்கற்ற அமைப்பு எனப்படும்.

உ + ம்: - விளையாட்டுக்கழகம்
அமைப்புகள்
இளைஞர் மன்றம்
சமயம் சார் கழகங்கள்

இலாப நோக்கற்ற நிறுவனங்கள் தயாரிக்கும் கணக்குகள்

i. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
ii. அங்கத்தவர் சந்தாகணக்கு
iii. வருமான செலவு கணக்கு
iv. நிதி நிலைமை கூற்று
v. இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் புறச்செயற்பாடுகளின் வருமானக் கூற்று.

இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பிரதான வருமானம் மூலம் அங்கத்தவர் சந்தா என்பதனால் சந்தா கணக்கு ஒன்று தயாரிக்கப்படும்.

அங்கத்தவர் சந்தா கணக்கில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள்

**வருட ஆரம்பதிகதியில்**

நிலுவையாக உள்ள அங்கத்தவர் சந்தா
முற்பணமாக பெற்ற அங்கத்தவர் சந்தா

**வருட இறுதி திகதியில்**

நிலுவையாக உள்ள அங்கத்தவர் சந்தா
முற்பணமாக பெற்ற அங்கத்தவர் சந்தா

வருடத்தில் காசாக கிடைத்த அங்கத்தவர் சந்தா
வருடத்திற்குரிய அங்கத்தவர் சந்தா

### கொள்ளல் கொடுத்தல் கணக்கு

நிதி ஆண்டின் இலாப நோக்கற்ற அமைப்பொன்றின் நிகழ்கால காசு பெறுவனவு கொடுபனவுகளை பொழிப்பாக்கி தயாரிக்கப்படும் கணக்கு கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஆகும்.

இக்கணக்கு காசு அடிப்படையில் தயாரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வருமான செலவு கணக்கு

நிதி ஆண்டின் வருமானம் செலவுகளை உள்ளடக்கி தயாரிக்கபடும் கணக்கறிக்கையே வருமான கூற்றாகும் இது அட்டுறு அடிப்படையில் தயாரிக்கபடும்

இதன் பெறுபெறாக மேலதிகம் / குறைவு ஏற்படும்

### இலாபநோக்கற்ற நிறுவனத்தின் புற செயற்பாடுகள்

இலாப நோக்கற்ற நிறுவனங்கள் தமது முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் நோக்கில் பிரதான நோக்கத்திற்கு மேலதிகமாக இலாப நோக்கத்துடன் சில புற செயற்பாடுகளில் ஈடபடலாம்.

உ + ம்:- விளையாட்டு போட்டி நடாத்தல்

சிற்றுண்டிச்சாலை நடாத்தல்

இவற்றின் பெறுபெற்றை வேறாக கணிப்பிட்டு வருமான செலவு கணக்கில் உள்ளடக்கபடும்.

### ஆயுள்சந்தா/சீவிய சந்தா

அமைப்பென்றின் அங்கத்தவர் தமது நிரந்தர அங்கத்தவத்தை பெற்றுக்கொள்ள ஒரே தடவையில் செலுத்தும் தொகை ஆயுள் அங்கத்துவ சந்தா ஆகும். ஒரே தடவையில் பெற்றுக் கொள்வதால் வருடத்திற்குரிய தொகை வருமானகூற்றிலும் எஞ்சிய தொகை நிதிநிலைமை கூற்றிலும் காட்டப்படும்.

### நன்கொடை

இலாநோக்கற்ற நிறுவனங்களுக்கு பல நன்கொடைகள் கிடைக்க பெறுகின்றன

i. பொது நன்கொடை

ii. விசேட நன்கொடை.

### I. பொது நன் கொடை

பொதுநன்கொடை என்பது நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை நடத்தி செல்வதற்கு கிடைக்க பெறுவதாகும். இது வருமானமாக கருதப்படும்.

இரட்டைபதிவு

கொள்ளல் கொடுத்தல்கணக்க வரவு

வருமான செலவு கணக்கு செலவு

### II. விசேட நன்கொடை

குறிப்பிட்ட நிலையான நடவடிக்கைகாக கிடைக்கப்படும் நன்கொடை விசேட நன்கொடை ஆகும்.

இது வருமானமாக கருதப்படாது.

இரட்டை பதிவு

குறித்த செலவு கணக்கு வரவு

நன்கொடை கணக்கு செலவு

பகுதி பகுதியாக வருமானமாக இனங்காட்டுகையில் இரட்டை பதிவு

நன்கொடை கணக்கு வரவு

வருமான செலவுக்கணக்கு செலவு

8854(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:

கிருசிகா விளையாட்டு கழகமானது அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனை நோக்கமாக கொண்டு வருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு நீச்சல் தடாகம் ஒன்றும் உடற்பயிற்சி நிலையம் ஒன்றும் காணப்படுகிறது.

அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூபா 10000 ஆகும். இது விளையாட்டுக் கழகத்தில் சேரும் போது செலுத்தப்படவேண்டும். எனினும் சந்தாவானது வருடத்தில் உறுப்பினராக இருக்கும் மாதங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வருமானத்தில் இனங்காணப்படுகிறது. 31.03.2017 இல் 105 அங்கத்தவர்கள் காணப்படுவதுடன் உள்ளடக்கம் பின்வருமாறு

| விவரம் | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|
| 01.04.2016 இலுள்ள அங்கத்தவர்கள் | 60 |
| இவ்வருடத்தில் இணைந்த புதிய அங்கத்தவர் | |
| 01.07.2016 இல் | 30 |
| 01.10.2016 இல் | 15 |

01.04.2016இல் சந்தாமுற்பணக் கொடுப்பனவுகள் எதுவும் காணப்படவில்லை என்பதுடன் 31.03.2017 இல் சந்தா நிலுவைகள் எதுவும் காணப்படவில்லை.

விளையாட்டு கழகத்தின் வசதிகளை அங்கத்தவர் அல்லாதோரும் பயன்படுத்த அனுமதிக்கபட்டதுடன் நடைமுறை ஆண்டில் அவர்கள் வசதிகளை பயன்படுத்திய விவரம் பின்வரும்.

| பயன்படுத்திய வழி | நபர் ஒருவருக்கான மாதாந்த கட்டணம் | பயன்படுத்திய நபர்களின் எண்ணிக்கை | பயன்படுத்திய மாத எண்ணிக்கை |
|---|---|---|---|
| நீச்சல் தடாகமும் உடற்பயிச்சி நிலையம் | ரூபா 1000 | 30 | 6 |
| | | 20 | 8 |
| நீச்சல் தடாகமும் உடற்பயிச்சி நிலையம் | ரூபா 500 | 60 | 10 |

மேலும் விளையாட்டுக்கழகமானது வெளித்தரப்பினர் விளையாட்ட விழாக்களை நடாத்துவதற்கு நீச்சல் தடாகத்தினை நளாந்த கட்டணமாக ரூ.150000 இல் வாடகைக்கு விடுகின்றது. இதில் 80% கட்டணமானது முற்பதிவு செய்யும் போது மிகுதி கட்டணமானது விழாக்கள் நடாத்தபடும் நாளிலும் செலுத்தபடல் வேண்டும். இவ்வருடத்தில் இரண்டு விளையாட்டு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் முதலாவது விழா 3 நாட்களும் இரண்டாவது விழா 2 நாட்களும் இடம்பெற்றுள்ளது. மேலும் 08.04.2017 இல் நடாத்தபடவுள்ள விழாவொன்றில் நீச்சல் தடாகத்தைப் பயன்படுத்துவதற்காக 20.03.2017இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடத்தில் ஏற்பட்ட மொத்தச் செலவுகள் ரூ.370000 ஆக இருந்தது இவை காசு மூலம் செலுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு கழக சொத்துக்களின் கொண்டு செல் மீதிகள்

| சொத்துக்கள் | 31.03.2017 (ரூ.'000) | 31.03.2016 (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம்பொறி மற்றும் உபகரணம் | 8500 | 9250 |
| 12% நிலையான வைப்பு | 1500 | .... |
| காசு | ? | 400 |

31.03.2016இல் பொறுப்புக்கள் எதுவுக் காணப்படவில்லை. மேலும் இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எதுவும் பெற்றுக் கொள்ளபடவோ அல்லது அகற்றப்படவோ இல்லை

ஒருவருடத்திற்கான நிலையான வைப்பானது 01.07.2016இல் தொடங்கப்பட்டுள்ளதுடன் இதன் வட்டி ஆனது முதிர்ச்சி கால முடிவில் பெறப்படும்.

வேண்டப்படுவது விளையாட்டுகழகத்திற்கான

31.03.2017இல் முடிவுற்ற வருட காசு கணக்கு

31.03.2017இல் முடிவுற்ற வருடத்தின் வருமான கூற்று

காசுக்கணக்கு (000)

| | | | |
|---|---|---|---|
| மி/வ | 400 | மொத்த செலவுகள் | 1370 |
| சந்தா வருமானம் | 1050 | நிலையான வைப்பு | 1500 |
| நீச்சல் தடாகம் மற்றும் - உடற்பயிற்சி வருமானம் | 640 | மி/செ | 90 |
| விளையாட்டு விழா வாடகை வருமானம் | 870 | | |
| | 2960 | | 2960 |

கிருசிகா விளையாட்டு கழகத்தின்

31.03.2017 முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று (ரூ'000)

| | | |
|---|---|---|
| வருமானங்கள் | | |
| நீச்சல் தடாகம் மற்றும் உடற்பயிற்சி நிலைய வருமானம் | 640 | |
| நீச்சல் தடாக விளையாட்டு விழா வருமானம் | 750 | |
| நிலையான வைப்பு வட்டி | 135 | |
| அங்கத்தவர் சந்தா | 900 | 2425 |
| கழி:- | | |
| ஆதனம் பொறி உபகரண பெறுமதனதெய்வு | | |
| மொத்தச் செலவுகள் | 750 | |
| வருமான மிகை | 1370 | (2120) |
| | | 305 |

**உசாத்துணை நூல்:**

**தரம் 12 கணக்கீடு ஆசிரியர் வழிகாட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K.Paranitharan
13D Com (2019)

# பங்குடைமை வணிகம்

1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளை சட்டத்தின் படி இலாபம் உழைக்கும் நோக்கத் துடன் வணிகம் ஒன்றை நடாத்திச் செல்லும் தனிநபர்களிடை காணப்படும் தொடர்பே பங்குடைமை வணிகம் ஆகும் மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்திற்கு அமையப் பங்குடமை வணிகம் ஒன்றில் காணப்படவேண்டிய பிரதான விடங்க்ளக் சில வருமாறு

* இலாபம் பெறும் நோக்கம்
* தனிநபர் காணப்படவேண்டும்
* வணிக முயற்சியொன்று காணப்படல் வேண்டும்.
* பொது இணக்கப்பாடு ஒன்று இருத்தல் வேண்டும்.

பங்குடைமை வணிகமொன்றில் 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டம், 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டத்தின் 519ஆவது பிரிவு, 1840 ஆம் ஆண்டு 7ம் இலக்க மோசடி தவர்ப்பு கட்டளை சட்டம், 1918ம் ஆண்டு 6ம் இலக்க வணிக பெயர்ப்பதிவுக் கட்டளை சட்டம் என்பன பங்குடைமை வணிகமொன்றில் காணப்படும் சட்டங்கள் ஆகும்.

பங்குடைமை வணிகம் தொடர்பில் ஒப்பந்தம் ஒன்று காணப்படுவது மிகவும் முக்கியமானது ஆகும் எழுத்துமூலம், வாய்மொழிமூலம், பங்காளர் நடத்தை மூலம் ஒப்பந்தங்கள் காணணப்படுகின்றன ஒப்பந்தத்தில் உள்ளடங்க வேண்டிய சில விடங்கள் வருமாறு

* மூலதன பங்களிப்பு முறை
* பங்காளர் இலாப நட்டங்களை பகிர்ந்து கொள்ளும் முறை
* பங்காளர் முகாமைத்துவத்திற்கு பங்களிப்பு செய்யும் முறை
* பங்காளர் சம்பளங்கள் வழங்கப்படும் முறை
* மூலதன வட்டி வழங்கப்படும் முறை
* பங்காளர் வழங்கிய மேலதிக கடன்களுக்கான வட்டி செலுத்தும் முறை
* நன்மதிப்பு பதிவு செய்யும் முறை

பங்குடமை வணிகம் ஒன்றின் எழுத்து மூல ஒப்பந்தம் ஒன்று காணப்படாவிடின் பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவிற்கேற்ப பங்குடைமை தொடர்பான பிரச்சினைகள் தீர்கப்படும் 24ம் பிரிவு சட்டத்தில் உள்ளடங்குபவை சில வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூலதனத்திற்கு எவ்வாறு பங்களிப்பு செய்திருந்தாலும் இலாபநட்டங்களை சரியாக பகிர்ந்து கொள்ளல் வேண்டும்
* மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளர் வழங்கியுள்ள கடன்களுக்கு ஆகக்குறைந்த வருடாந்த வட்டி 5மூ ஆகும்.
* நிருவாக நடவடிக்கைகளில் சகல பங்காளர்களும் ஈடுபட வேண்டும் என்பதனுடன் அதற்காக சம்பளம் பெறும் உரிமையல்லை
* மூலதனத்திற்கு வட்டி பெற உரிமையில்லை
* பங்குடைமை வணிகத்தின் செலவொன்றைப் பங்காளர் தனிப்பட்ட முறையில் செலுத்தி இருந்தால் அத்தொகை மீள வழங்கப்படல் வேண்டும்.

1890ம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 42ம் பிரிவின் படி பங்குடமையில் இருந்து ஓய்வுபெறும் அல்லது விலகிச் செல்லும் அல்லது மரணிக்கும் பங்காளர்களின் உரிமைப் பங்காளர்களானது உரிய திகதியில் செலுத்தப்படாதுவிடின் அத்திகதியிலிருந்து மீளச்செலுத்தும் திகதி வரையிலான காலத்திற்கு வருடாந்தம் ஆகக் குறைந்தது 5% வட்டி செலுத்தப்படல் வேண்டும். 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 519வது பிரிவின் படி பங்குடைமை வணிகமொன்றில் உச்ச பங்காளர் எண்ணிக்கை 20 பேர்களென வரையறுக்கப்பட்டுள்ளது.

பங்குடமை வணிகத்தில் வருமானக் கூற்று நிதிநிலமைக்கூற்று மூலதனக் கஃகுகள் நடைமுறைக்கஃகுகள் பேரேடுகள் என்பன பேணப்படும்.

பங்குடைமை ஒப்பந்தமொன்று இல்லாதபோது அல்லது பங்குடைமை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத பிரச்சினைகள் ஏதேனும் பங்குடைமை வணிக மொன்றில் ஏற்படுமாயின் அது பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைக் கேற்ப தீர்க்கப்படும்.

பங்குடைமை வணிகத்தில் பங்காளன் ஒருவன் புதிதாக சேரும் போது பங்குடைமையில் உள்ள அனைத்து பங்காளனும் இணக்கம் தெரிவித்தல் வேண்டும். புதிய பங்காளன் பங்குடைமையில் அனுமதிக்கப்படமுன்னர் பங்குடமை பொறுப்புக்களும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் முத்திய பங்காளன் பொறுப்பேற்க மாட்டான் ஆனால் பங்காளரிடையே ஒப்பந்தத்தில் வேறுவிதமாக கூறப்பட்டு இருப்பின் அதற்கு இவ்வடிவங்கள் ஏற்புடையது அல்ல. பங்குடமை வணிகத்திற்கு நன்மதிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. செயற்படு நிறுவனம் ஒன்றில் அதன் முழுமையான தேறிய சொத்துக்கள் பெறுமதிக்கும் அதன் தனித் தனி சொத்துக்களின் தேறிய பணமாக்கற்ற பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு நன்மதிப்பு என்று அழைக்கப்படுகின்றது.

இயங்கி வரும் பங்குடமை வணிகம் ஒன்றில் பங்காளர் ஓய்வுபெறும் சந்தர்ப்பங்கள் பங்காளர் அனைவரினதும் விருப்பத்தின் அடிப்படையில், பங்குடைமை ஒப்பந்த சரத்துக்கள் அடிப்படையில் குறித்த ஒரு பங்காளர் ஏதேனும் ஒரு காரணத்தால் ஓய்வு பெறுவது பற்றி தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தினை ஏனைய பங்காளர்களிற்கு தெரியப்படுத்தி சந்தர்ப்ப அடிப்படையில் ஓய்வு பெறுவர். பங்காளர் ஓய்வுபெறும் இடத்து ஓய்வு பெறும் பங்காளர் பங்குடைமையில் கொண்டுள்ள நிதிரீதியிலான உரிமையை மதிப்பிடப்பட்டு உரியவாறு ஏனைய பங்காளர்களினால் ஓய்வுபெறும் பங்காளர்களுக்கு கொடுத்து தீர்க்கப்படல்வேண்டும். இது பங்காளர் கடன் கணங்குகளில் மாற்றப்படுதல் வேண்டும்.

பங்காளர் சேர்தலுக்கான நாட்குறிப்பு பதிவுகள்

01. புதிய பங்காளன் தனக்குரிய நன்மதிப்பு பங்கினை பிரத்தியேத்தமாக காசாக கொண்டு வரல்
காசுக்க/டு வரவு
பழைய பங்காளர் மூலதனக் க/கு செலவு

02. நன்மதிப்புக்களை கணக்கேடுகளில் பதிந்து உடனடியாக அதனை கஃடுகளில் இருந்து பதிவழித்து வருதல்

அ. நன்மதிப்பினை உருவாக்கல்
நன்மதிப்பு க/கு வரவு
பழைய பங்காளர் மூலதனக் க/கு செலவு

ஆ. நன்மதிப்பை பதிவழிக்கும் போது
புதிய பங்குடமை பங்காளர் க/டு வரவு
நன்மதிப்பு க/கு செலவு

3. நன்மதிப்பினை க/குகளில் காட்டாது பங்காளரின் மூலதனக் க/கு ஊடாக சீராக்கல்
புதிய பங்காளர் மூலதனக் க/டு வரவு
பழைய பங்காளர் மூலதனக் க/டு செலவு

4. பங்காளர் ஓய்வு பெறும் போது நாட்குறிப்பு பதிவுகள்
புதிய பங்குடைமை பங்காளர் க/கு வரவு
பழைய பங்குடைமை பங்காளர் க/கு செலவு

உசாத்துணை:
கணக்கியல் ஆசிரியர்
அறிவுரை வழிகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகராஜா சன்சாய்
$12^{D}$ Com 2020)

# இந்த 26 வார்த்தைகள் எவ்வளவு அழகு...!


* A - Appreciation*
மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுங்கள்
* B - Behaviour*
புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்
* C - Compromise*
அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள் மனம் திறந்து பேசி சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள்
* D - Depression*
மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று சோர்வடையாதீர்கள்
* E - Ego*
மற்றவர்களை விட உங்களை உயர்வாக நினைத்துக் கொண்டு கர்வப்படாதீர்கள்
* F - Forgive*
கண்டிக்கக்கூடிய அதிகாரமும் நியாயமும் உங்கள் பக்கம் இருந்தாலும், எதிர்த்தரப்பினரை மன்னிக்க வழி இருக்கிறதா என்று பாருங்கள்
* G - Genuineness*
எந்த விஷயத்தையும் நேர்மையாகக் கையாளுங்கள்
* H - Honesty*
தவறு செய்தால் உடனே மன்னிப்பு கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள்
* I - Inferiority Complex*
எவரையும் பார்த்து பிரமிக்காதீர்கள் நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மையை விடுங்கள்
* J - Jealousy*
பொறாமை வேண்டவே வேண்டாம் அது கொண்டவனையே கொல்லும்
* K - Kindness*
இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்
* L - Loose Talk*
சம்பந்தமில்லாமலும் அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேச வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* M - Misunderstanding*
மற்றவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்
* N - Neutral*
எப்போதும் எந்த விஷயத்தையும், முடிவு எடுத்துவிட்டுப் பேச வேண்டாம். பேசிவிட்டு முடிவு எடுங்கள் நடுநிலை தவறாதீர்கள்
* O - Over Expectation*
அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பு வைக்காதீர்கள் தேவைக்கு அதிகமாக ஆசைப்படாதீர்கள்
* P - Patience*
சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என உணருங்கள்
* Q - Quietness*
தெரிந்ததை மாத்திரமே பேசுங்கள் அநேகப் பிரச்சினைகளுக்குக் காரணம், தெரியாததைப் பேசுவதுதான். கூடுமானவரை பேசாமலே இருந்துவிடுங்கள்
* R - Roughness*
பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டாதீர்கள்
* S - Stubbornness*
சொன்னதே சரி, செய்ததே சரி என பிடிவாதம் பிடிக்காதீர்கள்
* T - Twisting*
இங்கே கேட்டதை அங்கேயும், அங்கே கேட்டதை இங்கேயும் சொல்வதை விடுங்கள்
* U - Underestimate*
மற்றவர்களுக்கும் மரியாதை உண்டு என்பதை மறவாதீர்கள்
* V - Voluntary*
அடுத்தவர் இறங்கிவர வேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சை தொடங்குங்கள் பிரச்சினை வரும்போது எதிர்த்தரப்பில் உள்ளவரின் கருத்துக்களுக்கும் காது கொடுங்கள்
* W - Wound*
எந்தப் பேச்சும் செயலும் யார் மனதையும் காயப்படுத்தாமல் இருக்கட்டும்
* X - Xerox*
நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்படியே மற்றவர்களை நாம் நடத்துவோம்
* Y - Yield*
முடிந்தவரை விட்டுககொடுங்கள். விட்டுக்கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை
* Z - Zero*
இவை அனைத்தையும் கடைப்பிடித்தால் பிரச்சினை என்பது பூஜ்ஜியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



R. Kishan
$13^C$ Com (2019)

# அன்றைய இலங்கை இன்றைய சிங்கப்பூர்

தென்காசியாவில் உள்ள ஒரு தீவு சிங்கப்பூர் ஆகும். சிங்கப்பூர் பிரித்தானியா கிழக்கிந்திய கம்பனியால் 1819 இல் ஆக்கிரமிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானியர்களால் சிறிது காலம் ஆட்சியில் இருந்த சிங்கப்பூர் மறுபடியும் 1945 இல் ஆங்கிலேயேர் ஆட்சியின் கீழ் பிறகு 1963 இல் மலேசியாவோடு இணைக்கப்பட்டது. ஆகஸ்ட் 09.1965 அன்று கொள்கை வேறுபாட்டுக் காரணமாக மலேசியாவில் இருந்து பிரிந்து விடுதலை பெற்று தனி குடியரசு நாடாக உருவானது.

மிகவும் சிறிய பரப்பளவைக் கொண்ட சிங்கப்பூர் தென்கிழக்கு ஆசியாவில் 704 சதுர கிலோமீற்றர் கொண்ட மிகச் சிறிய நாடாகும். சிங்கப்பூர் என்பது சிங்கத்தின் ஊர் என்ற தமிழ்பொருளைக் கொண்டதாகும். சிங்கப்பூர் என்ற பெயர் சிங்கப்பூரா என்ற மலாய் சொல்லில் இருந்து மருவியதாகும். இங்கு ஏறக்குறைய 52 இலட்சம் மக்கள் வாழ்கின் றார்கள். உலகளவில் ஒரு நாட்டில் அதிக வெளிநாட்டவரைக் கொண்ட நாடுகளில் 6வது இடம் சிங்கப்பூர் ஆகும். இதன் தேசிய மொழி மலாய் ஆகும். சிங்கப்பூரின் அரச கரும மொழிகளாக ஆங்கிலம், மாண்டரின், மலாய், தமிழ் ஆகிய காணப்படுகின்றன.

சிங்கப்பூர் என்றால் சுத்தம் என கூறலாம். அவ்வாறு அந்த நாடு பராமரிப்புக்கு உட்படுத் தப்படுகின்றது. அங்கு விதிக்கப்பட்டுள்ள மக்கள் மீற முடியாத அளவுக்கு கட்டுப்பாடுகளையும் கொண்ட விதிகள் ஆச்சரியத்தை உண்டாக்குகின்றது. இவை தவிர ஆசியாவிலே ஊழல், இலஞ்சம் போன்றவை குறைந்த நாடுகளில் சிங்கப்பூர் முதலிடம் பெறுகிறது. இந்த காலப் பகுதியில் பொருளாதார ரீதியாகவும், வணிக வர்த்தக ரீதியாகவும் செழிப்பு அடைந்துள்ள நாடாகவும், வளர்ச்சி அடைந்துவரும் நாடாகவும் பல நாடுகளுக்கு ஊதாரணமாகவும் திகழ்ந்து வருகின்றது. 1965 இல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்த போது அதற்கு பல சவால்கள் காத்திருந்தது. நிலப் பற்றாக்குறை, வேலையின்மை, வீட்டுப் பற்றாக்குறை மற்றும் இயற்கைவளப் பற்றாக்குறை என பல சவால்களை எதிர்கொண்டது. எதுவும் தன்வசம் இல்லாது சிங்கப்பூர் தன் ஆட்சியைத் தொடங்கியது. சிறந்த அரசியல் தலைமை இருந்தமையால் இல்லாமல் இருந்த எல்லாவற்றையும் செயற்கையாக உருவாக்கி னார்கள். அவர்களின் நாடு முன்னேறுவதற்காக இருந்த ஒரே ஒரு வளம் கடல் வளம் ஆகும். ஆகையால் அதை வளர்ச்சிப்படுத்தி மேம்படுத்தினர். தென்கிழக்காசியாவில் உள்ள நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு நுழைவுத் துறைமுகமாக இருப்பது சிங்கப்பூர் துறைமுகம் ஆகும். சிங்கப்பூரின் சிற்பி, சிங்கப்பூரின் தந்தை என்று அழைக்கப்படுபவர் லீ க்வாள் யூ ஆவார். September 16ம் திகதி 1923 இல் சிங்கப்பூரில் வசதியான சிறந்த குடும்பத்தில் பிறந்தார்.

நாம் வாழும் இலங்கையானது தற்காலத்தில் பல தரப்பட்ட பொருளாதார நடவடிக்கை களில் கைகோத்துள்ளது. தற்போது இலங்கையின் இணக்கப்பாட்டு தேசிய அரசாங்கம் ஆரம் பத்திருக்கும் ஆரம்ப சீர்திருத்த செயற்பாடுகளும் சிங்கப்பூர் ஜனாதிபதி மற்றும் பொருளாதார அபிவிருத்தியை முதன்மையாகக் கொண்டு இலங்கையை பொருளாதார அபிவிருத்தியின் உச்ச நிலைக்கு கொண்டு செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளதாக கௌரவ பிரதமரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரான ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்துள்ளார். சிங்கப்பூருக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அந்த நாட்டு தற்போதைய ஜனாதிபதி போளி டெங் சௌக்டேம் மற்றும் பிரதமர் லீ சி யேந்துவ் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடிய போது பிரதமர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

உபாய வழிமுறை ரீதியாக நோக்கும் போது தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் பூகோள ரீதியாக மிக முக்கிய பின்னணியைக் கொண்டமைந்துள்ள மையால் அதன் ஊடாக உலகளாவிய பொருளாதாரத்தை வெற்றி கொள்வதற்கான அம்சமாக சூழல் தொடர்பாக இந்த சந்திப்பின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையை முழுமையாக அபிவிருத்தி மிக்க நாடாக மாற்றி அமைப்பதற்குத் தேவையான மாற்றுத்திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அதற்காக சிங்கப்பூர் வர்த்தம் மற்றும் கைத்தொழில் அமைச்சும், சிங்கப்பூர் வர்த்தக ஒன்றியமும் இணைந்து ஒழுங்கு செய்த இலங்கை சிங்கப்பூர் வர்த்தக சங்கத்தின் கேள்வி பதில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். சிங்கப்பூரின் ஜென் டெங்லின் ஹோட்டலில் நடைபெற்ற இந்த சந்திப்பில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் நாடுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான புதிய தடையற்ற வர்த்தக உடன் பாட்டில் சிங்கப்பூர் நிறுவனங்கள் பயனடையும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீ சியாங் லூங் கூறி யுள்ளார். இதே போன்று எதிர்வரும் காலங்களிலும் இலங்கை, சிங்கப்பூரின் நல்லுறவு வளர்ந்து இரு நாடுகளும் பயனடையும் என நம்பப்படுகின்றது.

**உசாத்துணை:**
**பொருளியல் நோக்கு**
**வைகறைப் பதிப்பு 5, தை 2016**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.K. Steen Piraveen
$13^{C}$ Com (2019)



# உலக வணிக அமைப்பு

உலக வணிக அமைப்பு (WTO) என்பது ஒரு சர்வதேச நிறுவனம் ஆகும். சர்வதேச மூலதன வணிகத்தினை தாராளமயமாக்கி அதை மேற்பார்வையிடும் நோக்குடன் இந்த அமைப்பு நிறுவப்பட்டது. 1947 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்த ஜீஏடீட (GATT) என்ற வணிகம் மற்றும் கட்டண விகிதத்திற்கான பொது உடன்பாட்டு அமைப்பிற்குப் பதிலாக ஜனவரி 01.1995 ஆம் ஆண்டு முதல் இந்த அமைப்பு அதிகாரபூர்வமாக மர்ரகேஷ் ஒப்பந்தப்படி செயல்படத் தொடங்கியது. உலக வணிக அமைப்பானது அதில் பங்கு பெறும் நாடுகளிடையே நிலவும் வணிகத்தை ஒழுங்குமுறைப்படுத்துகிறது.

பேச்சு வார்த்தைகள் மூலம் வணிக உடன்பாடுகள் செய்து முடிவு காண்பதற்கு ஒரு நிலையான கட்டமைப்பை அது வழங்குகிறது. இந்த அமைப்பு இரு நாடுகளுக்கிடையே எழும் தகராறுகளுக்கு, உலக வணிக அமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் சுமுகமான தீர்வுகாண வழிவகுக்கிறது. இந்த ஒப்பந்தங்களை பங்கு பெறும் நாடுகளின் அரசைச் சார்ந்த பிரதிநிதிகள் கையொப்பமிட்டு அவற்றை அந்நாட்டு நாடாளு மன்றத்தில் ஏற்புறுகி செய்ய வேண்டும்.

இது வரையில் உலக வணிக அமைப்பின் கவனத்தை ஈர்த்த மிகையான விவகாரங்கள் இதற்கு முன்னால் நடந்த முடிவுறாத வணிகப் பேச்ச வார்த்தைகளாகும். அவற்றிலும் குறிப்பாக உருகுலே (1986 - 1994) சுற்றை சார்ந்தவையாகும். இந்த அமைப் பானது தற்போது 2001 ஆம் ஆண்டில் துவங்கிய தோகா மேம்பாட்டுக் கூட்டப் பொருள் அல்லது தோகா சுற்று என்ற வணிக முறைப் பேச்சு வார்த்தைகளில் எடுத்த முடிவுகளை செயல்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இது உலக மக்கள் தொகையில் மிகுதியாக உள்ள நலிந்த நாடுகளின் பங்கேற்பினைச் செழுமைப்படுத்தி சமநிலையில் வாதம் புரிந்து பங்கேற்பதற்கான பெரும் முயற்சியாகும். இருந்தாலும் வேளாண்மை பொருட்களை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மற்றும் எண்ணற்ற ஏழ்மையில் வாழும் குடியாளர் களைக் கொண்ட நாடுகளைிடையே நடந்து வரும் பேச்சு வார்த்தைகளில் அதிகமாக இறக்குமதி செய்யும் காலகட்டங்களில் ஏழைக்குரியானவர்களுக்கு தனி பாதுகாப்பு கவசம் அளிப்பது பற்றிய துல்லியமான செயற்பாட்டிற்கு ஒவ்வாமை இருப்பதனால் வாக்குவாதங்கள் நீண்டுகொண்டே போகின்றன. தற்போது தோகா சுற்றின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது.

தற்போது உலக வணிக அமைப்பில் 153 உறுப்பினர்கள் உள்ளனர். இது உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலான வணிகத்தின் மொத்த அளவின் 95% ஆகும். இந்த வகை அமைப்பில் தற்பொழுது 30 பார்வையாளர்களும் உள்ளனர். அவர்களும் உறுப்பினர் ஆவதற்கு முனைந்து வருகின்றனர். இந்த உலக வணிக அமைப்பு. அதன் செயற்பாடுகளை, அலுவலகப் பணித் தொகுதி கூட்டங்களை அவ் அப்போது செயல்படுத்தி முறைப்படுத்தி வருகிறது. இரண்டாண்டு களுக்கு ஒரு முறை அவர்கள் கூடுவார்கள். இந்த அமைப்பின் உறுப்பினர்களின் ஒரு பொதுக்குழு, கூட்டத்தில் எடுத்த கொள்கை அளவிலான முடிவுகளை செயற்படுத்தி நிர்வாகத் திற்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கு தலைமை தாங்க, அலுவலகப்பணித் தொகுதி கூட்டத்தால் தெரிவு செய்த ஓர் உயரதிகாரி நியமிக்கப்படுவார். உலக வணிக அமைப்பில் தலைமைச் செயலகம் செண்டர் வில்லியம் ரப்பர்ட், ஜெனீவா, சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ளது.

உலக வணிக அமைப்பில் கீழே கொடுக்கப்பட்டவை மிகவும் முக்கியமானதாக ஆராட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

- முடிவெடுத்த ஒப்பந்தங்களை நடைமுறையில“ நிறைவேற்றுதல், நிர்வகித்தல் மற்றும் இயக்குதல் போன்வற்றை மேற்பார்வையிடுதல்.
- பேச்சு வார்த்தைகளுக்கான ஒரு சுமுகமான சூழ்நிலையுடன் கூடிய ஒரு மன்றத்தை அளித்து விவகாரங்களை தீர்த்து வைத்தல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

1994 ஆம் ஆண்டில் உலக வணிக அமைப்பு உறுப்பினர்கள் மர்ரகேஷ் ஒப்பந் தத்தில் கையிட்ட “இறுதி சட்டம்” என்ற தலைப்பின் கீழ் வழங்கிய தகராறுகளுக்கு தீர்வு காணல் (DSU) விதிமுறைகள் மற்றும் செயல் முறைகளைப் பற்றி நன்கு புரிந்து கொண்ட தாக தெரிவித்தனர். மற்றும் அதை செயற்படுத்தவும் ஒப்புக்கொண்டனர். தகராறுகளுக்கு தீர்வு காண்பது என்பதை உலக வணிக அமைப்பின் பல வகை வணிக முறைகளை தாங்கிப் பிடிக்கும் நடுவிலமைந்த தூணாகக் கருதுகின்றனர். மற்றும் உலக பொருளாதார வளர்ச்சிக் கான அவர்களுடைய தனி பங்களிப்பாக அதை போற்றுகின்றனர். மேலும் உலக வணிக அமைப்பு உறுப்பினர்கள் அவர்களுடைய கூட்டம் சார்ந்த உறுப்பினர்களுள் யாரேனும் விதிமுறைகளை மீறியதாக நினைத்தால், அவர்களே நேரிடையாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், வணிக அமைப்பின் பலவகை தகராறுகளை தீர்வு காணும் முறையை பின்பற்றி அனுசரிப்பதாக வாக்களித்துள்ளனர்.

உலக வணிக அமைப்பின் தகராறுகளைத் தீர்க்கும் வழிமுறைகளை செயல்படுத்த அதற்கான தனி (DSB) குழுக்கள், மேல்முறையீடு ஆணைக்குழு. உலக வணிக அமைப்பு செயலகம், நடுவர்கள், பிறர், சாரப்பற்ற வல்லுனர்கள் மற்றும் பல தனி நிறுவனங்கள் போன்றவை தேவைப்படுகின்றனர்.

**உசாத்துணை நூல்கள்:-** **K.கருணாகரன்**

**மத்திய வங்கி ஆண்டறிக்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.Sujeevan
12D com (2020)



# தென் ஆசியாவில் உயரமான தாமரைக் கோபுரம்

கொழும்பு நகரத்திற்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரின் கண்ணுக்கும் எட்டிய தூரத்தில் இருந்து தெரியக்கூடியதாக நிர்மாணிக்கப்பட்ட கோபுரமே தாமரைக் கோபுரம் ஆகம். சீமெந்து நிறத்தில் காணப்படும் இக் கோபுரத்தின் கட்டுமானப் பணிகள் முடிவுறாத போதிலும் அது வாளாவ வளர்ந்து நிற்கிறது. இதன் நிர்மாணப் பணிகள் 2012 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அடுத்தாண்டில் அதாவது 2019 இல் இக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய் யப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

- 1500 வாகனங்கள் நிறுத்தக் கூடிய பாரிய தரிப்பிட வசதி
- 50 வானொலி நிலையங்கள்
- 50 தொலைக் காட்சி நிலையங்கள்
- 20 தொலைத் தொடர்பு நிலையங்களுக்கு வசதி

எனப் பல்வேறு வசதிகளைக் கொண்டு தாமரைக் கோபுரமானது நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றது. இக் கோபுரத்தைப் பார்ப்பவர்கள் எப்படி இந்தளவு உயரமாக கட்டப்படுகிறது. இவ்வளவு பெரியதான கோபுரத்தில் ஆட்கள் எப்படி வேலை செய்வார்கள்?, இப்போது உயர மென்ன? இப்பணி எப்போது நிறைவுறும்? இவ்வளவு பெரியதான கோபுரம் ஏன் கட்டப்படு கிறது? இப்படியான பல கேள்விகள் பார்ப்பவர்களின் உள்ளத்தில் உருவாகுவது பொதுவானதே.

இக்கோபுரம் கொழும்பு டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தையில் பேரவாவிக்கு மிக அரு காமையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இக் கோபுரத்தின் உச்சிக்கு சென்றால், நாம் எங்கே நிற்கிறோம், இவ்வளவு பெரியதான உயரமான கட்டடம் சென்றதில்லை என்ற நினைப்பே வரும். இக் கட்டடத்தின் உச்சிக்கு செல்வதற்கு உள்பகுதியில் மின்சார லிப்ட் வசதி செய்யப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் உயரத்திற்கு( லிப்டினூடாக ) செல்வதற்கு சுமார் 2 நிமிடங்களே செல்கின்றன.

இக் கோபுரத்தினூடாக எமது நாட்டுக்குப் புகழ் கிடைப்பதுடன் கொழும்பு நகரின் அழகை மேன்மைப்படுத்தும் கோபுரமாகத் திகழும் உலக ரீதியில் வானத்தைத் தொடும் அளவில் பாரிய உயர் கட்டிடங்கள் கட்டப்பட்டு வரும் அதே நேரத்தில் பிரான்ஸ் பைசா கோபுரம் 324 மீட்டர் உயரமுடையது. ஆனால் தாமரைக்கோபுரத்தின் முழுமையான உயரம் 356.3மீட்டர் ஆகும். இக்கோபுரம் தென்ஆசியாவின் மிக உயரமான கோபுரமாகும். அத்துடன் உலகி லேயே உயரமான கோபுரங்களில் ஒன்றாக இதுவும் காணப்படும். இத் தாமரைக் கோபுரத்தில் முதலாம் மாடியில் வர்த்தகக் கடைத்தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது. மேல் பகுதியில் 400 பேர் அமரக்கூடிய மாநாட்டு மண்டபமும் திருமண வரவேற்பு மண்டபம், ஆடம்பர அறை கள், ஹோட்டல்கள், மற்றும் கவனயீர்ப்பு பார்வையாளர் மண்டபம் உட்பட பூரண வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்ததாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அத்துடன், தொலைத்தொடர்பாடல்கள், அருங் காட்சியகம் மற்றும் உணவு விடுதி போன்றன கோபுரத்தின் அடித்தளத்தில் அமைக் கப்படுகின்றன.

கோபுரத்தின் நிர்மாணப் பணிகளில் சீனருடன் இலங்கை ஊழியர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர். பல்வேறு பரிவர்த்தனை நிலையங்களை கொண்டதாக அமைக் கப்படும். இந்தத் தாமரைக் கோபுரம் ஆசியாவிலேயே மிகவும் உயரமான தாமரை வடிவிலான அமைக்கப்படும் கோபுரமாகவும் திகழவிருக்கின்றது. தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக் குழுவுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும், இந்தத் தாமரைக் கோபுரத் துக்கான ஒதுக்கப்பட்ட மொத்த செலவீனம் 104 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

தற்சமயம் இந்தக் கோபுரத்தின் நிர்மாண வேலைகள் இரண்டு இலட்சம் சதுர அடி அளவில் பூர்த்தியடைந்துள்ளன. எதிர்காலத்தில் இதன் நிர்மாண வேலைகள் வாரத்துக்கு ஐந்து மீட்டர் என்ற அடிப்படையில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இக் கட்டி டத்தின் நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் நிறைவு பெறும் என்று பொறியியலாளர் சிரோ மால் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். சீனாவின் எக்சிப் வங்கியின் நிதியுதவியுடன் 104.3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் தாமரைக்கோபுரம் முற்று முழுதாக நிர்மாணிக்கப்படும் போது 1148.3 அடி உயரத்தையும் 30,600 சதுர மீற்றர் விஸ் தீரணத்தையும் கொண்டதாக அமைந்திருக்கும்.

கடந்த காலங்களில் பல சர்ச்சைகளை உண்டு பண்ணிய இக்கோபுரத்தின் நிர்மாணப் பணிகளுக்குப் பல தடையான ஆதாரங்களும் எதிர்ப்புகளும் உருவாகி மறைந்துள்ளன. இக் கோபுரப் பணியில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 50 பொறியியலாளர்களும் பணி யாற்றுகின்றனர். கட்டிட நிர்மாணத்திற்கு இரும்பு 5000 பொன், கொங்கிறீட் 20,000 கன மீட்டரும் உள்வாங்கப்பட்டுள்ளது. இக் கோபுரத்தின் மேல் பகுதியில் வேலை நடைபெறும் வேளையில் செக்கனுக்கு 12அ வேகத்தில் காற்று வீசினால் வேலைகள் முன்னெடுக்க முடியா மல் தடைப்பட்டு விடும். இக் கோபுரத்தைச் சுற்றிலும் பேரவாவி இருப்பதனால் அத்திவாரப் பகுதியின் ஸ்திரத்திற்கு ஆரம்பக்கட்ட பணிகளுக்கு 4,000 கனமீட்டர் கொன்கிறீட்டும், 400 தொன் இரும்பும் செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பத்து ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய தாக நிர்மாணிக்கப்பட்டு வரும் இத் தாமரைக் கோபுர திட்டத்திற்கு பூங்கா ஒன்றும் அமைக் கப்படும்.

இந்தக் கோபுரம் நிலத்துக்கு கீழ் நான்கு மாடிகளுடன் ஆரம்பமாகிறது. கோபுரத்தின் 85 முதல் 90 வரையிலான மாடிகளுக்கு சுமார் இரண்டே நிமிட குறுகிய நேரத்தில் செல்லக் கூடியதாக இருக்கும். நிலத்துக்கு கீழான நான்கு மாடிகள் நிர்மாணிக்கப்பட்டதும் இந்த கட்டடம் ஒரு சிலிண்டரின் வடிவத்தில் காணப்படும். அது 270 மீட்டர் வரை அதாவது 85 அல்லது 90 மாடிகள் வரை உயரும் தாமரைப் பூவின் வடிவில் வரும் கோபுரத்தில் ஒன்பது மாடிகள் உள்ளடக்கப்படும். இக் கோபுரமானது சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோபுரம் முடிவுற்றால் இலங்கையின் தொடர்பாடல் தொழில் நுட்பம் பன் மடங்காக உயரும் என நம்புகிறேன்.

உசத்துணை:- www.news.maestroies.com

ஆசியாவின் உயரமான தாமரைக் கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



B.Thushanthan
13C com (2019)

# இலங்கையின் காப்புறுதி தொழிலின் அறிமுகம்

இலங்கையில் கோப்பி மற்றும் தேயிலை பெருந்தோட்டக் கைத்தொழிலின் வருகையுடன் காப்புறுதித் தொழில் ஆரம்பமாயிற்று. இக்காலப்பகுதியில் காப்புறுதி துறை பெரும்பாலும் வெளிநாட்டுக் கம்பனிகள் சிலவற்றையே மையமாகக் கொண்டிருந்தது. அதேவேளை "ஏஜென்ஸி ஹவுஸ்" என்று அழைக்கப்பட்ட முகவர் நிறுவனங்களை இலங்கை காப்புறுதித் தொழிலில் பிரவேசித்த நிறுவனங்களில் பிரதானமானவையாக காணப்படுகின்றது. இது பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்ததுடன் வெளிநாட்டு காப்பீட்டாளர்களின் முகவர்களாகவும் செயற்ப்பட்டு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் "ஒரியன்டல் சின்சூரன்ஸ்" கம்பனி "பேர்ள் எசுவரன்ஸ்" போன்ற ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளும் நிறுவப்பட்டிருந்தன.

1958ஆம் ஆண்டில் கம்பனிகள் சட்டம் இயற்றப்பட்டதன் பின்னரே இலங்கையர்களின் காப்புறுதிக் கம்பனிகள் நிறுவப்பட்டன. முதன் முதலாக நிறுவப்பட்ட இலங்கையர்களின் காப்புறுதிக் கம்பனியாக "சிலோன் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட்" விளங்குகின்றது. மூன்றாந்தரப்பு காப்புறுதியைக் கட்டாயமாக்கிய 1938ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்நாட்டு மக்களிடையே காப்புறுதி பற்றிய மேலும் விழிப்புணர்வு ஏற்படலாயிற்று. ஆயினும் அக்காலப்பகுதியில் இலங்கையின் காப்புறுதி வியாபாரத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கின்ற மேற்பார்வை செய்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற எந்தவித திட்டவட்டமான சட்ட கட்டமைப்பும் காணப்படவில்லை.

இலங்கையின் அப்போதைய சோசலிச அரசாங்கத்தில் நிலவிய பொருளாதார கொள்ளைகளுக்கு இணங்க 1961 ஆம் ஆண்டு காப்புறுதிக் கைத்தொழில் தேசியமயமாக்கப்பட்டது. 1961ஆம் ஆண்டு 2ஆம் இலக்க காப்புறுதி கம்பனி சட்டம் நடைமுறைக்கு வந்ததை தொடர்ந்து இலங்கையின் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு 1961இல் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. அதனை தொடர்ந்து 1962ஆம் ஆண்டில் 25ஆம் இலக்க காப்புறுதி கட்டுப்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்டு காப்புறுதி செய்யும் பொது மக்களின் பாதுகாப்புக்காகவும் அவர்களின் நன்மைக்காகவும் காப்புறுதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் செயற்பாடு காணப்பட்டது.

1964 இல் 1963ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்திற்கமைவாக பொதுக் காப்புறுதியும் தேசிய மயமாக்கப்பட்டதுடன் இலங்கையில் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளும் ஒரே காப்பீட்டாளராக செயற்படுவதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரமளிக்கப்பட்டது. இதன்படி காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆனது இலங்கையின் காப்புறுதி ஏகபோக உரிமையை அனுபவித்து வந்தது. பின்னர் 1980ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. இது துணைக்கூட்டுத்தாபனங்களை நிறுவுவதற்கு வழிவகுத்தது.

இதன்மூலம் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆனது அரச ஏகபோக உரிமையை தொடர்ந்து காணப்பட்டதன் மூலம் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கட்டமைப்பானது தனியார் துறை முகவர்களை உள்ளடக்கி காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அதன் கிளை வலை மூலமும் அதிக எண்ணிக்கையான முகவர்கள் மூலமும் வியாபாரங்களைப் பெற்றுக் கொண்ட அதே தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தமது சொந்தக் கிளை வலையமைப்பையும் முகவர்கள் கொண்டிருந்த அதன் பிரதான முகவர்கள் மூலமும் வியாபாரங்களைப் பெற்றுக் கொண்டதாயினும் அவ் மக்கள் கவனம் அவ்வளவாக ஈர்க்கப்படவில்லை. முன்னேற்றகரமான சேவை மற்றும் உரிமைக் கோரிக்கை விரைவாக வழங்குதல் என்பவற்றில் இவ்விரு அரச நிறுவனங்களுக்கு மிடையே போட்டி நிலவுவதன் மொத்த நன்மைகளும் பெற்றுக் கொள்ளப்படுகிறதாயின் காப்புறுதி பற்றி மக்களின் புரிந்து கொள்ளும் தன்மையின் அளவு தொடர்ந்தும் கீழ் நிலையிலேயே காணப்பட்டது. இவ்விரண்டு அரச கூட்டுத்தாபனங்களினதும் ஆயுள் கட்டுப்பண வருமானம் பொருளாதார வளர்ச்சி வேகத்திற்கு நாடாக அமையவில்லை என்பது கண்டறியப்பட்டது. உதாரணமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏகபோக உரிமை அந்தஸ்த்தை அனுபவித்து வந்த காலப்பகுதியில் அதில் ஆயுள் காப்புறுதி செய்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையானது சுமார் 200000 மாகவே காணப்பட்டது. இது அப்போதைய நாட்டின் உழைக்கும் சனத் தொகையின் 3% ஆகும். ஆகவே. தனியார் காப்புறுதிக் கம்பனிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேகமாக மக்களிடையே காப்புறுதி பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தி விடலாம் என்ற கருத்து வலுப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.Senthuran
$12^{C}$ com (2020)



L.Mathushan
$12^{D}$ com (2020)

# இலங்கையின் பொதுவான விடயங்கள்

01) 1875 - கொழும்பு சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது
02) 1893 - முதலாவது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரி மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது.
03) 1966 - உயர் கல்விக்கான தேசிய கவுன்ஸில் 1966ம் ஆண்டு 20ம் இலக்க சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.
04) 1972 - கட்டுப்பெத்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
05) 1972 - சிலோன் பல்கலைக்கழகம் இலங்கை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.
06) 1974 - யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
07) 1980 - இலங்கை திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
08) 1982 - பௌத்தபாளி பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
09) 1986 - மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
10) உலகின் மிகப் பழைய பல்கலைக்கழகமும், முதலாவது பல்கலைக்கழகமும் - போலொக்னா பல்கலைக்கழகம் இத்தாலி (1088)
11) தேசிய கல்வியியல் கல்லூரிகள் - 18
12) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை - 15
13) உலகின் மிகப் பெரிய மலைச்சிகரம் எது?
எவரெஸ்ட்
14) உலகின் முதல் விண்வெளி வீராங்களை?
வலென்மீனா ரெரஸ்கோவ்
15) உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது?
கியூபா
16) மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்?
கிப்போ கிரட்டிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) நத்தை முட்டையின் நிறம் யாது?

மஞ்சள்

18) பின்னோக்கி பறக்கக் கூடிய பறவை?

ஹம்மிங் பேட்

19) உலகின் மிகப் பழமையான விளையாட்டு எது?

நீச்சல்

20) சர்வதேச மது ஒழிப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

ஒக்டோபர் 03

21) முதன் முதலாக முதலாக வெளிவந்த வண்ணத்திரைப்படம் எது?

அலிபாபவும் நாற்பது திருடர்களும்

22) திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் யார்?

G.பபேப்

23) முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு நடாத்தப்பட்ட ஆண்டு?

1871

24) முதன் முதலில் வெளிவந்த செய்தித்தாள் எது?

கொழும்பு ஜேணல்

25) முதலாவது அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு யாது?

1857

26) தேசிய அடையாள அட்டை (NIC) வழங்கும் முறை அறிமுகமான ஆண்டு?

1972

27) கடவுச்சீட்டு வழங்கும் திணைக்களம் எது?

குடிவரவு குடியகல்வு திணைக்களம்

28) உலகில் கூடிய மக்களால் பேசப்படும் மொழி எது?

மண்டாரின் (சீனமொழி)

29) உலகின் முதலாவது பெண் தாதியர் யார்?

புளோரன்ஸ் நைற்றிங்கேள்

30) X - கதிரை கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் யாது?

வில்ஹெம் K.ரண்டஜன்

31) பகற்பொழுதும் இரவுப்பொழுதும் சமனாகக் காணப்படும் தினங்கள்?

மார்ச் 21, செப்ரெம்பர் 23

32) அமெரிக்க இராணுவத் தீர்மானங்களை எடுக்கும் இடம்?

பென்ரகன்

33) மோப்ப சக்தியால் இரைதேடும் பறவை?

கிளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) பீதுருதாலகால மலையின் உயரம் யாது?

2524m உயரம்

35) சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான அறிவிக்க வேண்டிய அவசர தொலைபேசி இலக்கம்? 1929

36) அமெரிக்க நாட்டின் தலைநகரம் எது?

வொஷிங்டன்

37) உலகில் கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம் எது?

ஆபிரிக்கா

38) கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் யாது?

வெள்ளை

39) கிரிக்கெட் விளையாட்டின் தாயகம் யாது?

இங்கிலாந்து

40) தேசப்படங்களில் பெருந்தெருக்களை காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம் யாது? சிவப்பு

41) அதிகளவு புரதத்தைக் கொண்ட உணவு?

சோயா, அவரை

42) கரை வலையில் மீன்கள் அகப்படும் இடம் அழைக்கப்படுவது?

அடி

43) காட்டுக்கோழியின் முட்டையின் நிறம் யாது?

மஞ்சள் நிறத்துடன் கபில நிறப்புள்ளிகள்

44) இலங்கையின் தற்போதைய கல்வி அமைச்சரின் பெயர் யாது?

அகிலவிராஸ் காரியவசம்

45) மனிதன் விளையாடிய முதல் விளையாட்டு?

பந்து விளையாட்டு

46) அமெரிக்க நாட்டின் செய்தி நிறுவனத்தின் பெயர் யாது?

CNN, ரொய்டர்

47) அதி கூடிய காலம் உயிர்வாழும் உயிரினம் எது?

ஆமை

48) இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி?

அநுலா


49) குறிப்பிட்ட பொருள் தரமானது என்பதை தேசிய ரீதியாக உறுதிப்படுத்தி வழங்கப்படும் சின்னம்? SLS

50) குறிப்பிட்டபொருள் தரமானது என்பதை சர்வதேச ரீதியாக உறுதிப்படுத்தி வழங்கப்படும் சின்னம்?

ISO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷெ. சாருஜன் (ICT)
13C Com (2019)

# பணிச் செயல் முறைமைகள் (Operating system)

கணினி வன்பொருட்களையும், பிரயோக மென்பொருட்களையும் முகாமை செய்வதுடன் பயனர் இடைமுகங்களையும் வழங்குகின்ற முறைமை மென்பொருளை பணிச் செயன்முறைமையாகும். கணினி ஒன்றின் தொழிற்பாட்டுக்கு பணச் செயன்முறைமை அவசியமாகும்.

### பயனர் இடைமுகங்கள் (User interfaces)

பயனர்கள் இயந்திரங்களுடன் (சாதனங்கள்) தொடர்பாடலை மேற்கொள்வதற்கு உதவுகின்ற மூலகங்களே இடைமுகங்கள் ஆகும். இது இருவகைப்படும்.

1. வரைவியல் பயனர் இடைமுகம் (GUI)
2. கட்டளைக் கோட்டு இடைமுகம் (CLI)

### வரைவியல் பயனர் இடைமுகம் (Graphical user Interface)

இவை சாளரம் (window), படவுரு (Icon), பட்டி (Menu), சுட்டுவான் (Pointer) போன்ற இலகுவில் கையாளக்கூடிய மூலகங்களைக் கொண்டிருக்கம்.

### கட்டளைக் கோட்டு இடைமுகங்கள்
### Commend Line Interface (CLI)

இவ்வகை இடைமுகங்களில் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் கட்டளைகள் பயன்படுத்தப்படும். இவ்வனைத்து கட்டளைகளையும் ஞாபகம் வைத்திருத்தல் கடினம் என்பதனால் இவ்விடைமுகங்கள் பயன்படுத்துவதற்கு கடினமாகக் காணப்படும்

Cd....
dir.....
mkdir....

### பணச்செயல் முறைமைகளின் வகைகள்
### Types of Operating Systems

1. தனிப்பயனர் - தனிப்பணி (Single user - Single task)
2. தனிப்பயனர் - பல்பணி (Single User - Multi task)
3. பல்பயனர் பல்பணி (Multi user - Multi task)
4. Multi threading
5. நிகழ்நேர பணிச்செயல் (Real Time Operating System)
6. பல்முறைவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிச்செயல்முறைமைகளின் தொழிற்பாடுகள்**

சாதன முகாமைத்துவம் (Device Management)
நினைவக முகாமைத்துவம் (Memory Management)
கோப்பு முகாமை (File Management)
முறைவழி முகாமை (Process Management)
பாதுகாப்பு முகாமை (Security Management)

பயனப் இடைமுகங்களை வழங்கல்
Providing unbar Interface

வரைவியல் பயனர் இடைமுகம் GUI
கட்டளை கோட்டு இடைமுகம் CLI

### கோப்பின் வகைகள்

பல்வேறு வகையான கோப்புக்கள் தரவுகளை சேமிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை சேமிக்கப்படும் தரவுகளுக்கு ஏற்ப பல்வேறு வகைகளாக பாகுபடுத்தப்படுகின்றன.

1. Executable (exe....)
2. Text (.tex, docx)
3. Video (.vob, .mp3...)
4. Audio (.wav, .mp3...)

### கோப்பு சேமித்தல் முகாமைத்துவம் (File Storage Managemant)

பணிச் செயல்முறையினால் கோப்புக்களை சேமிப்பதற்கு தேவையான இடைவெளி சேமிப்புச் சாதனங்களில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

பணிசெயல் முறைமை பின்வரும் மூன்று முறைகளில் இடைவெளியை ஒதுக்குகின்றது.

1. அடுத்தடுத்தான ஒதுக்கீடு
2. இணைக்கப்பட்ட ஒதுக்கீடு
3. சுட்டி ஒதுக்கீடு

### அடுத்து அடுத்தான ஒதுக்கீடு

இம்முறையில் அடுத்து அடுத்து காணப்படும் நினைவுக் கட்டங்களில் (Block) கோப்பு ஒன்று சேமிக்கப்படும்

நன்மைகள்:-

1. இங்கு தொடர், நேரடி அணுகுமுறைகளை மேற்கொள்ள முடியும்
2. வேகமாக கோப்புக்களை அணுக முடியும்.

### கோப்பு முகாமைத்துவம் (File managment)

**கோப்பு** (File) :

தரவுகளை சேமிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற மூலகங்களே கோப்புக்கள் ஆகும். இவை பொதுவாக byte கள் பல சேர்ந்து உருவாக்கப்பட்டிருக்கும் கோப்பு ஒன்று பின்வரும் இரு முறைகளில் நோக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தர்க்க நோக்கு (logical view)
   கோப்பு ஒன்று பயனர்களுக்கு தென்படும் விதமே இதுவாகும்.
2. பௌதீக நோக்கு (physical view)
   சேமிப்பு சாதனங்களால் கோப்பு ஒன்று எவ்வாறு சேமிக்கப்பட்டுள்ளது என்பதே இதுவாகும்.

**கோப்பு ஒன்றின் பண்புகள்**

1. கோப்பின் பெயர்
2. கோப்பின் வகை
3. கோப்பின் உரிமையாளர்
4. துணை சேமிப்பு சாதனத்தில்கோப்பு சேமிக்கப்பட்டிருக்கும் இடம்
5. கோப்பு ஒழுங்கமைப்பு (தொடர், தற்போக்கு பெறுவழி)
6. கோப்பின் அனுமதி
7. உருவாக்கப்பட்ட திகதி
8. கோப்பின் அளவு

**இணைக்கப்பட்ட ஒதுக்கீடு**

இம்முறையில் கோப்பு ஒன்று சேமிக்கப்பட்டிருக்கும் கட்டம் ஒன்றினுள் கோப்பு சேமிக்கப்பட்டிருக்கும் அடுத்த கட்டத்தை குறிப்பிடுவதற்கான இணைப்பு ஒன்று பராமரிக்கப்படும். இவ்முறையில் கோப்பு ஒன்று வெவ்வேறு இடங்களில் பகுதிகளாக சேமிக்கப்பட்டிருக்கலாம்.

**நன்மைகள்**

1. சேமிக்கப்பட்டிருக்கும் கோப்பு ஒன்றின் அளவினை அதிகரிப்பது இலகுவானது
2. வெளியக துண்டமாக்கல் இடம்பெறமாட்டாது

**தீமைகள்**

1. இது நேரடி தற்போக்கு பெறுவழி அணுகுகைகளுக்கு பொருத்தமற்றது.
2. கோப்பு ஒன்று மெதுவாகவே அணுகப்படுகிறது.

**சுட்டி ஒதுக்கிடு**

இம்முறையான கோப்பு ஒன்று உருவாக்கப்படும் போது சுட்டிகளை உள்ளடக்கிய அட்டவணை தயாரிக்கப்படும்.

சேமிக்கப்பட்ட கோப்பிற்கு புதிய கட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படின் இச்சுட்டி அட்டவணை மாற்றியமைக்கப்படும்.

unix பணிச் செயல்முறையில் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

**நன்மைகள்:**

இம்முறையில் கட்டம் ஒன்றை நேரடியாக அணுகிக் கொள்வதால் கோப்புக்கள் வேமாக அணுகப்படும் வெளியக துண்டமாக்கல் காணப்படாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீமைகள்:
கோப்புக்களில் 2/3 கட்டங்கள் ஒதுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சுட்டி அட்டவணைக்காக இன்னொர் கட்டத்தை முழுமையாக ஒதுக்குதல் வினைத்திறன் அற்ற செயற்பாடு ஆகும்.

## கோப்பு முறைமை (File system) :
சேமிப்பு சாதனம் ஒன்றில் கோப்புகளை எங்கு சேமிப்பது, எவ்வாறு சேமிப்பது என்பவற்றை முகாமை செய்கின்ற ஓர் முறைமையே கோப்பு முறைமையாகும்.

வன்தட்டு வடிவமைக்கும் போது இது பயன்படும்

நுப: NTF5
FAT32

### செயல் முகாமைத்துவம் (Process Mangement)

## செயல் (Process)
செயற்பட்டுக் கொண்டிருக்கும் செய்நிரல் ஒன்று செயல் எனப்படும். செயல் ஆனது செய்நிரலில் இருந்து வேறுபட்ட சொற்பதமாகும். செய்நிரல் ஒன்று / ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களைக் கொண்டிருக்கும்.


### செயலின் வகைகள்
1. உள்ளீட்டு வெளியீட்டு பிணைப்புச் செயல்
2. நுண் செயலிபிணைப்பு செயல்

### செயல் நிலைகள் (Process States)
செயல் ஒன்று புதிதாக உருவாக்கப்பட்ட பின்னர் பல நிலைகளுடன் நகர்ந்தே இறுதியில் முடிவுறுத்தப்படும்.

செயல் ஒன்று உட்படக்கூடிய சாத்தியமான 7 நிலைகள் வருமாறு:-
1. புதிய நிலை (New)
2. தயார் நிலை (Ready)
3. ஓடும் நிலை (Ruinning)
4. முடிவுறுத்தல் நிலை (Terminate Exit)
5. தடுக்கப்பட்ட நிலை (Blocked)
6. தடுக்கப்பட்ட/மாற்றப்பட்ட நிலை (Blocked and Swaped)
7. தயார்/மாற்றப்பட்ட நிலை (Ready and Swaped)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




New → செயல் ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையே இதுவாகும்

Ready → செயற்படுத்தலுக்காக பிரதான நினைவகத்தில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் செயல்கள் தயார் நிலையில் காணப்படுகின்றன எனலாம்.

Running → செயற்பட்டுக் கொண்டிருக்கும் செய்நிரல் ஒன்று ஒடு நிலையில் காணப்படுகின்றது எனலாம்.

Exit → ஒரு நிலையில் காணப்பட்ட செயல் ஒன்று நிறைவேற்றி முடிக்கப்பட்டதும் அது இந்நிலைக்கு உட்படும். இதுவே இறுதி நிலை ஆகும்.

Blocked → உள்ளீட்டு வெளியீட்டு சாதன நிகழ்ச்சிகளுக்காக பிரதான நினைவகத்தில் காத்திருக்கும் முறைவழிகள் இந் நிலையில் காணப்படும்.

Block/Swaped → உள்ளீட்டு வெளியீட்டு சாதன நிகழ்ச்சிகளுக்காக துணை நினை வகத்தில் காத்திருக்கும் செயல்கள் இந் நிலையில் காணப்படும்

Ready/Swaped → இந் நிலை துணைவகத்தில் காணப்படும். இந்நிலையில் இருக்கும். செயல் ஒன்று பிரதான நினைவகத்தின் தயார் நிலைக்கு உட்படும்.

**செயல் ஒன்றின் தேவைப்பாடுகள்**

**(Process raguiremants)**

செயல்கள் ஒன்வொன்றும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இருக்கும்

1. செயல் எண்
2. செயற்படுத்தல் குறிமுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செயற்படுத்தலுக்கு தேவையான தரவுகள்
4. செயற்படுத்தும் சந்தர்ப்பம்

**செயல் உருவாக்கம் - Process Creation**

**செயல் ஒன்று புதிதாக உருவாக்கப்படும் சந்தர்ப்பம்**

**Whan a Process is Created:-**

1. பயனர் செய்நிரல் ஒன்றை ஆரம்பிக்கும் போது
2. பணிச் செயன்முறை பயனர்களுக்கு விசேட சேவை ஒன்றை வழங்க செயல்களை உருவாக்கும்
3. செயற்பட்டு கொண்டிருக்கும் செய்நிரல் ஒன்று வேறோர் செயலை உருவாக்கும்

**செயல் முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பம்**

1. சாதாரண முடிவுறுத்தல்
2. செயல் செயற்பாட்டுக்குரிய ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுக்கும் போது
3. செயற்பாட்டுக்கு அவசியமான வளங்கள் கிடைக்காமை
4. செயற்படுத்தல் வழு


**மாய நினைவகம் (Virual memory)**

முதன்மை நினைவகத்தில் (Ram) போதியளவு இடைவெளி காணப்படாத சந்தர்ப்பத்தில் துணை நினைவகத்தில் (வன் தட்டில்) ஒரு பகுதி முதன்மை நினைவகத்துக்காக ஒதுக்கப் படுகிறது.

முதன்மை நினைவகத்திலும் துணை நினைவகத்திலும் சாதனத்தில் ஒதுக்கப்பட்ட இடை வெளியினதும் சேர்மானமே மெய் நிகழ் நினைவகமாகும்.



Virual mamary






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் கற்கும் மாணவர்களுக்கான 200 சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் ஒரு பார்வை



V. Abinayan
12$^{D}$ Com (2020)

**A**

Alternative - மாற்றுப்பயன்பாடு

Asymmetric information - சமச்சீரற்ற தகவல்

Auction - ஏலம்

Abnormal return – அசாதாரண இலாபம்

Assets - சொத்துக்கள்

Accrued payments - அட்டுறு செலவீனங்கள்

Advance Payments – முற்பண செலவீனங்கள்

Adequate – போதுமான அளவு

Assumptions - எடுகோள்கள்

Availability – கிடைக்ககூடிய

**B**

Bias - பாகுபாடு

Budget - பாதீடு

Bankruptcy - கடன் தீர்க்கமுடியாத நிலை

Barriers to entry – உட்பிரவேசிக்க தடை

Barter Method - பண்டமாற்று முறை

Balance Sheet – நிதி நிலமைக்கூற்று

Bank reconciliation statement – வங்கிக்கணக்கிணக்ககூற்று

**C**

Capital Structure - மூலதனக்கட்டமைப்பு

Consumer surplus - நுகர்வோர் மிகை

Consumer Sovereignty – நுகர்வோர் இறைமை

Closed economy - மூடிய பொருளாதாரம்

Complementary Goods – நிரப்புப்பொருட்கள்

Current ratio – நடைமுறை விகிதம்

Compound interest - கூட்டு வட்டி

Consistency – சீரான நிலைப்புத்தன்மை

Creditors – கடன்கொடுத்தோர்

Criteria – அடிப்படை வரையறை

**D**

Direct cost – நேர்க்கிரயம்

Diversification – பிரித்து வைத்தல்

Dividend – பங்கு இலாபம்

Depreciation – பெறுமானத்தேய்வு

Division of Labour – தொழிற்பிரிப்பு

Debtors – கடன்பட்டோர்

Deflation – பணச்சுருக்கம்

Demand Curve – கேள்வி வளையி

**E**

Elasticity of demand – கேள்வி நெகிழ்ச்சி

Entrepreneur – முயற்சியாளர்

Exchange rate – நாணயமாற்று வீதம்

Expected return – எதிர்பார்க்கப்பட்ட வருவாய்

Equity – உரிமை

Expenditures – செலவுகள்

**F**

Factors of production – உற்பத்திக்காரணிகள்

Fiscal Policy – இறைக்கொள்கை

Financial Intermediary – நிதி இடையீட்டு நிறுவனம

Forecasting - எதிர்வுகூறல்

Full employment level – நிறைதொழில் மட்டம்

Frequency distribution- அதிர்வெண் பரம்பல்

Fixed costs – நிலையான செலவுகள்

Flexibility –நெகிழ்வான

Freedom –சுதந்திரம்

**G**

Globalization – உலகமயமாதல்

Good will – நன்மதிப்பு

Gross National Product – மொத்த தேசிய உற்பத்தி

Government Securities – அரச பத்திரங்கள்

Gross profit – மொத்த இலாபம்

Guarantee – உத்தரவாதம்

Generate – உருவாக்குதல்

**H**

Human resource management – மனிதவள முகாமைத்துவம்

Hypothesis – கருதுகோள்

Hire purchasing method – வாடகைக்கொள்வனவு முறை

Hospitality – விருந்தோம்பல்

Hierarchy – (பிரமிட் போன்ற) படிநிலை

Horizontal – கிடையான

Homogenous – ஒரே மாதிரியான

**I**

Income elasticity of demand – வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி

Individuality – தனித்துவமான

Inflation – பணவீக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Infrastructure Facilities – உட்கட்டமைப்பு வசதிகள்
Imports and exports – இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்
Intuitive - உள்ளுணர்வு
Internal rate of return – உள்ளக வருவாய் வீதம்
Intrinsic value – உண்மைப்பெறுமதி
Inferior goods – வசதிப்பண்டம்
Initial point - ஆரம்பபுள்ளி
Inventory – இருப்பு
Innovations – புத்தாக்கம்
Investment – முதலீடு
Intellectual capital – அறிவு சார் மூலதனம்

**J**

Joint venture – கூட்டு முயற்சி நிறுவனம்
Just in time – உடன் வந்தது உடன் வெளியே
Journal - நாளேடு
Job enlargement – வேலை விரிவாக்கம்
Job empowerment - ஊழியர்களுக்கு அதிகாரமளித்தல்
Job enrichment - தொழில் மேம்படுத்தல்

**K**

Kaizen costing - தொடர்ச்சியாக கிரயக்குறைப்பு முறை
Knowledge Capital – அறிவுரீதியான மூலதனம்
Key process – முக்கிய செயல்முறை
Kick out – துரத்துதல்

**L**

Law of supply – நிரம்பல் விதி
Law of Diminishing marginal rate of Return – குறைந்து செல்லும் எல்லை விளைவு வீதி
Labour intensive - ஊழியர் செறிவான
Leverage ratio – நெம்பு விகிதம்
Lump sum – குறிப்பிட்ட தொகை
Liquidity – திரவத்தன்மை
Luxury goods – ஆடம்பரப்பொருட்கள்

**M**

Marginal cost – எல்லை கிரயம்
Monopoly Market – தனியுரிமை சந்தை
Monopolistic competition market – தனியுரிமைப்போட்டி சந்தை
Manufacturing - உற்பத்தி செய்தல்
Mobility – இயக்கம்
Monetary Policy – நாணயக்கொள்கை
Market Equilibrium - சந்தை சமநிலை
Market penetration – சந்தையில் ஊருடுவல்

**N**

Net present value – தேறிய இற்றைப்பெறுமதி
Normative economics – நியமப்பொருளியல்
Neutrality – நடுநிலையான
Negotiable - புரிந்துகொள்ளக்கூடிய
Non - government organization – அரசசார்பற்ற நிறுவனம்
Net profit – தேறிய இலாபம்
Needs & wants – தேவைகளும் விருப்பங்களும்

**O**

Opportunity cost – சந்தர்ப்பச்செலவு
Optimum production – உத்தம உற்பத்தி
Oligopoly – சிலருரிமை
Outsourcing – நிறுவனத்தின் வெளியில் உள்ளதை பயன்படுத்தல்
Ordinary shares – சாதாரண பங்குகள்
Operational Management – செயல்முறை முகாமைத்துவம்
Output – வெளியீடு
Objectives – நோக்கங்கள்
Organizational structure – நிறுவனக்கட்டமைப்பு

**P**

Purchasing – கொள்வனவு செய்தல்
Portfolio – மூதலீட்டு வகைகளின் தொகுதி
Perfect Competition market – நிறைகோட்டி சந்தை
Probability – நிகழ்தகவு
Price discrimination – விலை பேதப்படுத்தல்
Poverty – வறுமை
Procurement – கொள்முதல்
Perceive - உணர
Preference Shares – முன்னுரிமை பங்குகள்
Product possibility curve – உற்பத்தி சாத்திய வளையி
Payables – செலுத்தவேண்டியது
Partnership – பங்குடமை
Predict – எதிர்பார்க்கப்பட்ட
Provisions of bad debt – அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு

**Q**

Quantitative – அளவு ரீதியான
Qualitative – பண்பு ரீதியான
Quarterly – கால் பகுதி
Quick Assets – விரைவு விகிதம்
Qualification – தகைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R**

Reciprocal value – தலைகீழ் பெறுமதி
Resource allocation – வளங்கள் ஒதுக்கீடு
Risk management – இடர் முகாமைத்துவம்
Residual value – எஞ்சிய பெறுமதி
Retail Trade – சில்லறை வியாபாரம்
Raw materials – மூலப்பொருட்கள்
Receivables – வரவேண்டியவை

**S**

Scarcity – அருமை
Scale – அளவு
Shareholders – பங்குதாரர்
Supply Chain Management – நிரம்பலச்சங்கிலி முகாமைத்துவம்
Statistical – புள்ளி விபர
Scenario – சூழ்நிலைகள்
Solvency – தீர்த்தல்
Speculative traders – ஊக வணிகர்
Sustainable growth – நிலைத்துநிற்கும் வளர்ச்சி
Substitute Goods – பதிலீட்டு பொருட்கள்
Secondary Market – இரண்டாம் தரச்சந்தை
Standard deviation – நியம விலகல்
Stimulated – வழங்கவேண்டுமென்று ஒப்புதல் அளிக்கப்பட்ட
Systematic Risk – முறைசார் இடர்
Strategy – தந்திரோபாயம்
Synergy - கூட்டு விளைவு
Simultaneously - ஒரே நேரத்தில்
Social responsibility – சமூக பொறுப்புணர்ச்சி

**T**

Total quantity management (TQM) – மொத்ததர முகாமைத்துவம்
Tangible assets – தொட்டுணரக்கூடிய
Transparency – வெளிப்படைத்தன்மை
Time value of money – பணத்தின் கால மதிப்பு
Treasury bills and bonds – திறைசேரி உண்டியல்களும் முறிகளும்
Traditional economic system – பாரம்பரிய பொருளாதார முறைமை
Theoretical frame work – கோட்பாட்டு கட்டமைப்பு
Trial balance - பரீட்சை மீதி

**U**

Utilization – பயன்பாடு
Uncertainty – நிச்சயமற்ற தன்மை
Unity of command – கட்டளையிடலின் ஒற்றுமை
Unit trust – அலகுப்பொறுப்பாட்சி நிறுவனம்
Update – இற்றைப்படுத்தல்
Uniformity – சீரான
Usage –பயன்பாடு
Unskilled Labour – திறமையற்ற ஊழியர்

**V**

Variable Cost – மாறும் செலவு
Variance – மாறுபாடு
Value added tax (VAT) – பெறுமதி சேர்வரி
Vertical Integration – செங்குத்தான ஒன்றிணைப்பு
Volatility – மாறும்
Vital – முக்கிய
Venture Capital – துணிகர மூலதனம்

**W**

World Trade Organization (WTO) – உலக வியாபார அமைப்பு
Welfare – பொதுநல சேவை
Withholding tax – நிறுத்தி வைத்த வரி
Withdrawals – மீளப்பெறல்
Working Capital – தொழிற்படு மூலதனம்
Wholesaler – மொத்த வியாபாரி
Write off – கடனையோ பெறுமதியற்ற சொத்தையோ கழித்துவிடல்

**X**

X – Efficiency – குறைந்த பட்ச செலவில் அதிக பட்ச உற்பத்தி செய்தல்
X Bar – வரைபின் கிடை அச்சு

**Y**

Yield to maturity (YTM) – முதிர்வு கால உழைப்பு
Year to date (YTD) – ஆரம்பித்த நாள் முதல் இன்றைய நாள் வரை
Y Bar – வரைபின் நிலை அச்சு

**Z**

Z-Score – நியமப்புள்ளி
Zero based budgeting – பூஜ்ஜிய அடிப்படை பாதீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரமதானத்தின் போது









## வணிக மன்ற செயலமர்வு மற்றும் ICBT Campus அனுசரணையுடனான செயலமர்வும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

**எந் நன்றி கொன்றார்க்கும் உண்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொண்டமகர்க்கு**

என்ற வள்ளுவர் பெருந்தொகையின் வாக்கிற்கிணங்க இவ் இதழை வெளியிடுவதற்கு பல தடவைகள் எழுந்த போதிலும் நாம் அவைகளை தகர்த்தெடுத்து இன்று பலரது கைகளிலும் மத்திய வணிகம் சென்றடைய ஆசி வழங்கிய இறைவனுக்கு முதற் கண்நன்றிகள்.

இந் நூலை வெளியிட அனுமதி தந்து ஆசிசெய்தி வழங்கிய எமது வலயக் கல்வி பணிப்பாளர் மற்றும் கல்லூரி அதிபர்க்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

பல இன்னல்கள் மத்தியிலும் அனைவரையும் ஒன்று சேர்ந்து உதவிய பகுதித்தலைவர் இராஜேஸ்வரன் ஆசிரியர் அவர்களுக்கு எமது மன்றத்துக்கு தலைமைதாங்கி இவ்இதழ் இன்று தடம் விட்டு பிரசுரிக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது மன்ற பொறுப்பாளர் திருமதி சி.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் மேலும் பல ஆறிவுரை கூறி வழி நடாத்தி சென்ற சகல வணிக துறை ஆசிரியர்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

இவ் இதழ் வெளிவர தமது ஆக்கங்களை தந்து உதவிய துறைசார் வல்லுனர்கள் மாணவர்களுக்கு எமது நன்றிகள் மேலும் முன்பிரதி பெற்றவர்க்கும் சிறப்பு பிரதி பெற்ற அனைவருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் எமது மத்திய வணிகத்தை அச்சிட்டு உரிய நேரத்தில் தந்து உதவிய எவகிறீன் பிறிண்டேர்ஸ் நிறுவனகத்துக்கும் எமது நன்றிகள்.

மற்றும் இம்மலருக்கு விளம்பரங்களினூடாக நிதி உதவி வழங்கிய அனைத்து விளம்பரகாரர்களுக்கு எமது நன்றிகள்.

**மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைத்திடும்.**

**பொ. சிந்துயன்**
செயலாளர்
வணிக மாணவர் மன்றம்
மத்திய கல்லூரி

**யாழ். மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எவகிறீன் அச்சகம், 693, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org